பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 ஆனி 04 சனிக்கிழமை (18.06.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :204

# மாற்று அரசு அமைப்பது பற்றி ஜே.வி.பி. தீவிரமாக ஆராய்வு!

## ஐ.தே.கட்சியை முன்தள்ள முயற்சி

கொழும்பு,ஜூன்18

ஜனாதிபதி சந்திரிகா தலைமையிலான அரசைக் கவிழ்த்து விட்டு ஐக்கிய தேசியக் கட்சியுடன் சேர்ந்து மாற்று அரசு ஒன்றை அமைப்பதற்கான சாத்தியம் குறித்து ஜே.வி.பி. மும்முரமாக ஆராய்ந்து வருவதாகத் தெரிகின்றது. இது தொடர்பான பேச்சுகளை நடத்த வசதியாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்திப்பதற்கும் அது முயன்று வருகின்றது.

ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துப் பேசுவதற்கான அனுமதியையும் நேரத்தையும் ஜே.வி.பி. கேட்டுள்ளது. அக்கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவரும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் முக்கிய பொறுப்பை வகித்தவருமான ஒருவர் ஐ.தே.கவின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் ஊடாகத் தமது கட்சியின் கோரிக்கையை ரணிலுக்கு அனுப்பியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

தம்மை உதாசீனம் செய்த ஜனாதிபதி சந்திரிகா அம்மையாருக்கு சரியான பாடம் புகட்டும் வகையில் மாற்று அரசு ஒன்றை அமைப்பதில் ஜே.வி.பி. தீவிரம் காட்டுகின்றது என்று அக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசிலிருந்து நேற்றுமுன்தினம் ஜே.வி.பி. வெளியேறியது. புலிகளுடன் அரசு செய்துகொள்ள உத்தேசித்துள்ள பொதுக்கட்டமைப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்தே அது அரசிலிருந்துவெளியேறியது.

உத்தேச பொதுக்கட்டமைப்பை வாபஸ் பெறுவதற்கு கடந்த 15 ஆம் திகதி நள்ளிரவு வரை ஐந்து நாள் கால அவகாசத்தை அக்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## ஹெல்கிஸன் புதனன்றே கிளிநொச்சி வருகின்றார்

கிளிநொச்சி,ஜூன்18

எதிர்வரும் திங்கட்கிழமை கொழும்புவரும் நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கிஸன் எதிர்வரும் புதன்கிழமை வன்னி வருகின்றார்.

அன்று காலை அவர் விடுதலைப் புலிகளின்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## கேணல் பானு மட்டு. திரும்பினார்

கிளிநொச்சி,ஜூன்18

விடுதலைப் புலிகளின் மட்டு. அம்பாறை மாவட்டக் கட்டளைத் தளபதி கேணல் பானு மற்றும் மட்டு. - அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் இளந்திரையன் (மார்ஷல்) ஆகியோர் அடங்கிய போராளிகள் குழு நேற்று மட்டக்

(16 ஆம் பக்கம் பார்க்க)



மட்டுநகர் செல்லும் கேணல் பானு குழுவினர்...

## அரசை விட்டு வெளியேறினாலும் எதிரணியில் அமரமுடியாத நிலை

கொழும்பு,ஜூன்18

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சியில் அமர்வதற்கு ஜே.வி.பியினர் தீர்மானித்தாலும் எதிர்க்கட்சி வரிசையில் ஜே.வி.பியின் ஐந்து உறுப்பினர்கள் மாத்திரமே அமரக்கூடிய நிலைமை இருப்பதாக நாடாளுமன்றச் செயலாளர்நாயகம் பிரியானி விஜேசேகர தெரிவித்திருக்கிறார்.

இதன்படி ஜே.வி.பியின் 39 நாடாளுமன்ற உறுப்பினர்களில் 34 பேர் ஆளுங்கட்சியின் பின்வரிசையில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் என்ற அடிப்படையில் அமர்த்தப்படுவார்களென அவர் மேலும் கூறினார்.

எதிர்வரும் 22 ஆம் திகதி நாடாளுமன்றம் கூடும்போது இந்த ஆசன ஒதுக்கீடு இடம்பெறவுள்ளது. ஏற்கனவே, சபாநாயகர் டபிள்யூ.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## பொதுக்கட்டமைப்பை ஆதரித்து புத்தளத்தில் நேற்று ஆர்ப்பாட்டம்

புத்தளம்,ஜூன்18

பொதுக்கட்டமைப்புக்கு ஆதரவு தெரிவித்தும், சமாதானத்தை வலியுறுத்தியும் புத்தளம் நகரில் நேற்றுப் பெரும் எண்ணிக்கையானோர் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

'எமக்கு யுத்தம் வேண்டாம்!', 'எமக்கு தேவை சமாதானம்!', 'மதவாதம் வேண்டாம்!', 'பொதுக் கட்டமைப்பு எமக்கு வேண்டும்!', போன்ற கோஷங்கள் எழுதப்பட்ட பதாகைகளைத் தாங்கிய வண்ணம் பெரும் எண்ணிக்கையிலான மக்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

போருக்கு எதிரான தேசிய முன்னணி இந்தப் போராட்டத்தை ஏற்பாடு செய்திருந்தது.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## மிதிவெடியில் சிக்கி ஒருவர் படுகாயம்!

யாழ்ப்பாணம்,ஜூன்18

சாவகச்சேரி, மட்டுவில் தெற்கை வசிப்பிடமாகக் கொண்ட 41 வயதுடைய ச.குணராஜ் என்பவர் நேற்று மாலை மிதிவெடியில் சிக்கி இடதுகாலில் படுகாயமடைந்தார். இயற்கைக் கடன் கழிக்கச்சென்றபோதே இவர் மிதிவெடியில் சிக்கினார் என்று கூறப்படுகின்றது. மேற்படி நபர் தற்பொழுது யாழ்.மருத்துவமனையில் சிகிச்சைக்காக - அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஒ-ரி)

## தமிழ்க் கூட்டமைப்பினர் நேற்று நோர்வேத்தூதுவருடன் சந்திப்பு

### பொதுக்கட்டமைப்பு ஏற்பாடு குறித்து ஆராய்வு

கொழும்பு,ஜூன்18

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் குழு நேற்றுக் கொழும்பில் நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கரை சந்தித்து பொதுக் கட்டமைப்பு உடன்பாடு ஏற்படுவதில் உள்ள தடங்கல்கள் குறித்து விரிவாக ஆராய்ந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத்தலைவர் இரா.சம்பந்தன், ஜோசப் பரராஜசிங்கம், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வம் அடைக்கலநாதன், என். ஸ்ரீகாந்தா ஆகியோரே நோர்வேத் தூதுவரைச் சந்தித்தனர்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## கல்லடியில் தாக்குதல்: இருவர் காயம்!

மட்டக்களப்பு,ஜூன்18

மட்டக்களப்பு, கல்லடிப் பகுதியில் நேற்றுப் பிற்பகல் 4.15 மணியளவில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவமொன்றில் புளொட் அமைப்பைச் சேர்ந்தவரான சதாசிவம் சித்திரவேல் (வயது-32) என்பவரும் அவருக்குப் பாதுகாப்பாகச் சென்றவரான சியம்பலா வடகமகே சுமதிதிலக (வயது-36) என்ற பொலீஸ் கான்ஸ்டபிளும் காயமடைந்தனர்.

இவர்கள் இருவரும் டிராக்டரில் சென்றுகொண்டிருந்த போது, இனம்தெரியாத சிலர் கிரனேட் வீசியும் துப்பாக்கியால் சுட்டும் தாக்குதல் நடத்தினர் என்று கூறப்படுகிறது. (ஒ-ரி)

## இஸ்லாமுக்கு தனி அமைச்சு

கொழும்பு,ஜூன்18

முஸ்லீம் சமய, கலாசார விவகாரங்களுக்குத் தனியான அமைச்சு ஒன்றை ஜனாதிபதி ஏற்படுத்தியுள்ளார்.

இம்மாதம் 14 ஆம் திகதி அரசினால் வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானி அறிவித்தலில் இதுகுறித்து அறிவிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலகம் நேற்று வெளியிட்ட செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## புத்தர் சிலையை அகற்றப் பணிக்கும் உத்தரவுக்கு இடைக்காலத் தடை!

### மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று வழங்கியது

திருகோணமலை நகர பஸ் நிலையத்தில் திடீரென முளைத்த புத்தர் சிலையை அங்கிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு திருகோணமலை நீதிவான் நீதிமன்று விடுத்த உத்தரவுக்கு கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவு விடுத்திருக்கிறது.

மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைமை நீதியரசர் அன்ட்ரு சோமவன்ஸ, நீதியரசர் எஸ்கே. விமலசந்திர ஆகியோரைக் கொண்ட நீதிமன்றமே இந்த இடைக்காலத் தடை உத்தரவை நேற்று விடுத்தது.

திருகோணமலை ஓட்டோச் சங்கச் செய

(16 ஆம் பக்கம் பார்க்க)

## புலனாய்வு அதிகாரி சுட்டுக் கொலை!

திருகோணமலை,ஜூன்18

திருகோணமலை, சேருநுவரப் பகுதியில் பொலீஸ் புலனாய்வுப் பிரிவு அதிகாரியான முத்துபண்டா (வயது-35) என்பவர் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவரால் நேற்றிரவு 7.45 மணியளவில் சுட்டுக்கொல்லப்பட்டார். (ஒ-ரி)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



யாழ். நல்லூர் தேசிய எழுச்சிப் பேரவையும் விடுதலைப் புலிகளின் அரசியல்துறையினரும் இணைந்து நடத்தும் திருநெல்வேலி பாற்பண்ணைக் கிராம மக்களுக்கான நடமாடும் சேவை முகாம் நேற்றுத் திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலயத்தில் ஆரம்பமாகியபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. திருநெல்வேலி சமுர்த்தி வங்கியினால் வழங்கப்பட்ட சுயதொழில் முயற்சிக்கான கடன் நிதியினை யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, யாழ். மாவட்ட மகளிர் அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் கலைவிழி, நல்லூர் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செழியன் ஆகியோர் பயனாளிகளுக்கு வழங்குவதையும் - நடமாடும் சேவையின் மக்களின் குறைகளை அரச அதிகாரிகள், விடுதலைப் புலிகளின் பொறுப்பாளர்கள், போராளிகள் கேட்டறிவதையும் படங்களில் காணலாம். *(படங்கள்: பிரபா)*

# திருநெல்வேலி பாற்பண்ணைப் பகுதியில் கிராமமேம்பாட்டு நடமாடும் சேவை

## இன்றும், நாளையும் தொடர்ந்து நடக்கும்

யாழ்ப்பாணம்,ஜூன்18

திருநெல்வேலி, பாற்பண்ணைப் பகுதி மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் வகையில் யாழ் நல்லூர் தேசிய எழுச்சிப் பேரவையும், தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறையும் இணைந்து நடத்தும நடமாடும் முகாம் நேற்று ஆரம்பமாகியது.

திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலயத்தில் ஆரம்பமாகிய இம்முகாம் இன்றும், நாளையும் நடைபெறும்.

நேற்று இடம்பெற்ற இம்முகாமின் ஆரம்ப நிகழ்வில் பொதுச்சுடரை தமிழீழத் தேசிய எழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர் உமைநேசன், யாழ். மாவட்டப் பதிவாளர் நாயகம் எஸ்.ஈஸ்வரதாசன், நல்லூர் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த ஜீ.மோகன், தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் சூ.சிறில் ஆகியோர் ஏற்றிவைத்தனா.

தொடர்ந்து நடமாடும் சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதில் யாழ் செயலகம் நல்லூர் பிரதேச செயலகம், பிரதேசசபை, தேசிய வீடமைப்பு அதிகாரசபை, இலங்கை மின்சார சேவையின் வடபிராந்திய அலுவலகம் ஆகியவற்றின் உத்தியோகத்தர்கள் இணைந்து செயற்பட்டனர்.

இந்நிகழ்வில் வைத்து திருநெல்வேலி பாற்பண்ணைக் கிராமத்தில் ஜே/114 கிராம சேவகர் பிரிவில், வறுமைக் கோட்டின் கீழுள்ள 10 பயனாளிகளுக்கு திருநெல்வேலி சமுர்த்தி வங்கி சுயதொழில் கடனுதவியை வழங்கியது. யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி சுயதொழில் கடனை வைபவரீதியாக வழங்கினார்.

**இன்றைய முகாமில்...**

முகாமின் இரண்டாவது நாள்சேவைகள் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகும். கல்வி, கலை, கலாசார, விளையாட்டு, பொருளாதார அபிவிருத்தி தொடர்பாக இன்று நடமாடும் சேவை இடம்பெறும். இதில் பிரதேச செயலகம, வங்கிகள், கூட்டுறவுச் சங்கங்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள், பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் ஆகியவற்றின் உத்தியோகத்தர்கள் கலந்துகொள்வர்.

வீடற்றோருக்கான வீடமைப்புக் கடன்கள், உதவிகள், மலசலகூடம், கிணறு அமைப்பதற்கான கடன்கள், உதவிகள் பெற்றுக்கொடுத்தல், சிறு தொழில் ஊக்குவிப்புக் கடன்கள், உதவிகள் விலங்கு வேளாண்மைச் செயற்பாடுகளுககான உதவிகள் பெற்றுக்கொடுத்தல், அரச, தனியார் தொழில்களைப் பெற்றுக்கொள்வதற்கான ஆலோசனைகளும் வழிகாட்டல்களும் வழங்கப்படும்.

கல்வி, கலை, கலாசார, விளையாட்டுத் தொடர்பான முகாமை கலாசார உத்தியோகத்தர்கள், விளையாட்டு உத்தியோகத்தர்கள், தமிழீழ விளையாட்டுத் துறையினர், கலவிக்கழகத்தினா. பல்கலைக்கழக நாடகத்துறையினர், சமூகவியல் துறையினர், அயல்பாடசாலை அதிபர்கள் ஆகியோர் இணைந்து நடத்துவர். (எ-7-202)

# பேரினவாத செயல்களைக் கண்டித்து வடமராட்சியில் திங்களன்று பேரணி

கரவெட்டி,ஜூன்18

ஆழிப்பேரலை நிவாரணம், பொதுக்கட்டுமானத்துக்கான பொதுக்கட்டமைப்புப் போன்றவற்றை எதிர்க்கும் பேரினவாத சக்திகளின் செயல்களைக் கண்டித்து நாளைமறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு வடமராட்சியில் மாபெரும் கண்டப் பேரணி ஒன்று நடத்தப்படவுள்ளது.

கடந்த புதன்கிழமை நெல்லியடி தடங்கன் புளியடி முருகன் ஆலய மண்டபத்தில் நடைபெற்ற சங்கம நிகழ்வில் மேற்படி கண்டனப் பேரணி தொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. வடமராட்சி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் மற்றும் பொது அமைப்புகள் என்பன இணைந்து இந்தப் பேரணியை நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளன.

அன்றையதினம் காலை 9 மணிக்கு திக்கம சந்தியில் ஒன்றுகூடும் மக்கள் அங்கிருந்து ஊர்வலமாக சுப்பர்மடத்தைச் சென்றடைவர்.

அங்கு வைத்து தமிழ்த் தேசியத் தலைவருக்கான மகஜரை கடற்புலிகளின் விசேட தளபதி கேணல் சூசை ஊடாகக் கையளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சுமார் 75 ஆயிரத்திற்கும் அதிகமானோர் இந்தக் கண்டனப் பேரணியில் கலந்து கொள்வர் என எதிர்பார்க்கப்படுகின்றது. (எ-70-203)

## யுனிசெப் அதிகாரி கிளிநொச்சி விஜயம்

கிளிநொச்சி,ஜூன்18

யுனிசெப் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளராக பதவியேற்றுள்ள ஆன் வென்மன் அம்மையார் இன்று கிளிநொச்சி வருகின்றார்.

கொழும்பில் இருந்து ஹெலிமூலம் இன்று காலை கிளிநொச்சி வந்தடையும் அவர் 9.15 மணிக்கு பாரதிபுரம் மகாவித்தியாலயத்துக்குச் சென்று அங்கு மாணவர்கள், ஆசிரியர்களுடன் கலந்துரையாடுவார்.

அதன் பின்னர் 10.45 மணிக்கு விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனைச் சந்தித்துக் கலந்துரையாடுவார். நண்பகல் 12 மணிக்கு அவர் கொழும்பு திருமபுவார். (ஓ-3)

## கொடிகாமத்தில் நேற்று உண்ணாவிரதம்

தென்மராட்சி வர்த்த சங்கங்களின் ஒன்றியத்தின் அழைப்பின்பேரில் பேரினவாதிகளின் நடவடிக்கைகளைக் கண்டித்து நேற்றுக் கொடிகாமம் பஸ் நிலையத்தில் அடையாள உண்ணாவிரதப் போராட்டம் இடம்பெற்றது.

இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் வர்த்தகர்கள், தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்கள் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோரும் பொதுமக்களும் அதிக எண்ணிக்கையில் கலந்துகொண்டனர்.

## பிரதேசசபை ஊழியரின் மறியல் போராட்டம் முடிவுக்கு வந்தது

வலி.கிழக்கு,ஜூன்18

வலி.கிழக்குப் பிரதேசசபைச் செயலாளரின் செயற்பாடுகளைக் கண்டித்து கடந்த இரு தினங்களாக நடத்தப்பட்ட மறியற்போராட்டம் நேற்று மதியத்துடன் முடிவுக்கு வந்தது.

வடபிராந்திய ஐக்கிய தொழிலாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் வலி.கிழக்குப் பிரதேச சபையின் சுகாதாரத் தொழிலாளர்கள், ஆயுள்வேத மற்றும் நூலக ஊழியர்கள் இப்போராட்டத்தில் கலந்துகொண்டனர். உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கே.இராசையா நேற்று மதியம் சம்பவ இடத்திற்குச் சென்று ஊழியர்களுடன் கலந்துரையாடினார். தற்காலிக நடவடிக்கையாகப் பிரதேசசபையின செயலாளரை திணைக்களத்துக்கு மாற்றும் செய்வதோடு, ஊழியர்களின் கோரிக்கை மீள் பரிசீலனை செய்யப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் அங்கு உறுதியளித்தார். அதைத் தொடர்ந்து ஊழியர்களின் போராடடம் கைவிடப்பட்டது. (எ-180-11-86-204)

# ஊடக வளங்கள் பயிற்சி மையத்தை விருத்தி செய்வதற்கு உடன்படிக்கை

## யாழ். பல்கலை - டென்மார்க் கைச்சாத்து

யாழ்ப்பாணம்;ஜூன்18

யாழ். பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி மையத்தின் 2ஆம், 3ஆம் கட்ட நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கான உடன்படிக்கை நேற்றுக் கைச்சாத்திடப்பட்டது. அத்துடன், தொலைக்காட்சி, வானொலி ஆகியவற்றுக்கான கலையகம், ஊடகவியல் மன்ற அறை ஆகியவற்றை அமைப்பதற்கான அடிக்கல் நடும் வைபவமும் நடைபெற்றது.

டென்மார்க் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் தலைவி ரொனி மைக்ஹெல்சன், யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் ஆகியோர் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டதுடன் கட்டடத்துக்கான அடிக்கல்லையும் நட்டுவைத்தனர்.

இதுதொடர்பான வைபவம் நேற்று மாலை ஊடக வளங்கள் பயிற்சி மையத்தில் அதன் பணிப்பாளர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெற்றது.

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ, டென்மார்க் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் தலைவி ரொனி மைக் ஹெல்சன், அதன் பிரதிநிதி ஹென்றிக் குருநெற், பயிற்சி இணைப்பாளர் கலாநிதி எஸ்.அருள் செல்வன், யாழ் பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் இரா.சிவச்சந்திரன், யாழ். பல்கலைக்கழக சமூகவியற்றுறைத் தலைவர் கலாநிதி என். சண்முகலிங்கன் மற்றும் குடாநாட்டுப் பத்திரிகைகளின் ஆசிரியர்கள், பத்திரிகையாளர்கள் இதில கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய டென்மார்க் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் தலைவி ரொனி,

ஊடகவியலாளர்கள் சமூகத்தின் கண்கள் அப்படியான சிறந்த ஊடகவியலாளர்களை உருவாக்குவதில் இந்த நிறுவனம் செயற்படுகின்றமை பெரிதும் மகி சிக்குரியது.

இந்த ஊடக வளஙகள் பயிற்சி மையத்தில் பயிற்சி பெறுபவர்களும், பத்திரிகையாளர்களும், பத்திரிகைகளின் ஆசிரியர்களும் இந்த நிறுவனத்தின் பங்காளிகள். இவர்களின் உதவியுடன்தான இந்த நிறுவனத்தை நடத்தமுடியும். அச்சுத்துறையில் மட்டுமல்ல வானொலி, தொலைக்காட்சி ஆகிய துறைகளுக்கும் இங்கு பயிற்சிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இங்குள்ள ஊடகவியலாளர்களின் கல்வித்துறை, தொழிற்றுறை ஆகியவற்றின் விருத்திக்கு டென்மார்க் அரசு தொடர்நது உதவும் என்றார்.

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் உரையாற்றுகையில்:-

ஜனநாயகத்தைக் காப்பாற்றுவதில் பத்திரிகையாளருக்கு பெரும்பங்கு உண்டு. அத்தகைய பத்திரிகையாளர்களை உருவாக்குவதற்கு இந்தப் பயிற்சி மையம் பெரிதும் உதவும்.

யாழ். பல்கலைக்கழகத்தின் டிப்ளோமாக் கற்கை நெறிகளாக ஆரம்பிக்கப்பட்ட பல துறைகளை பீடங்களுடன் இணைத்து பட்டப் படிப்புக கற்கை நெறிகளாக மாற்றுவதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதேபோல் பத்திரிகையியல்துறைப் பட்டப் படிப்புகளும் விரைவில் ஆரம்பிக்கப்படும் என்றார். (எ-8-7-86)



யாழ். பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி நிலையத்தின் புதிய கட்டடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்றுப் பிற்பகல் யாழ். நகரில் உள்ள சிற்றிஹோல் வளாகத்தில் நடைபெற்றது. துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், டென்மார்க் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் தலைவி ரொனி மைக் ஹெல்சன் ஆகியோர் அடிக்கல் நட்டுவைப்பதையும், அந்த நிகழ்வில் ஊடகவளங்கள் நிலையத்தின் பணிப்பாளர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் உரைநிகழ்த்துவதையும் முதல் மூன்று படங்களில் காணலாம். அடிக்கல் நடுகையைத் தொடர்ந்து ஊடகவளங்கள் பயிற்சி மையத்தின் 2ஆம், 3ஆம் கட்ட நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கான உடன்படிக்கை சிற்றிஹோல் மண்டபத்தில் வைத்துக் கைச்சாத்திடப்பட்டது. பேராசிரியர் சு.மோகன தாஸ், டென்மார்க் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் தலைவி ரொனி மைக் ஹெல்சன் ஆகியோர் உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதை நான்காவது படத்தில் காணலாம். கலைப் பீடாதிபதி பேராசிரியர் இரா.சிவச்சந்திரன், டென்மார்க் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் ஆலோசகர் ஹென்றிக் குருநெற் ஆகியோரும் இந்தப் படத்தில் உள்ளனர். *(படங்கள்: பிரபா)*

# அல்கெய்டா தீவிரவாத அமைப்பின் முக்கிய தலைவர் ஈராக்கில் கைது!

பக்தாத்,ஜுன்18

ஈராக்கில் அல்கெய்டா தீவிரவாத அமைப்பின் முக்கிய தலைவர் ஒருவரை அமெரிக்கப் படையினர் கைதுசெய்துள்ளனர் என அமெரிக்கப் படையின் பேசவல்ல அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

அந்தத் தீவிரவாத அமைப்பின் பிரதான தலைவர்களின் நெருங்கிய தோழரான அபு-தல்ஹா என அழைக்கப்படும் முஹம்மட் ஹாலிப் ஷைகா என்பவரே கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

கைதுசெய்யப்பட்ட தீவிரவாதி ஈராக்கின் வடக்கு நகரான மொசூலில் தடுத்துவைக்கப்பட்டுள்ளார் என்று அந்த அதிகாரி செய்தியாளர் சந்திப்பொன்றின்போது தெரிவித்துள்ளார்.

அண்மைய வாரங்களில் அமெரிக்கப்படையினரும், ஈராக் பாதுகாப்புப் படையினரும் அபு - முஸாப் அல் சர்காவியின் நெருங்கிய நண்பர்கள் எனக் கூறப்படும் பலர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என அமெரிக்கப் படையினர் தெரிவிக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.(க)

## கழிவுகளுடன் வந்த விண்கலம் பசுபிக்கடலில் வீழ்ந்து மூழ்கியது

மொஸ்கோ,ஜுன்18

சர்வதேச விண்வெளி நிலையத்தில் இருந்து கழிவுகளை ஏற்றிக்கொண்டு பூமிக்கு வந்து கொண்டிருந்த ரஷ்யாவின் 'புரோகிரஸ் எம் 52' என்ற சரக்கு விண்கலம் நேற்றுமுன்தினம் அதிகாலை பசுபிக்கடலில் விழுந்து மூழ்கியது.

நியூஸிலாந்துக்கும் தென் அமெரிக்காவுக்கும் இடையில் பசுபிக்கடல் பகுதியில் விழுந்து அந்த விண்கலம் மூழ்கியதாக ரஷ்ய தரைக் கட்டுப்பாட்டு நிலையம் தெரிவித்தது. பூமியின் காற்று மண்டலத்தில் நுழைந்தபோது அந்த விண்கலம் மற்றும் அதிலுள்ள கழிவுகளில் பெரும்பகுதி எரிந்துவிட்டதால், பூமியில் இயற்கைச் சூழலுக்கு அதனால் எந்தப் பாதிப்பும் இருக்காது என்று அதிகாரிகள் உறுதியளித்தனர். (ஓ)

## கோலாலம்பூரில் திருவள்ளுவர் சிலை

மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் திருவள்ளுவரின் சிலை நிறுவப்படுகிறது.

கோலாலம்பூரில் நேற்றுமுதல் நாளை வரை அனைத்துலக முதல் திருக்குறள் மாநாடு நடைபெறுகின்றது. இந்த மாநாட்டில் 30 நாடுகள கலந்துகொள்கின்றன.

மாநாட்டில் மலேசிய நாட்டு அமைச்சர்கள் டத்தோ, சாமிவேலு டத்தோ சாமிநாதன், டத்தோ வீரசிங்கம், முகமது ஈசா, பழனிவேல் ஆகியோர் உரையாற்றுகின்றனர்.

தமிழகத்தில் இருந்து முன்னாள் அமைச்சர் ராம.வீரப்பன், டாக்ரர் ராமதாஸ், ஜி.கே. வாசன், லேனா தமிழ்வாணன் உள்ளிட்ட 100இற்கும் மேற்பட்டோர் பங்கேற்கின்றனர்.

இந்த மாநாட்டில் கன்னியாகுமாரி மாவட்ட வரலாற்றுப் பண்பாட்டு ஆய்வுமையப் பொதுச் செயலர் எஸ். பத்மனாபன் பாராட்டப்படுகிறார். அவர் வள்ளுவர் வரலாறு ஒரு புதிய பார்வை என்ற தலைப்பில் தனது கண்டு பிடிப்புகளை வெளியிடுகிறார். மயிலாடியில் செதுக்கப்பட்ட ஆறரைஅடி உயரம் கொண்ட திருவள்ளுவரின கற்சிலை கோலாலம்பூரில் உள்ள தோட்ட மாளிகையில் நிறுவப்படுகிறது. (ஒ)

# எயிட்ஸ் தடுப்புக்கு தேங்காய் எண்ணெய்

## மருத்துவ ஆய்வில் புதிய தகவல்

கொச்சி,ஜுன்18

தேங்காய் எண்ணெயிலுள்ள லோரிக் அமிலம் எயிட்ஸ் நோயை உண்டாக்கும் வைரஸ் கிருமிகளை கட்டுப்படுத்தும் ஆற்றல் கொண்டது என்று ஆராய்ச்சிகளில் உறுதிப் படுத்தப்பட்டுள்ளது. ஆசிய பசுபிக் தேங்காய் சமுதாய செயல் இயக்குநர் மருத்துவர் ரத்திமை இதனைத் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து தேங்காய் எண்ணெய் பயன்படுத்தினால் அதிகப்படியான உடல் எடை, உயர் ரத்த அழுத்தம், சர்க்கரை நோய் போன்ற பிரச்சினைகள் ஏற்படும் என்று கருத்துகள் நிலவுகிறது.

ஆனால், சமீபத்தில் நடத்திய ஆய்வில் வெளியான தகவல்கள் முற்றிலும் மாறுபட்டவையாக இருக்கிறது என்று அவர் கூறினார்.


அந்த ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தேங்காய் எண்ணெயில் 40.6 சதவீதம் லோரிக் அமிலம் உள்ளது. இந்த லோரிக் அமிலம் உடலில் இருக்கும் எயிட்ஸ் கிருமிகளை பரவவிடாமல் தடுக்கும் ஆற்றல் கொணடது. இந்த ஆராய்ச்சி குறைந்த நிதியுடன் சிறிய அளவில் நடந்திருக்கிறது. எயிட்ஸை கட்டுப்படுத்தும் ஆற்றல் தேங்காய் எண்ணெய்க்கு உண்டு என்ற விழிப்புணர்வு அதிக அளவில் ஏற்பட்டுவிட்டால் தற்போதைய உற்பத்தி போதுமானதாக இருக்காது.

கடந்த 22 ஆண்டுகளாக 4 கோடியே 40 லட்சம் பேர் உலகம் முழுவதும் எயிட்ஸால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் 72 லட்சம் பேர் ஆசியா - பசுபிக் நாடுகளில் பாதிக்கப்பட்டுள்ளனர். அழகுசாதனப் பொருளாகவும், வலி நிவாரணியாகவும் தேங்காய் எண்ணெய் பயன்படுகிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், ஏற்கனவே அமெரிக்காவைச் சேர்ந்த மருத்துவ விஞ்ஞானி டாக்டர் ஜோன் கபாரா, எயிட்ஸ் பாதித்த சில நோயாளிகளுக்குத் தேங்காய் எண்ணெய் கொடுத்துப் பரிசோதனை செய்து பார்த்துள்ளார். அதே போல் பிலிப்பைன்சிலும் பரிசோதனை நடந்திருக்கிறது. ஆனால், இவர்கள் இருவரும் இது போதாது இன்னும் கூடுதலாக எயிட்ஸ் நோயாளிகளுக்குத் தேங்காய் எண்ணெய் தொடர்ந்து கொடுத்து பரிசோதித்த பிறகே உறுதியாகக் கூறமுடியும் என்று கூறுகின்றனர். (க)

## உலக அரங்கில்



பெரும் கம்பெனிகளில் தீப்பிடித்தால் எப்படி அணைப்பது என விளக்கமுறை பயிற்சியில் சீன தீயணைப்புப் படையினர் ஈடுட்டுள்ளனர்.

# கைதிகளாயிருந்து விடுதலை செய்யப்பட்ட நேபாள அரசியல் தலைவர்கள் தலைமறைவு

காத்மண்டு,ஜுன்18

மன்னர் அரசினால் கைதுசெய்யப்பட்டு பின்னர் நீதிமன்ற உத்தரவுப்படி மீண்டும் விடுதலை செய்யப்படும் அரசியல் தலைவர்கள் தலைமறைவாகி வருகின்றனர் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

விடுதலை செய்யப்படும் தலைவர்கள் உடனடியாக மீண்டும் கைதுசெய்யப்படுவதே இதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நேபாள மக்கள் முன்னணி என்ற கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் அமீக்சர்சான், துணைத்தலைவர் லீலாமணி பொக்கரேல், பொதுச் செயலர் நவராஜ் சுபேதி ஆகியோர் உச்ச நீதிமன்ற உத்தரவுப்படி கடந்த புதன் கிழமை விடுதலை செய்யப்பட்டனர்.

அன்றைய தினமே பாகிஸ்தான் செல்ல விமானத்தில் ஏறியபோ நவராஜ் கைதுசெய்யப்பட்டார். அதே நிலைமை தங்களுக்கு ஏற்படும் என்று அஞ்சி அமீன் சர்சான், லீலாமணி பொக்கரேல் ஆகிய இருவரும் தலைமறை வாகிவிட்டனர்.

சிறையில் மருத்துவ வசதி செய்துதரப்படவில்லை என்று விடுதலையான தலைவர்கள் கூறியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-க)

# அமெரிக்காவில் நேற்று மீண்டும் நிலநடுக்கம்!

லொஸ்ஏஞ்சல்ஸ், ஜுன்18

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தின் வடக்கு பகுதியில் கடந்த 15ஆம் திகதி காலை பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. அந்த நிலநடுக்கம் ரிசடர் அளவில் 7.2 புள்ளிகளாக பதிவானது.

இந்தநிலையில், கலிபோர்னியாவில் நேற்றுக்காலை மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவில் 5.3 புள்ளிகளாக பதிவானது. லொஸ் ஏஞ்சல்ஸ் நகருக்கு 126 கிலோமீற்றர்கள் கிழக்கே யுகைப்பாவில் இந்த நிலநடுக்கம் மையம் கொண்டிருந்தது. நிலநடுக்கத்தில் கட்டடங்கள் அதிர்ந்தன. வீட்டு ஜன்னல் கண்ணாடிகள் உடைந்து நொறுங்கி விழுந்தன. சுனாமி பேரலைகள் எழக்கூடும் என்ற அச்சத்தில் பொதுமக்கள் வீடுகளை விட்டுப் பாதுகாப்பான இடம் தேடி ஓடினார்கள்.

கடந்த 2 நாள்களில் 2 தடவை நிலநடுக்கம் ஏற்பட்டமை அமெரிக்க மக்களை பீதியில் ஆழ்த்தியுள்ளது. கடந்த ஒரே வாரத்தில் 3 முறை கலிபோர்னியாவில் நிலநடுக்கம் ஏற்பட்டு இருப்பது குறிப்பிடத்தக்கது. (ஒ)

# சோனியாவை வழியனுப்பிய விவகாரம்: இந்தியப் பிரதமர் அலுவலகம் விளக்கம்

புதுடில்லி,ஜுன்18

இந்தியக் காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியாகாந்தி சுற்றுப்பயணமாக ரஷ்யா சென்றார். அப்போது விமானநிலையத்திற்குச் சென்று பிரதமர் மன்மோகன்சிங் சோனியாவை வழியனுப்பிவைத்தார்.

இது சர்ச்சையை ஏற்படுத்தி இருக்கிறது.

பிரதமர் 'வழக்கமாக ஜனாதிபதி, துணை ஜனாதிபதி ஆகியோரை வரவேற்க அல்லது வழியனுப்பச் செல்லலாம்.

ஆனால், கட்சித்தலைவர் தேசிய ஆலோசனை குழுத் தலைவர், எம்.பி, ஐக்கிய முற்போக்கு கூட்டணி தலைவர் ஆகிய தகுதிகளைக் கொண்ட சோனியாவை விமானநிலையத்திற்கு சென்று பிரதமர் எப்படி வழியனுப்பலாம்? இது மரபை மீறிய செயல் என்று பா.ஜனதாக் கட்சி குற்றம் சாட்டியது.

இது தொடர்பாக பிரதமர் அலுவலகம் வெளியிட்ட அறிக்கையில் சோனியாகாந்தியை பிரதமர் வழியனுப்பச் சென்றமை அவரது தனிப்பட்ட விடயம் அப்போது அவா பிரதமர் என்ற தகுதியின் அடிப்படையில் வழியனுப்பச் செல்லவில்லை என்று குறிப்பிட்டுள்ளது.

# பொலீஸார் முடக்கிய பணத்தைப்பெற வீரப்பனின் மனைவி மனுத்தாக்கல்

சென்னை,ஜுன்18

வங்கியில் உள்ள பணத்தை எடுக்க அனுமதிக்கக் கோரி சந்தனக்கடத்தல் வீரப்பனின் மனைவி முத்துலட்சுமி சென்னை உயர்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளார்.

அவரது மனுவில் கூறியிருப்பதாவது:-

கடந்த ஆண்டு ஒக்டோபர் 18ஆம் திகதி என் கணவர் வீரப்பனை அதிரடிப்படைப் பொலீஸார் சுட்டுக்கொன்றனர். எனக்கு 2 மகள்கள் உள்ளனர். அவர்கள் படிக்கின்றனர். என் பெயரிலும் என் மகள்கள் பெயரிலும் சேலத்தில் உள்ள மைசூர் வங்கிக் கிளையில் ரூ.3லட்சம் வைப்புச் செய்திருக்கிறேன். என் மகள்களின் படிப்புச் செலவுக்காக அந்தப் பணத்தைத் திருப்பித் தருமாறு வங்கி மேலாளரிடம் நான் கேட்டேன்.

ஆனால், அப்பணத்தைப் பொலீஸார் முடக்கி வைத்திருப்பதால், திருப்பித்தர முடியாது என்று வங்கி மேலாளர் கூறிவிட்டார். எனது பெயரில் வங்கியில் உள்ள பணத்தை முடக்கி வைக்கப் பொலீஸாருக்கு எந்த உரிமையும் கிடையாது. என் பணத்தை வங்கி தராவிட்டால் என் மகள்களின் கல்வி பாதிக்கும். என் பணத்தைத் திருப்பித் தருமாறு உத்தரவிட வேண்டும் என்று மனுவில் முத்துலட்சுமி கூறியுள்ளார்.

உங்கள் விமானப் பயணத்திற்கு!
Aero Lanka
In Domestic Operation
New way of flying



Head office
No.500,Galle Road,
Wellawatte,
Colombo-06
Tel:2505632-3 Fax:2500626
Jaffna office
No.86,PointPedro Road,
Jaffna. Tel:021-2226242
Fax:021-2225600
Branch
No.84,New Market Building
Chavakachcheri
Tel:021-2227979 Fax: 021-2227979
Trinco Office
No.47,Kandy Road,
Trincomalee.
Tel:026-2221519
Fax:026-2221519
யாழ் ⇆ கொழும்பு | யாழ் ⇆ திருகோணமலை ⇆ கொழும்பு

கனடாவில் கற்க வேலைசெய்ய அரிய வாய்ப்பு !
க.பொ.த உயர் தரப்பரிட்சையின் பின் இந்தியாவிலும் கனடாவிலும் Advanced Diploma Programme (BBADegree க்கு சமனானது) in
* International Business * Business Operation * Human Resources Management
By Centennial College Toronto - Canada in collabaration with Vinayaka Missions Chennai - India
கற்கை நெறியின் போது கனடாவின் முன்னணி நிறுவனங்களில் வேலை செய்து வாரமொன்றுக்கு C$375 குறையாமல் சம்பாதிக்கலாம்.
NN CONSULT - 60 [முதல் மாடி] பீற்றர்சன் லேன், வெள்ளவத்தை. கொழும்பு - 06.
தொலைபேசி : 011-5558833, தொலைநகல் : 011-5558844, ஈமெயில் : nnconsult@sltnet.lk

உ
சிவமயம்

# மங்களகரமான திறப்புவிழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பார்த்திப வருஷம் ஆனித்திங்கள் 4ஆம் நாள்
இன்று (18–06–2005) சனிக்கிழமை பகல் 12.30 மணிக்கு வரும் சுபவேளையில்
எமது கிளை நிறுவனமாக
எம்மால் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள

## குமரன் சில்க்ஸ்

எனும் புடைவை வியாபார ஸ்தாபனத்தை திறந்து வைக்கப்படவுள்ளதால்
அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவரும் வருகைதந்து விழாவைச் சிறப்பித்து எம்மை மகிழ்விக்குமாறு
அன்புடன் அழைக்கின்றோம்.

தலைமை நிறுவனம்: (36641) (24-21-16-18)

**இல.31, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.**

இல.181. நவீன சந்தை உட்புறம்,
யாழ்ப்பாணம்.

தங்கள் நல்வரவை நாடும்:
திரு.கி.பாஸ்கரன்
உரிமையாளர்.


திக்கம் வடிசாலை நஷ்டம்

# அமைச்சர்கள் நிதிமோசடி செய்ததாகக் கூறவில்லை

## சமாசத் தலைவர் விளக்கம்

யாழ்ப்பாணம், ஜூன்18

'அமைச்சர்களின் பண மோசடிகளால் திக்கம் வடிசாலை நஷ்டமடைந்தது - சமாசத் தலைவர் தெரிவிப்பு' என்று தலைப்பிட்டு ஜூன் 13ஆம் திகதி உதயனில் இரண்டாம் பக்கத்தில் வெளியாகிய செய்தி தொடர்பாக -

வடமாகாண தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் கி.தவராசா மறுப்பு அறிக்கை ஒன்றை உதயனுக்கு அனுப்பி வைத்திருக்கின்றார்.

திக்கம் வடிசாலையில் இடம்பெற்றுவரும் ஊழியர் போராட்டம் தொடர்பாக சமாசப் பணிமனையில் 12.06.2005 அன்று நடத்திய செய்தியாளர் மாநாட்டில் அதன் தலைவர் தவராசா கூறிய கருத்துக்களே அந்தச் செய்தியில் இடம்பெற்றிருந்தன. ஆனால், அந்தச் செய்தியில் குறிப்பிட்டிருப்பது போல "அமைச்சர்கள் பலகோடி ரூபா நிதி மோசடி செய்துள்ளார்கள்" என்ற சொற் பிரயோகத்தை தாம் எந்தச் சந்தர்ப்பத்திலும் பயன்படுத்தவே இல்லை என்று அவர் மறுத்திருக்கின்றார்.

**ஆசிரியர் குறிப்பு:**

☆ வடமாகாண பனை - தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க சமாசத் தலைவர் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் திக்கம் வடிசாலை தொடர்பாக முன்னாள் அமைச்சர்களின் செயற்பாட்டை விளக்கியிருந்தார்.

☆ இதனை உதயனுக்கு அனுப்பிய விளக்கத்தில் அவர் மறுக்கவில்லை. அத்துடன், திக்கம் வடிசாலையின் நிதி கடந்த காலத்தில் வேறு தேவைகளுக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது என்பதையும் செய்தியாளர் மாநாட்டில் அவர் தெரிவித்திருந்தார். (ஆ-ர்)

ஓம்
ஸ்ரீராம ஜெயம்

**யாழ்ப்பாணம் - வண்ணை**
**ஸ்ரீவேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்**
**ஏகாதசி உற்சவம்**

நிகழும் பார்த்திப வருடம் ஆனி மாதம் 4ஆம் நாள் (18-06-2005) சனிக்கிழமை மாலை 5.15 மணிக்கு மேற்படி ஆலயத்தில் ஏகாதசி உற்சவம் நடைபெறும்.

அடியார்கள் இவ்வுற்சவத்தில் பங்குபற்றி ஸ்ரீமத் நாராயணன் அருள்பெற்று ஸ்ரீமகாலக்ஷ்மி விசால சம்பன்னராக வாழ்வீர்களாக.

பெருமாள் கோயில்,
யாழ்ப்பாணம். (சி-43491) (24-21-16-18)

ஆதீன மகாசபை.

## இவ்வாண்டு 2 லட்சம் பனம் விதைகள் நடுகை

கோண்டாவில்,ஜூன்18

பனை அபிவிருத்திச் சபையினரால் இந்த ஆண்டு யாழ். மாவட்டத்தில் இரண்டு லட்சம் பனம் விதைகள் நடுகை செய்யப்படவுள்ளன.

நெடுந்தீவு, வேலணை, ஊர்காவற்றுறை, யாழ்ப்பாணம், நல்லூர், சங்கானை, சண்டிலிப்பாய், தெல்லிப்பழை, உடுவில், கோப்பாய், கரவெட்டி, பருத்தித்துறை, மருதங்கேணி, சாவகச்சேரி, காரைநகர் ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் பனம் விதைகள் நடுகை செய்யபபடவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.

(எ-49)

## சமாதான நீதிவான்களுக்கு அழைப்பு

யாழ்.மாவட்ட சமாதான நீதிவான்கள் சங்கம் யாழ்.மாவட்ட சகல சமாதான நீதிவான்களையும் 19.06.2005 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.பல்கலைக்கழகத்தில் நடக்கும் "தமிழ்த் தேசியத்தின குரல்" நிகழ்வில் தவறாது பங்குபற்றி தங்கள் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளுமாறு அன்பாக வேண்டுகின்றோம்.

**ச.தேவதாசன் ச.நீ.**
**இணைச் செயலாளர், யாழ்.மாவட்ட சமாதான நீதிபதிகள் சங்கம்.**

(36680) (42-21-18-16)

## தாவடி தெற்கில் நாளை சமூக சேவகர் கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்18

தாவடி தெற்கு ஸ்ரீகாளி அம்பாள் சனசமூக நிலையத்தின் 31ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு 20 சமூக சேவையாளர்கள் பாராட்டிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

மேற்படி சனசமூக நிலையத்தின் ஆண்டு விழா நிகழ்வுகள் நாளை ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணியளவில் சனசமூக நிலைய முன்றிலில் தலைவர் மு.அப்பையா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவிலேயே சமூக சேவையாற்றிய 20 சேவையாளர்கள் விருது வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த கௌரவிப்பு விழாவில், தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் யாழ்.மாவட்ட பணிப்பாளர் எஸ்.ஜெயராஜ் பிரதம விருந்தினராகவும், சிறப்பு விருந்தினர்களாக ஆனைக்கோட்டை றோ.க.த.பாடசாலை அதிபர் எஸ்.தனபாலசிங்கம், வலி.தெற்குப் பிரதேச சபைச் செயலாளர் திருமதி சொக்கலிங்கம், எழுத்தாளர் யோசப் பாலா ஆகியோர் பங்குகொள்வர்.

தொடர்ந்து ஆண்டு விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற வீரர்களுக்கான பரிசில் வழங்கல் இடம்பெறும்.

(எ-190)

## துயர் பகிர்கின்றோம்

அகில இலங்கை அஞ்சல் தந்தித் தொடர்புகள் சேவையாளர் சங்க யாழ்.கிளையின். வேலணை அஞ்சல் அலுவலக
அங்கத்துவ சகோதரர்

### மா.செல்வரட்ணம்

**அவர்களின் மறைவையிட்டு எமது கண்ணீர்ப்பூக்களைக் காணிக்கையாக்குவதுடன் அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தைத தெரிவித்துக் கொள்கின்றோம்.**

தலைவர், செயலாளர், நிர்வாகிகள்,
அங்கத்துவ சகோதரர்கள்.
அகில இலங்கை அஞ்சல் தந்தித் தொடர்புகள் சேவையாளர் சங்கம்.
(46-21-18-16) யாழ்.மாவட்டம். (36679)

இன்றைய பிறந்தநாளில் நன்றியுடன் நினைவு கூருகின்றோம்

## பதினைந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 18 ~ 07 ~ 1918 |  | 09 ~ 04 ~ 1990 |

### அமரர் உவில்லியம் ஞானசிகாமணி அன்னப்பா

(இளைப்பாறிய அதிபர், மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை)

"மனிதருக்கென்றே ஊழியஞ் செய்யாமல்
கர்த்தருக்கென்றே நல் மனதோடே ஊழியஞ் செய்யுங்கள்"
எபேசியர் 6:8

*யாழ்ப்பாணக் கல்லூரி,*
*வட்டுக்கோட்டை.*
(c/43501)(46-16-18-21)

**மனைவி,பிள்ளைகள்.**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**


## வேலையாள்கள் தேவை

யாழ்.நகரில் இயங்குகின்ற வியாபார நிறுவனம் ஒன்றுக்கு **★சிட்டை எழுதுநர் ★ விற்பனையாளர்** தேவை. அனுபவமுள்ளவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும். (36677)(21-16-18)

தொடர்புகளுக்கு: **விளம்பர இல.2620,**
**மே/பா உதயன், யாழ்ப்பாணம்.**


## மரண அறிவித்தல்

### திருமதி செல்லமுத்து கண்மணி



இணுவிலைப் பிறப்பிடமாகவும் சுவிஸை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லமுத்து கண்மணி அவர்கள் 16.06.2005 வியாழக்கிழமை சுவிஸில் காலமானார்.

அன்னார் செல்லமுத்துவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான வேலாயுதபிள்ளை, சுப்பிரமணியம், நாகராஜா, தருமலிங்கம் மற்றும் இராசரத்தினம், கிருஸ்ணபிள்ளை, இராசலட்சுமி ஆகியோரின் அன்புச சகோதரியும் செல்வரத்தினம், அருந்தவராணி, திருஞானசோதி, சிவனேஸ்வரி, ஜெயநந்தகுமார், (சுவிஸ்), சந்திரகலா (இணுவில்), சிவசக்தி (ஜேர்மனி), சிறீபாஸ்கரராஜா (கனடா), வரதராஜினி (கனடா), சுதா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சரோஜா, கந்தசாமி, விஜயலட்சுமி, தனபாலரட்ணசிங்கம், சரோஜினிதேவி, ஜெயசேகரம், ஞானசேகரம், குணசகிலா, சவுந்தரராஜா, நகுலேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் சுதர்சினி, சுதர்சன், கருணாமூர்த்தி, குமரன், வவா, கவிதா, ரமேஸ், பிரகாஸ், ஜெயசிறீ, நிரஞ்சினி, தர்சினி, நிறஞ்சன், நிறோஜன், நிறோஜனா, கீர்தனா, திவிஜா, திபீசன், பிரசாந், ஆரபி, ஜெசாந், நிருசன், சந்தியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் றொசாந், றொசானி, மீரா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சுவிஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

அங்களப்பாய்,
இணுவில் கிழக்கு,
இணுவில். (36676)(21-18-16)

தகவல்:
செல்லமுத்து
குடும்பத்தினர்.


# AFTER YOUR A/L ----

SPECIALLY DESIGNED - JUST 3 MONTHS WILL CHANGE YOUR FUTURE!
CHOOSE ACCORDING TO YOUR NEED
GAIN ENRICHMENT THROUGH DEVELOPMENT OF YOUR ENGLISH SKILLS

NEW BATCHES START ON 04th JULY 2005

| Spoken Englich | DIP. IN. ENGLISH | CERT. IN ENG | Communication Skill development program | IELTS | English for Travelling Abroad |
|---|---|---|---|---|---|
| Practically (100%)<br>- Sentences expansion<br>-Questions & responses expansion<br>- Dialogues expansion | Skills Orientation<br>- Listening<br>- Speaking<br>- Reading<br>- Writing<br>- Language Structure | Skills Orientation<br>- Listening<br>- Speaking<br>- Reading<br>- Writing<br>- Language Structure | - News paper reading & Discussion<br>- Discussion of stories<br>- Film Discussion (Documentary Films)<br>- Presentation (Current issues)<br>- Letter Writing<br>-Report, Minutes writing | - Acadamic training<br>- General training | - Emmigration - Interviews<br>- Checking in & out at the Air port<br>- Flight behaviour<br>- Etiquette & Booking rooms<br>- Room managment |

OTHER COURSES AVAILABLE

| O/L English literature | English Literature Revision Classes | English for KIDS | English enrichment program (Grade - 08) |
|---|---|---|---|
| - Drama<br>- Prose<br>- Fictions<br>- Poems | - Discussion of past papers<br>- Revision of materials | level - I Age group (6 - 7)<br>level - II Age group (8 - 9)<br>level - III Age group (9 - 10) | - Writing, Reading, listening, Speaking<br>- Learnig through Excursions<br>- O.H.P Presentations available |

LONDON ENGLISH COLLEGE

NO:105, Arasady Road, Jaffna.
T.P: 021-2225889, 0777252180

No: 229A, Mitcham Road,
Tooting, London, SW 17910 UK

BCNS

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

## அருமையான சந்தர்ப்பம் இது....!

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசிலிருந்து ஜே.வி.பி. விலகியதனால் அரசு நாடாளுமன்றத்தில் தனது பெரும்பான்மைப் பலத்தை இழந்துவிட்டது. நாடாளுமன்ற ஆசனங்களின் அட்சரகணிதத்தின்படி, இப்போது எஞ்சியிருக்கும் அரசின் உறுதிநிலை ஸ்திரமற்றதுதான்.

என்றாலும், இப்போதைய அரசியல் நிலைவரப்படி பார்க்கும்போது 'நித்தியகண்டம்;பூரண ஆயுசு' என்ற கணக்கில் இந்த அரசைக் கொண்டிழுத்துக்கொண்டு போகக்கூடிய வாய்ப்பு - வலிமை - வசதி - ஜனாதிபதி சந்திரிகாவின் தலைமைக்கு உறுதியாக இருப்பதாகவே படுகின்றது.

எதிரணியில் - பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.க. மற்றும் ஜே.வி.பி., தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு போன்ற - முக்கிய கட்சிகளின் அரசியல் உள்நோக்கங்கள், நிகழ்ச்சித்திட்ட அட்டவணைகள், கொள்கைப் போக்குகள் போன்றவற்றை நோக்குபவர்கள் இந்த அரசைக் கவிழ்க்கும் எண்ணமோ, உடனடிப் பொதுத்தேர்தல் ஒன்றைச் சந்திக்கும் உத்தேசமோ, தயார் நிலையோ அவற்றுக்கு இல்லை என்பதைத் துலாம்பரமாக அவதானிக்க முடியும்.

பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கட்சி, ஜே.வி.பி., ஹெல உறுமய போன்றவற்றை அரசைக் கவிழ்க்கும் விடயத்தில் ஒன்றுபட வைக்கின்ற - அதிக சர்ச்சைக்குரிய - விவகாரங்களில் தலைநீட்டாமல் இருக்கும் வரையிலும் - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நிறைவேற்று அதிகாரப் பதவியைத் தக்கவைத்திருக்கின்ற வரையிலும் -

அதற்குப் பின்னரும், அவரது கட்சியைச் சேர்ந்த ஒருவர் அந்தப் பதவிக்கு வருவாராயின், அவரது காலத்திலும் -

இந்த நாடாளுமன்றம் தனது சட்டரீதியான காலம்முடியும் வரை ஆயுளைத் தக்கவைக்கமுடியும் என்றே தோன்றுகின்றது.

ஐ.தே.கட்சி அரசைவிட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசு எவ்வளவோ மேல் என்ற கருத்துக்கொண்ட ஜே.வி.பி., இப்போது அரசுக் கூட்டமைப்பைத் துறந்து எதிரணிக்குப் போனாலும், இந்த அரசைக் கவிழ்த்து, ஐ.தே.கட்சி அரசு ஏற்பட வாய்ப்பளிக்காது என நிச்சயம் நம்பலாம். அத்தோடு, சு.கவுடன கூட்டமைத்துத் தேர்தலைச் சந்தித்ததால் இவ்வளவு எம்.பிக்களை - 39 உறுப்பினர்களை - நாடாளுமன்றில் சுவீகரித்துக்கொண்டுள்ள ஜே.வி.பி., தனித்து ஒரு பொதுத் தேர்தலை எதிர்கொண்டு, அதன்மூலம் நாடாளுமன்றில் தனது பலத்தைக் குறைத்துக்கொள்ள விரும்பாது. இருக்கின்ற அதிக எம்.பிக்களைக் கைவசம் வைத்துக்கொண்டு தனது அரசியல் பலத்தை ஸ்திரப்படுத்தி, நிலைப்படுத்தவே அது முயற்சிக்கும். அந்த அடிப்படையில் இந்த அரசை இப்போதைக்குக் கவிழ்த்து, பொதுத்தேர்தல் ஒன்றைச் சந்திக்க அது விரும்பாது; முயலாது.

அதேசமயம், நாடாளுமன்றில் கட்சிகளுக்குள்ள இப்போதைய பலத்தையும், அவை அணிசேரக்கூடிய கொள்கைப் போக்குகளையும் மதிப்பீடுசெய்வோர் சுதந்திரக் கட்சி தலைமையிலான இப்போதைய அரசுக்கு, மாற்றான அணி ஒன்று இந்த நாடாளுமன்றுக்குள் இருந்து உருவாகி அரசைக் கைப்பற்ற இடமில்லை என்பதையும், அப்படி ஓர் அணி உருவாகிப் புதிய அரசை ஏற்படுத்த முயன்றால், மாற்று அரசு ஏற்படுவதை விரும்பாத நிறைவேற்று அதிகாரம் இந்த நாடாளுமன்றைக் கலைத்துவிடும் என்ற உண்மையை சகல அரசியல் சக்திகளும் உணர்ந்துள்ளன என்பதையும் நாம் கவனத்தில் கொள்ளவேண்டும்.

ஆக, இப்போதைய அரசு, அது நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை இழந்தாலும், அதன் ஆட்சி தொடரப்போகின்றது என்பதுதான் இன்றைய யதார்த்தமாகும்.

கடந்த ஓரிரு தினங்களில் ஜனாதிபதி குமாரதுங்க முதல் எதிரணித் தலைவர்கள் பலர்வரை இதையே வெளிப்படுத்தியும் உறுதிப்படுத்தியும் வருகிறார்கள்.

"ஜே.வி.பி. விலகினாலும், அரசு இம்மியளவும் அசையாது; நாடாளுமன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கை குறைந்தாலும், அரசுக்கு அதனால் பாதிப்பு ஏற்படாது. ஆட்சிக்குச் சிக்கல் உருவாகாது" - என்று அடித்துக் கூறியிருக்கிறார் ஜனாதிபதி சந்திரிகா.

அரசைவிட்டு வெளியேறினாலும், உடனடியாக இந்த ஆட்சியைக் கவிழ்க்கும் எண்ணம் தங்களுக்கு இல்லை என்பதை ஜே.வி.பி. தலைவர்களும் கோடிட்டுக் காட்டியுள்ளனர்.

குறுகிய அரசியல் லாபம் கருதி இந்த ஆட்சியைக் கவிழ்க்க மாட்டோம் என ஐ.தே.கட்சியின் பேச்சாளர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ்ம உறுதிபடக் கூறியிருக்கின்றார்.

இவ்வாறு நாடாளுமன்றப் பெரும்பான்மையின்றியும் ஆட்சியைத் தொடரும் அருமையான சந்தர்ப்பம் ஜனாதிபதி குமாரதுங்கவுக்குக் கிட்டியிருக்கின்றது. இலங்கையின் தேசியப் பிரச்சினையில் - தமது தசாப்தகால ஆட்சியில் - தாம் இழைத்த மகா தவறுகளுக்குப் பிராயச்சித்தம் செய்வதற்கு ஜனாதிபதி குமாரதுங்கவுக்குக் கிடைத்துள்ள பொன்னான வாய்ப்பு இது; வசதியான வேளை இது.

அமைதி முயற்சிகளை - சமாதான எத்தனங்களை - அவர் சுயாதீனமாக மேற்கொள்ள முடியாமல் அவருடன் கூட இருந்து அவருக்கு இடக்குப்போட்டுக்கொண்டிருந்த பேரினவாதிகளை அவர் கழற்றி விட்டுவிட்டார். இப்போது இது விடயத்தில் சுயாதீனமாகச் செயற்படக்கூடிய சந்தர்ப்பம் அவருக்குள்ளது.

எதிரணியில் வலிமையாக இருக்கும் ஐ.தே.கட்சியும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், காலதாமதமின்றி அமைதி முயற்சிகளை மீள ஆரம்பித்து முன்னெடுங்கள் என்று வலியுறுத்தி நிற்கின்றன. அமைதி முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டால், அடுத்த ஜனாதிபதித்தேர்தல்வரை குழப்பம் எதையும் ஏற்படுத்தாமல் அதற்கு ஒத்துழைப்பவர் போன்ற நிலையில் நீடிக்க வேண்டிய கட்டாயத்தில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் உள்ளார்.

இதைவிட, பொருத்தமான சூழ்நிலை இனி எப்போது கிட்டும்?

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவியில் தாம் நீடிக்கக் கூடிய எஞ்சிய காலத்தில் விரைந்தும், தீர்க்கமாகவும், திடமாகவும், தற்துணிவோடும் சமாதான முயற்சிகளையும் அது தொடர்பான முடிவுகளையும் முன்னெடுப்பதன்மூலம் இனப் பிரச்சினைக்கு ஒரு நிலையான தீர்வைக் காண்பதற்கான அடித்தளத்தைப் போடவும், அதன் வாயிலாக இலங்கை அரசியல் வரலாற்றில் தமக்கும் தமது முன்னோர்க்கும் இதுவரை ஏற்பட்டுள்ள வரலாற்றுக் கறையைப் போக்கி, நல்ல பெயரைப் பெறவும், தமது ஆட்சிக்காலத்தின் அந்தத்தில் நிற்கும் ஜனாதிபதி சந்திரிகாவுக்குப் பொன்னான வாய்ப்பு இப்போது கிட்டியிருக்கின்றது. பயன்படுத்துவாரா அவர்?

# தமிழீழ சுகாதார சேவையின் அனுமதிபெற்று வேலைத் திட்டங்களை செயற்படுத்துக!

## அரச, அரசசார்பற்ற அமைப்புகளுக்கு அறிவிப்பு

கொக்குவில்,ஜூன்18

தமிழர் தாயகப் பிரதேசத்தில் சுகாதார சேவையில் ஈடுபடும் அமைப்புகள் மற்றும் அலுவலகங்கள் தாம் இனங்காணும் வேலைத்திட்டங்களைத் தமிழீழ சுகாதார சேவையுடன் கலந்தாலோசித்த பின்னரே நடைமுறைப்படுத்தவேண்டும்.

- இவ்வாறு தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளர் ச.விக்கிரமன், சுகாதார சேவையில் ஈடுபடும் அமைப்புகள் மற்றும் அலுவலகங்களின் பொறுப்பதிகாரிகளுக்கு கடிதம்மூலம் அறிவித்துள்ளார். அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

நாகரிக உலகின் அபிவிருத்திக்கேற்ப சுகாதாரப் பிரச்சினைகள் அதிகரித்து வருகின்றன. அத்துடன், அவற்றுக்கான பரிகாரப் பரிமாணங்களும் விரிவடைகின்றன. இதனால், எவ்வளவு வளங்களைச் செலவு செய்தாலும் மேற்படி சுகாதாரப் பிரச்சினைகள் தீர்க்கப்படாதவையாக உள்ளன.

இந்நிலையில் எமது செயற்பாடுகள் அவ்வப் பிரதேச சமூக, கலாசார, புவியியல், அரசியல் பின்னணிகளுக்கேற்ப ஒருங்கிணைக்கப்பட்டுச் செயற்படுத்தப்படாவிட்டால், நாம் செலவிடுகின்ற வளங்கள் விழலுக்கிறைத்த நீராகிப் போய்விடும். இதனைக் கடந்தகால நிகழ்வுகள் நிரூபிக்கின்றன. இப்பிரச்சினைகள் தொடர்பாக இனங்காணப்படும் வேலைத்திட்டங்கள் ஒருங்கிணைந்த கண்காணிப்பின்கீழ் செயற்படுத்தப்படவேண்டும் இத்தீர்மானத்தின் கீழ் 1998ஆம் ஆண்டு முதல் 2002ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுவந்தன. ஆனால், போர்நிறுத்த காலத்திலும், ஆழிப்பேரலை அனர்த்தத்தின் பின்னும் எழுந்தமான சுகாதார வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுவருகின்றன.

இந்நிலையில், தமிழர் தாயகப்பகுதிக்கான ஒட்டுமொத்த சுகாதாரத்திட்டமொன்றினை தமிழீழ சுகாதார சேவையினராகிய நாம் வரைந்துள்ளோம். எனவே, அனைத்து நிறுவனங்களும் அதற்குள் அடங்கும் வகையில், தமது சேவைத்திட்டங்களை இனங்கண்டு அனுமதிபெற்றுச் செயற்படுத்துவது எமது பிரதேசத்தின் உண்மையான சுகாதார மேம்பாட்டுக்கு வழிவகுக்கும் என நம்புகிறோம்.

இதனைக் கருத்தில் கொண்டு இனி வருங்காலங்களில் சுகாதாரம் தொடர்பான வேலைத்திட்டம் ஒன்றை மேற்கொள்ள உத்தேசிக்கும் அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் எவையாயினும் தங்கள் உத்தேசத் திட்டத்தினை எமக்கு முன்வைத்து எமது முதன்மைத்திட்டத்திற்குள் அமையக்கூடியவாறு தங்கள் திட்டங்களை வடிவமைத்துச் செயற்படுவதன் மூலம் சீரான முழுமையான சுகாதார மேம்பாட்டுக்கு ஒத்துழைக்குமாறு வேண்டுகின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-76)

## தமிழ்மொழிமூல ஆசிரியர் நியமனம் இரண்டாவது தொகுதியினருக்கு கடிதம்

மண்டைதீவு,ஜூன்18

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள தமிழ்மொழிமூல அரச பாடசாலைகளில் உள்ள ஆசிரிய வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுள் இரண்டாவது தொகுதியினருக்கு மாகாணக்கல்வி அமைச்சினால் நியமனக்கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

பல்கலைக்கழக கல்விக்குத்தகுதி பெற்றிருந்தும் அனுமதி கிடைக்காதவர்கள் இந்தப் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்பட்டிருந்தனர். இவர்களுள் ஒரு தொகுதியினருக்கு வருட ஆரம்பத்தில் நியமனம் வழங்கப்பட்டிருந்தது. இரண்டாவது தடவை நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றியவர்களுக்கு தற்பொழுது நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

தற்போது நியமனம் பெறுபவர்கள் 15.06.2005 (புதன்கிழமை) சம்பந்தப்பட்ட பாடசாலைகளில் கடமையைப் பொறுப்பேற்க வேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளது. நியமனம் பெறுவோர் 14 நாள்களுக்குள் கடமையைப் பொறுப்பேற்க வேண்டும் என்றும்- கடமையைப் பொறுப்பேற்கத் தவறுபவர்களின் நியமனம் இரத்துச் செய்யப்படும் என்றும் - கல்வியமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார். (எ-88)

## சுனாமியால் பாதிப்படைந்த மீனவர்களுக்குப் படகுகள்

யாழ்ப்பாணம், ஜூன்18

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட வடமராட்சிப் பகுதிக் கடற்றொழிலாளர்களுக்கு கடற்றொழில் நீரியல் வள அமைச்சு மூன்றரைத்தொன் எடையுடைய 32 மீன்பிடிப் படகுகளை வழங்கவுள்ளது.

கடற்றொழில் நீரியல்வளத்திணைக்களத்தின் யாழ்.மாவட்ட உதவிப் பணிப்பாளர் க.தர்மலிங்கம் இத்தகவலைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:-

ஆழிப்பேரலை அனர்த்தத்தின்போது வடமராட்சி கடற்றொழிலாளர்களின் மூன்றரைத்தொன் எடையுடைய 32 படகுகள் முற்றாக அழிந்துள்ளன. இது குறித்து பாதிக்கப்பட்டவர்கள் எமது திணைக்களத்தின் யாழ்.அலுவலகத்தில் பதிவினை மேற்கொண்டிருந்தனர். அவர்களுக்கு கடற்றொழில் நீரியல் வள அமைச்சு 32 மூன்றரைதொன் எடையுடைய மீன்பிடிப் படகுகளை வழங்க முன்வந்துள்ளது.

இதில் முதற்கட்டமாக ஒவ்வொரு படகுக்குமான 10 இலட்சம் ரூபா நிதி வழங்கப்படவுள்ளது. படகுகளை உற்பத்தி செய்யத் தெரிவு செய்யும் நிலையங்களுக்கு நேரடியாக அமைச்சினால் வழங்கப்படும் மிகுதிப் பணம் இலகு வங்கிக்கடன் உதவியாக வழங்கப்படும் - என்றார் அவர். (ஒ-7)

### புல்லுக்குளத்தின் புனரமைப்புப் பணிகளுக்கு வசதியாக

## முனீஸ்வரன் வீதி நடைபாதைக் கடைகளை மாநகர அதிகாரிகள் நேற்று அகற்றினர்

கொழும்புத்துறை,ஜூன்18

யாழ்.முனீஸ்வரன் வீதியில் புல்லுக்குளம் பக்கமாக அமைக்கப்பட்டிருந்த நடைபாதைக் கடைகள் நேற்று யாழ். மாநகரசபை அதிகாரிகளால் அகற்றப்பட்டன.

புல்லுக்குளம் புனரமைப்புப் பணிகளுக்கு வசதியாக குறிப்பிட்ட கடைகளை அப்புறப்படுத்துமாறு கடை உரிமையாளர்களுக்கு ஏற்கனவே மாநகர சபை நிர்வாகத்தினால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது என்றும் -

எனினும், குறிப்பிட்ட தவணைக்குள் கடைகள் அகற்றப்படவில்லை என்றும் - இதனை அடுத்தே திடீர் நடவடிக்கை ஒன்றின் மூலம் கடைகள் அகற்றப்பட்டன என்று மாநகர சபை அதிகாரிகள் தெரிவித்தனர்.

அகற்றப்பட்ட விற்பனைக் கொட்டகைகளை மாநகர சபையினர் வாகனங்களில ஏற்றிச் சென்றனர். இந்த நடவடிக்கைக்கு பொலீஸாரும் ஒத்துழைப்பு வழங்கியதைக் காணமுடிந்தது.


அதேவேளை - புல்லுக்குளம் புனரமைப்பு பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன என்றும் - தெரிவிக்கப்பட்டது. (எ-30)

### நாளை

ஆனி 05
ஞாயிற்றுக்கிழமை
19.06.2005
திதி : துவாதசி
பிற்பகல் 03.27 வரை
நட்சத்திரம் : விசாகம்
பின்னிரவு 12.33 வரை
பிரதோஷ விரதம்
சுபநேரம் : 08.54 - 10.24
ராகுகாலம்: 04.24 - 05.54
(யாவும் பழைய நேரப்படி)

### உதயவாக்கு

எளிய வாழ்வைப்பற்றி பேசுவதற்கோ எழுதுவதற்கோ நாம் தயங்குவதில்லை;ஆனால், வாழ்வதற்குத் தயங்குகின்றோம். - மு.வ.



# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## காணி விற்பனைக்கு

மீசாலை கிழக்கு புதிய ஸ்ரேசனுக்கு அருகில் (குளத்தடி) 4 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P.: 0776245156 (நேரம் மாலை 6 மணியின் பின்) (36637)

## வீடு விற்பனைக்கு

கோண்டாவில் மேற்கில் 2 பரப்பு 11 குழி காணியில் அமைந்த வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P. No. 011 4613157 (நியாயமான விலைகோரும் முதல் நபருக்கே கொடுக்கப் பட்டுவிடும்) (36590)

## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

87 ஶ்ரீ இலக்கமுடைய ஒருகைப் பாவனை கொண்ட CD 200 C 200 மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு: க.நாதன் ஐயனார் கோயிலடி சுன்னாகம்.
T.P.:0773173730. (36639)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Prima உயிர் Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் உடன் சுத்தம்செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம். (Electronic நிறுவை) (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (36373)

புறொயிலர் 1kg - 190/-. சுத்தம் செய்தது 1kg - 285/-. கல்பேட் 1kg - 190/- மற்றும் புறொயிலர் குஞ்சுகளும் விற்பனைக்குண்டு. தொடர்பு: NEW R.S.K. Farm, மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில், NEW R.S.K. Farm, மானிப்பாய் றோட், பெரிய மதவடி, உடுவில். (36668)

## கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டு முறை தடுப்பு மருந்து ஏற்றப்பட்ட Original Prima Broiler குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள் 20.06.2005 திங்கட்கிழமை பிற்பகல் தொடக்கம் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை, நெல்லியடிக் கிளைகளிலும் சுட்டி பாம் - வட்டுக்கோட்டை, சந்நிதி பாம்- தொண்டைமானாறு, ஐங்கரன் களஞ்சியம், திருநெல்வேலி. முருகன் - சாவகச்சேரி, நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை முத்திரைச்சந்தையடி, நல்லூர் ஆகிய இடங்களிலும் பெற்றுக்கொள்ளலாம். (36569)

## வாடகைக்கு

மணித்தியாலம் மற்றும் நாளாந்த வாடகைக்கு இருபாலாருக்கும் மோட்டார் சைக்கிள், மோட்டார்கார் வாடகைக்கு வழங்கப்படும். அத்துடன் குளிரூட்டப்பட்ட திருமணக்காரும் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: 360/10, பிரதான வீதி (பஸ்தியன் சந்திக்கு அருகில்), யாழ்ப்பாணம். 0777 - 593722, 0776-991899. (45345)

## ஹோட்டலுக்கு ஆள்கள் தேவை

எமது ஹோட்டலுக்கு,
- ✡ மேலைத்தேச, கீழைத்தேச உணவு வகை தயாரிப்பவர்.
- ✡ சப்ளையர்கள் இருவர் தேவை.

காலை 9 மணிமுதல் பகல் ஒரு மணிக்குள் **நேரில் வரவும்**
(நல்ல அனுபவம் வாய்ந்தவர்கள் மட்டும் - ஹோட்டலில் தங்கியிருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்).

**நியூ றெஸ்ற் ஹவுஸ்**
19, சோமசுந்தரம் அவென்யூ,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
(36670) T.P.: 021 222 7839 (32-18-16-24)

# பட்டதாரி நியமன விண்ணப்பதாரிகளுக்கு

யாழ்ப்பாணம்,ஜுன்18

வடக்கு - கிழக்கு மாகாணப் பொதுச் சேவையில் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் திட்டத்தின்கீழ் யாழ். மாவட்டத்தில் விண்ணப்பித்த பட்டதாரிகளின் தராதரப் பத்திரங்களை பரிசீலனை செய்வதற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 22ஆம் திகதி முதல 26 ஆம் திகதிவரை யாழ். பிராந்திய ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. (ஓ)

# போலிப்'பணத்தாள் கண்டுபிடிப்பு

சங்கானை, ஜுன்18

சங்கானை மக்கள் வங்கிக்கிளையில் வாடிக்கையாளர் ஒருவர் தனது சேமிப்பில் இடுவதற்காகக் கொண்டுவந்த பணக்கட்டில் ஆயிரம் ரூபா போலித்தாள் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை இச்சம்பவம் இடம் பெற்றது.

குறிப்பிட்ட வாடிக்கையாளர் தான் ஒருவரிடம் சீட்டுப்பிடித்தார் என்றும் -

அந்தச் சீட்டுப்பணத்தைப் பெற்று இவ் வங்கியில் வைப்பிலிடக் கொண்டுவந்தார் என்றும் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் பற்றி சங்கானைப் பொலீஸாரிடம் வங்கி முகாமையாளர் பொன்.அச்சுதம் பிள்ளை முறையிட்டுள்ளார். தற்போது சீட்டுப் பணத்தைக் கொடுத்த நபர் விசாரணைக்காக அழைக்கப்பட்டுள்ளார்.

கடந்த திங்கட்கிழமை 500 ரூபா போலிப் பணத்தாள் இதே கிளையில் கண்டுபிடிக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஓ-29)

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள Japan Sony ரீவி, வீடியோ டெக், வீடியோ ஓடியோ டப்பிங் டெக், DVD பிளேயர், ரெக்னிஸ் டெக் செற், கெசற் செற் என்பன விற்பனைக்குண்டு.

தொடர்பு:
ஜெகன் வீடியோ ஓடியோ சென்ரர்
சட்டநாதர் வீதி, திருநெல்வேலி.
(36669) T.P.: 077 6547245 (32-18-16-24)

## SKY COMPUTER SYSTEM

sky
No.109, Kandy Road,
Chundikuli, Jaffna.
Hot line: 0777 222478

**விற்பனைக்குண்டு**

**Pentium III 500MHZ IBM Computer with Multimedia**
10GB Hard Disk
128 MB RAM
15" Monitor
25,500/-
ஒருவருட உத்தரவாதத்துடன்
Unlimited soft ware & free dust cover
அரசாங்க ஊழியர்களுக்கு தவணைமுறையில் பெற்றுக்கொள்ளும் விசேட சலுகை உண்டு.
Pentium III 533 - 26,000/-
Pentium III 600 - 27,500/-
Pentium III 667 - 29,250/-
கச்சேரிக்கு அருகில்.
(சி-4363)(24-1-1)

## திருத்தம் மின் அஞ்சல் முகவரி

யாழ். பல்கலைக்கழக ஊடக வளங்கள், பயிற்சி நிலையத்தினால் (Media Resources And Training Centre) கடந்த மாதம் 22ஆம் திகதி (மே22) உதயனின் 14ஆம் பக்கத்தில் வெளியிடப்பட்ட விளம்பரத்தில் -

விண்ணப்பங்களை அனுப்பவேண்டிய மின் அஞ்சல் (ஈ-மெயில்) முகவரியில் தவறு நேர்ந்துவிட்டது.

அதில் Sanmuga 2003 C @ Yahoo. com என்றுள்ள மின் அஞ்சல் முகவரி Sanmuga 2003 @ Yahoo.com என்று இருக்கவேண்டும். வாசகர்கள் இதனைக் கவனத்திற்கொள்ளவும். (ஐ)

## SAAMSTECH இன் ஆசிரியர் பயிற்சிக்கல்லூரி

### பயிற்சி வெற்றிடம்

SAAMSTECH இன் கல்வி, நிர்வாக மற்றும் தகவல் தொழில்நுட்ப செயற்பாடுகளுக்கான பயிற்சிநெறியின் சனி - ஞாயிறு (காலை 9 மணி முதல் மாலை 3 மணிவரை) பிரிவில் 8 பேருக்கும் கிழமை (மாலை ஒரு மணி முதல் 5 மணிவரை) பிரிவில் 5 பேருக்கும் வெற்றிடம் உள்ளதால் கலந்துகொள்ள விரும்புவோர் அடுத்த இரண்டு நாள்களுக்குள் பதிவு செய்யலாம்.

**தகுதி : க.பொ.த. உயர்தரத்தில் சித்தி** (36673)
**கட்டணம்: ரூபா 12,000/-**
**பூர்த்தி செய்யப்பட்ட சுயவிபரக்கோவையுடன் நேரில்...**

**SAAMSTECH**
**TEACHERS TRAINING COLLEGE**
841, HOSPITAL RD., CHUNDIKULI, JAFFNA. 021 - 4591571

## SAAMSTECH இன் தகவல் தொழில்நுட்பப் பிரிவு

**SAAMSTECH இன் இயக்கநிலைப்பட்டியலிலுள்ள கீழுள்ள இணையத்தளங்கள் மற்றும் பல்லூடக விருத்தியாக்கங்களிற்கு Designers, Programmers, Coordinators தேவை**

gceal.com - க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான வழிகாட்டித்தளம்
gceol.com - க.பொ.த சாதாரணதர மாணவர்களுக்கான வழிகாட்டித்தளம்
dotlanka.com - தமிழ் மக்களின் தகவல் தொழில்நுட்பத்தளம்
nowlanka.com - ஆங்கிலச் செய்தித்தளம்
abclanka.com - இலங்கையின் வியாபாரத்தளம்
noolaham.com - தமிழ் மக்களின் இலத்திரனியல் நூலகம்
thahaval.com - தமிழ்த் தகவல் தொகுப்பு
cheithi.com - தமிழ்ச் செய்தித்தளம்
kaalai.com - தமிழ் மக்களின் பொது அறிவியல்தளம்
kurali.com - தமிழ் மக்களின் நகைச்சுவைத்தளம்
kaditham.com - உலகத்தமிழ் மக்களின் செய்திப்பரிமாற்றத்தளம்
sinthu.com - பெண்களின் பல்சுவைத்தளம்
tamilbox.com - தமிழ்த் தகவல் தொழில்நுட்பத் தொகுப்பு
atlanka.com - இலங்கையின் விவரக்கோவை
tamilworldwide.com - உலகத்தமிழர்களை ஒருங்கிணைக்கும் தளம்
jaffnadirectory.com - யாழ் மாவட்டத்தின் விபரக்கோவை
aavanam.com - தமிழர் தகவல் காப்புத்தளம்
thalir.com - குழந்தைகளுக்கான இணையத்தளம்

**பயன்படுத்தப்படும் தொழில்நுட்பங்கள்** : HTML, CSS, Java Script, ASP, PHP, ACCESS, My SQL, Nuke, Mamboo, Flash, Frontpage, Dreamweaver, Code Charge

**பல்லூடக விருத்தியாக்கங்கள்**

தமிழ் ஆங்கில அகராதி, சிறுவர் அரிச்சுவடி, பொது அறிவுப் பெட்டகம், கணனி வழிகாட்டிகள், விஞ்ஞானிகள், கண்டுபிடிப்புக்கள், விஞ்ஞான விளக்கங்கள், புதிர்கள், விளையாட்டுகள், ......

**பயன்படுத்தப்படும் தொழில்நுட்பங்கள்** : Powerpoint, Impartica, Flash, Director, Authorware, ASP, Access, Multimedia Tools

**க.பொ.த. உயர்தரத்தில் சித்தியுள்ளவர்கள் சுயவிபரக்கோவையுடன் நேரில் வரவும்.**

**Designers :** கணனி மற்றும் ஆங்கிலத் தேர்ச்சி குறைவானவர்களுக்கு இலவச பயிற்சி வழங்கப்பட்டுச் சேர்த்துக்கொள்ளப்படுவர்

**Programmers :** தேர்ச்சி குறைவானவர்கள் பயிற்சி வகுப்பில் கலந்துகொள்ளலாம்.
**பயிற்சிக்கட்டணம் ரூபா 8,000/-**

**Coordinators :** தேர்ச்சி குறைவானவர்கள் பயிற்சி வகுப்பில் கலந்துகொள்ளலாம்.
**பயிற்சிக்கட்டணம் ரூபா 12,000/-** (36672)

**SAAMSTECH**
**Center for English and Information Technology**
841, HOSPITAL RD, CHUNDIKULI, JAFFNA. 021 - 4591571

## UNIT

இந்தியாவில் கணனிப் பொறியியல் துறைப் பட்டம் பெற்றவர்களும், இந்தியாவில் இரண்டு தசாப்த காலமாக கணனியில் பல்வேறு துறைகளில் பணிபுரிந்து அனுபவம் பெற்று பெயரெடுத்தவர்களாகிய நாங்கள் தாயக மண்ணில் அதியுயர் தொழில் நுட்பத்தை புகுத்தும் நோக்கத்துடன் கணனி துறையில் எமது அனுபவம் மற்றும் தனித்தன்மையும் கொண்டு முதல் படியாக சகல கணனி உதிரிப் பாகங்களையும் உற்பத்தியாளர்களிடமே நேரடியாக இறக்குமதி செய்து குறைந்த விலைக்கேயுரிய சேவை, 3வருட முழு உத்தரவாதத்துடன் வழங்குகின்றோம்.

IBM, Microsoft, Sun Micro Systems, Cisco, Compaq, AT & T Labs, Intel மற்றும் HP நிறுவனங்களின் இணைத் தயாரிப்பு நிறுவனங்களில் நேரடியாக இணைத் தயாரிப்பில் ஈடுபட்டவர்களாகிய நாங்கள் தாயக மண்ணில் அதியுயர் தொழில் நுட்பத்தை புகுத்தும் நோக்கத்துடன் இந்நிறுவனத்தை நிறுவியுள்ளோம். கணனி துறையில் எமது அனுபவம் மற்றும் தனித்தன்மையும் கொண்டு முதல் படியாக சகல கணனி விற்பனை, பழுது நீக்குதல், வலைப்பின்னலமைப்பை ஏற்படுத்துதல், மென்பொருள் உற்பத்தி ஆகியவற்றை இலங்கையில் எங்கும் இல்லாதவாறு வழங்குகின்றோம்.

**3 வருட முழு உத்தரவாதம்**

**எமது சேவைகள் பல அவற்றுள் சில :**

- உலகத்தரம் வாய்ந்த பிரத்தியேக உதிரிப்பாகங்களை தெரிவு செய்து இணைத்து முழுக் கணனியாகவும் மற்றும் உதிரிகளாகவும் வழங்குதல்.
- கணனி தயாரிப்பில் முன்னணி நிறுவனங்களான Compaq, DELL, IBM மற்றும் HP நிறுவனங்களில் தயாரிப்புக்களை மிகமிகக் குறைந்த விலையில் தரம் மாறாமல் வழங்குதல்.
- உலகத்தரம் மற்றும் முன்னணி தயாரிப்பு நிறுவனங்களான Perx & Asrock தயாரிப்புக்களின் ஏக விநியோகம்
- வலைப்பின்னலமைப்பில் முன்னணி நிறுவனமான Cisco தயாரிப்புகள் மற்றும் சேவைகளை மிகமிகக் குறைந்த விலையில் வழங்குதல்
- எவராலும் தீர்க்க முடியாத கணனிப் பிரச்சினைகளை பழுது பார்த்தல், நீக்குதல்
- சகல விதமான கணனிகளின் பழுது பார்த்தல் மற்றும் பழுது நீக்குதல்
- Cisco நிறுவனத்தின் அனுமதி பெற்ற வலையமைப்புக்கள் மற்றும் திருத்தங்கள்
- LAN, WAN, MAN வலைப் பின்னலமைப்புகள், பழுது பார்த்தல் மற்றும் பழுது நீக்குதல்

இன்னும் பல ....

**சகல கணனி உதிரிகளும் கொழும்பை ஒத்த விலையில்**

(சி-43509)

**P4 Latest Casing Rs. 2900/- முதல்**
347, K.K.S. Road, Manohara Theatre Junction, Jaffna.
T.P: 021- 4590720 / 0773134737 / 0776093477

# நீத்தார் நயப்புரை

## நான் கண்ட செம்பியன்செல்வன்



ஆ.இராஜகோபாலுக்கும் (செம்பியன் செல்வன்) எனக்கும் இடையிலான தொடர்பு 45 வருட காலப் பழைமை வாய்ந்தது. 1960ஆம் ஆண்டு அவர் யாழ்.இந்துக் கல்லூரியில் இருந்து உள்வாரி மாணவனாக பேராதனைப் பல்கலைக்கழகம் வந்து சேர்ந்தார். நான் தங்கியிருந்த இராமநாதன் மண்டபத்திலேயே அவருக்கும் இடம்கிடைத்தது. செம்பியன் செல்வன் இலக்கியத்தில் குறிப்பாக சிறுகதையில் மிகுந்த ஆர்வம் கொண்டவர்.

அவர் முதல் வருடத்தில் இருந்த பொழுது நான் பேராதனைத் தமிழ்ச் சங்கத்தின் மலர் ஆசிரியர். பேராதனைத் தமிழ்ச் சங்கம் வருடம் தோறும் 'இளங்கதிர்' என்ற தரமான பத்திரிகையை வெளியிட்டுவந்தது. இதற்கு ஆசிரியர்களாக இருந்தவர்கள் பின்னால் பத்திரிகை உலகில் மிகவும் பிரகாசித்தார்கள். நான் இந்த பத்திரிகையின் ஆசிரியனாக இருந்தபடியால் இராஜகோபால் என்னோடு ஒட்டிக் கொண்டார். அவர் மட்டுமன்றி பல்கலைக்கழகத்தில் சிறந்த எழுத்தாளர்களாக இருந்த கையிலாயநாதன், கதிர்காமநாதன், முத்துசிவஞானம், கோபாலகிருஷ்ணன, செ.யோகநாதன், செ.மௌனகுரு, இன்று சிறுகதை உலகில் தனக்கென ஓர் இடம் பிடித்து இருக்கும் செங்கை ஆழியான் எல்லோருமே ஒரு சாலை, மாணவர்கள், எனக்கு ஒரு வருடம் கனிஷ்டராக இருந்தவர்கள். செ.யோகநாதன், செ.மௌனகுரு இரண்டு வருடம் யூனியர் என நினைக்கிறேன். இவர்கள் எல்லாரும் இலக்கிய ஆர்வம் மிக்கவர்கள். தமிழ் மொழி மூலம் பட்டப் படிப்புக்கு முதன்முதலாக தெரிவானவர்கள். இவர்களுக்கு போட்டிகள் நடத்துவதும் இவர்கள் ஆக்கங்களை பிரசுரிப்பதும் எனக்கு மிகவும் பெருமையாக இருந்தது.

இராஜகோபால் எப்பொழுதும் அழகான உடையில் துடுக்கான இளைஞராகவே காணப்பட்டார். எப்பொழுதும் குதூகல உணர்ச்சியுடன் காணப்பட்டார். 'இளங்கதிர்' பத்திரிகைப் பணியில் எனது வலக்கரமாக விளங்கியவர். 1961ஆம் ஆண்டு 'இளங்கதிர்' மலரின் ஆசிரியர் தலையங்கத்தை அவரே எழுதினார். ஆனால, அதனைப் பற்றி இன்றுவரை யாரிடமும் அவர் மூச்சுவிடவில்லை. இது அவருடைய பெரும் தன்மையைக் காட்டுகிறது. இந்த மலர் வெளிவருகின்ற காலத்தில் நான் B.A பட்டத்தின் இறுதிப்பரீட்சைக்கு தயாராக வேண்டியிருந்தமையினால் விளம்பரங்கள் சேர்ப்பது முதல் பல பணிகளை அவரே மேற்கொண்டார்.

பல்கலைக்கழகப் படிப்பு முடிந்த பிறகு வேலைதேடும் படலம் ஆரம்பமாகிறது. பேராசிரியர் சு.வித்தியானந்தன் எமது பிரியாவிடைக் கூட்டத்தில் மாணவர்கள் எல்லோருக்கும்வேலை கிடைத்துவிடும் என்றோ, மாணவிகள் எல்லோருக்கும் திருமணம் நடந்துவிடும் என்றோ கூறிவிட முடியாது என்றார். பல பட்டதாரிகளைப் போல இராஜகோபாலும் பல வருடங்கள் சரியான வேலையில்லாமல் கஷ்டப்பட்டார். ஆனால் அவர் உள்ளத்தில் ஒரு பொழுதும் சோர்வோ விரக்தியோ ஏற்பட்டது இல்லை. நூல்களை எழுதி வெளியிட்டார். பத்திரிகைகளுக்கு ஆசிரியராக அமர்ந்து அரும்பணியாற்றினார். சிறிது சிறிதாக அவர் வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்பட்டது. யாழ்.வலயத்தின் கல்விப் பணிப்பாளராக அவர் உயர்ந்து நின்றார்.

நான் பேராயராகிய பின்னர் அத்தியடியிலுள்ள அவரது இல்லத்திற்கு பல தடவை சென்றுள்ளேன். 60 வயதைத் தாண்டிய பின்னரும் அவர் ஒரு பல்கலைக்கழக மாணவரைப் போலவே சிரிப்பார், பேசுவார், குதூகலம் அடைவார். இற்றைக்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் நான் மாநகரசபை ஆணையாளர் குணராசாவுடன் பேசிக்கொண்டு இருந்தேன். அப்பொழுது இராஜகோபால் பற்றிய பேச்சும் வந்தது. நான் குணராசாவைப் பார்த்து செம்பியன் செல்வனைப் பார்த்தால் இப்பொழுதும் வாலிபனாகவே இருக்கிறார் என்று கூறினேன். அப்பொழுது குணராசா இப்பொழுது அவர் முற்றிலும் மாறிவிட்டார். சமீபத்தில் நீங்கள் அவரைப் பார்க்கவில்லையா என்று கேட்டார். இந்த சம்பாசனை நடந்து மூன்று மாதத்தின் பின்னர் இராஜகோபால் மறைந்துவிட்டார். வாழ்க்கை என்பது இறைவனால் அருளப்படுவது. நமது வாழ்க்கையை நிர்ணயிக்கின்ற வல்லமை நம்மிடமில்லை. ஆனால், இறைவன் கொடுத்த வாழ்விலே நாம் நமது முத்திரையை பதித்துவிட்டுச் செல்லலாம். இதனை நன்கு உணர்ந்து தமது சொல்லாலும் செயலாலும் தனக்கென ஒரு முத்திரையைப் பதித்துவிட்டு சென்றவர் தான், செம்பியன் செல்வன் என்று நண்பர்களாலும், இலக்கிய ஆர்வலர்களாலும் அன்புடன் அழைக்கப்பட்ட ஆ.இராஜகோபால்.

**பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன்**
**முதல்வர், கிறிஸ்தவ இறையியல் கல்லூரி, மருதனார்மடம்.**

## மனிதருள் கீர்த்திமிக்க மாணிக்கம்



இனிய ஒருநாதம் ஓய்ந்துவிட்டது. சங்கீத உலகத்துக்கே இது ஒரு பேரிழப்பாகும். ஒழுக்க சீலராக வாழ்ந்து மனிதருள்ளே கீர்த்திமிக்க மாணிக்கமாகத் திகழ்ந்த பேராசிரியர் எஸ்.கே. சிவபாலன் அண்மையில் பூதவுடலை நீத்துப் புகழுடம்பைப் பெற்றுவிட்டார்.

ஈழநாட்டிலிருந்து இந்தியாவுக்குச் சென்று சிதம்பரம், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக இருந்து தன்னாலான மட்டும் இசையுலகத்துக்குச் சேவையாற்றிய கோமகன் சிவபாலன் சிலநூல்களையும் எழுதித் தமிழ்த் தொண்டாற்றிச் சென்றமை போற்றுதற்குரியது.

பண்ணிசையில் சிறந்து விளங்கிய சிவபாலன் திருமுறைச்செல்வமணி, பண்ணிசைக் கற்பகம், பண்ணிசைக்கலாநிதி என்னும் பட்டங்களைப் பெற்றிருந்தார். 1979இல் சிங்கப்பூர் சென்று இசைக்கச்சேரிகள் செய்து ஸ்ரீ-செண்பக விநாயகராலயத்தில் இசையாசிரியராகவும் கடமையாற்றிய இவர் B.A.; M.A. படடங்கள் பெற்று தமிழ்நாடு இசைக்கல்லூரியில் சேவையாற்றி முதல்தர சித்தி பெற்று தங்கப் பதக்கமும் வெள்ளிப் பதக்கமும் பெற்றுப் புகழ் மாலை சூடியவர். அத்தகையவர் இன்று எம்மிடையே இல்லை என்பதை நினைக்கவே நெஞ்சு பதறுகின்றது.

சிறுபராயத்திலிருந்தே பல சாதனைகள் படைத்த இவர் பண்ணிசைப் பாமாலை, திருவாசகத்தேன் என்ற ஒலிநாடாக்களை வெளியிட்டு சிதம்பரம் நடராஜர் கோயிலிலும் இந்து சங்கங்களிலும் பெருமதிப்பைத் தனது சொத்தாக்கிக் கொண்டவர்.

இரண்டாவது உலக இந்து மாநாட்டில் பேராளராக கொழும்பில் பங்குபற்றி கௌரவம் பெற்ற இவரின் மறைவு, இசையுலகுக்கு ஓர் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். எனினும் அவரது தேனினும் இனிய குரல் மட்டும் இப் போதும் ஒலித்துக் கொண்டேயிருக்கிறது.

**- திருவரன்**

தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி இடமாற்றலாகிச் சென்ற வ.செல்வராசாவின் பணியைப் பாராட்டி பிரியாவிடை விழாவினை வலய நலன் புரிக் கழகம் நடத்தியது.

நிகழ்வில் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் நினைவுமோதிரத்தினை வ.செல்வராசாவுக்கு அணிவிப்பதைப் படத்தில் காணலாம். *(படம்: தென்மராட்சிச் செய்தியாளர்)*



# நூல் வரிசை



நூல்: **திருக்கோணேஸ்வர திருத்தலயாத்திரை**
நூலாசிரியர்: **வே.வரதசுந்தரம்**
பதிப்பு: **மணிமேகலைப் பிரசுரம், சென்னை**

**தொ**ன்மை மிக்க தென்தமிழீழத் தலைநகரான திருகோணமலையில் அமைந்த திருக்கோணேஸ்வரர் ஆலயம் 1624ஆம் ஆண்டில் போர்த்துக்கேயரால் அழிக்கப்படும் வரை மிகப் புகழ்பெற்ற இரு ஈழத்துச் சைவக் கோயில்களுள் ஒன்றாக விளங்கியது. இத்தலைநகரினதும் திருக்கோயிலினதும் வரலாற்றுத் தொன்மையையும் பெருமையும் சிறப்பாக விளக்கும் வகையில் வேதநாயகம் வரதசுந்தரம் அவர்கள் 'திருக்கோணேஸ்வர திருத்தலயாத்திரை' என்ற அரிய நூலாக எழுதி வெளியிட்டுள்ளார். சென்னை மணிமேகலைப் பிரசுரம் விரும்பிக்கேட்டுத் தமிழகத்தில் இந்நூலை வெளியிட்டிருப்பது இந்நூலின் சிறப்புக்குச் சான்றாகும். இந்நூலுக்கு முன்னரே திருமலை பத்திரகாளி அம்மன் கோயில் வரலாற்றையும் நூலாசிரியர் "காளி ஆச்சி" என்ற நூலாக அவர் எழுதி வெளியிட்டுள்ளார்.

கொழும்பிலிருந்து வெளிவரும் 'சுடரொளி' வார சஞ்சிகையில் வே.வரதசுந்தரம் அவர்கள் 'திருக்கோணேஸ்வர திருத்தலயாத்திரை' என்ற நீண்ட தொடர் கட்டுரையை ஐம்பதுவார இதழகளில் தொடர்ந்து எழுதி வந்தார். 'சுடரொளி' வார இதழ் வாசகர் களை மிகவும் கவர்ந்த பல்துறைசார் ஆய்வுக் கட்டுரைத் தொடராக இது அமைந்தது.

இக்கட்டுரைகளே 'ஆமாறு செல்வோம்' முதல் 'கோணே[illegible]சர் ஈரெழியற் கோலம்' வரையான நாற்பத்தெட்டுக் கட்டுரைகளே மணி மேகலைப் பிரசுரத்தின் 'திருக்கோணேஸ்வர திருத்தலயாத்திரை' என்ற நூலாக முப்பத்தொரு புகைப்படக் காட்சிகளுடன் சிறப்பாக வெளிவந்துள்ளன. இந்நூல் நூலாசிரியரை உருவாக்கக் காரணமாயமைந்த பெரியம்மாவுக்குச் (சிவகாமியம்மா) சமர்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

திருக்கோணேஸ்வர திருத்தலத்தை நோக்கி, சிவனை வழிபடப் பக்தர்கள் செல்வதே திருத்தலயாத்திரையாகும். ஆனால், இது திருமலை நோக்கிய பயணமல்ல. கோயில் பற்றிய அறிவியல் நோக்கிய வாசிப்பு யாத்திரை. இந்நூலை வாசிப்பவர்கள் திருக்கோணேஸ்வரப் பெருமான் மீது பக்தி கொள்வதோடு, இறைவனின் மகிமையையும் அருள் மாட்சியையும் அற்புதங்களையும் நிறைவாக அறியமுடியும். அது மட்டுமல்ல. ஈழத்தமிழரின் தொன்மையையும் சைவத்தின் பழைமையையும் திருகோணமலையின் சைவத் தமிழ்த் தொன்மையையும் அறிய இந்நூல் வரலாற்றுச் சான்றுகளுடனும் இலக்கியச் சான்றுகளுடனும் மிகச் சிறப்பாக விளக்குகின்றது.

கி.பி.1624இல் கோணேஸ்வரன் கோயில் போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்டதை மு[illegible]ன் குறிப்பிட்டேன். ஆனால், சைவநாயன்மார் காலத்துக்குச் சில நூற்றாண்டுகளுக்கு முன்னரே இக்கோயில் அழிக்கப்பட்டதையும் மீள அமைத்துப் புகழ் பெற்றதையும் நூலாசிரியர் பின்வருமாறு விளக்குகின்றார்.

"இலங்கையிற் சோழர் ஆட்சியின் தலைநகராகப் பொலனறுவை விளங்கியபோதிலும், திருகோணமலை முதன்மை நகரமாக விளங்கியுள்ளது. சோழர் பண்பாட்டு ஆதிக்கத்தினையும் நாம் காண்கிறோம்.

மகாசேனன் கி.பி.3ஆம் நூற்றாண்டில் கோணேஸ்வரத்தை அழித்த பின்னர் சோழர் ஆட்சிக் காலத்தில் திருகோணமலை மாவட்டத்தில் மீண்டும் சைவம் எழுச்சி பெற்றிருக்கிறது"(ப.199)

கி.பி.3ஆம் நூற்றாண்டில் சிங்கள அரசன் படையெடுப்பால் கோயில் அழிக்கப்பட்ட போதிலும் மீண்டும் திருமலை சைவத் தமிழர் ஆதிக்கத்தில் நிலைத்தது. சோழ இலங்கேஸ்வரன், குளக்கோட்டன் முதலியோர் திருமலையிலிருந்து ஆட்சி புரிந்து காத்தமை நூலில் விளக்கப்படுகிறது. இங்கு வன்னியர் ஆட்சியும் நிகழ்ந்தமை வரலாறாகும்.

இராமாயண நோக்கில் இராவணன் ஈழம் முழுவதையும் ஆண்ட மிகப்பழைய தமிழ் அரசன். இந்த இராவணனுக்கும் கோணேஸ்வரத்துக்கும் தொடர்பு இருந்தமை சைவத் தமிழ் இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளன. சம்பந்தர், அப்பர், சுந்தரர், மணிவாசகர் ஆகிய நால்வரும் கூறும் இச் செய்தியை நூலாசிரியர் விரிவாக விளக்கியுள்ளார். இராவணனைக் கொலைசெய்த இராமன், பழிக்கு அஞ்சி கோணேஸ்வரனை வழிபட்டுப் பிரமகத்திதோசம் நீக்கப்படுவதும் நூலில் எடுத்துக்காட்டப்படுகிறது.

நால்வர் மட்டுமன்றி சேக்கிழார், உமாபதி சிவாச்சாரியார், திருமூலர், கச்சியப்பர், அருணகிரிநாதர், முதலிய பல தமிழக சமயப் புலவர்களும் தமது நூல்களில் கோணேஸ்வரன் பெருமையைப் பாடியிருப்பதை ஆசிரியர் விளக்கியுள்ளார். ஈழத்துச் சைவத் தமிழறிஞர்களான சிங்கைச் செகராச சேகரன், ஆறுமுகப்புலவர், அகிலேசப்பிள்ளை முதலிய பலர் கோணேஸ்வரப் பெருமான் பற்றிய நூல்களைப் பாடி வெளியிட்டுள்ளனர்.

(10ஆம் பக்கம் பார்க்க)



யாழ். மறைக்கல்வி நிலையத்தின் ஆண்டு விழாவும் மறையாசிரியர் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் அண்மையில் நடைபெற்றன.

இந்நிகழ்வில் மேடையேற்றப்பட்ட தர்மத்தில் பூத்த மலர்கள் தென்மோடி நாட்டுக் கூத்தை எழுதி நெறியாள்கை செய்த இசைத்தென்றல் ம.யேசுதாசனுக்கு யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையால் 'அண்ணாவியார்' பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்படுவதைப் படத்தில் காணலாம்.

*(படம்: கொழும்புத்துறைச் செய்தியாளர்)*




சர்வதேச லயன்ஸ் கழகங்கள் மாவட்டம் 306Bஇன் 27ஆவது மாநாடு அண்மையில் பண்டாரநாயக்கா சர்வதேச மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் மானிப்பாய் கோவில்பற்று லயன்ஸ் கழகத்தினைச் சேர்ந்தவரும், வடபிராந்[illegible] பிரதி மாவட்டச் செயலாளருமான லயன். செ.ஞானராஜாவுக்கு சிறந்த அர்ப்பணிப்பு ம[illegible]ம் தலைமைத்துவத்திற்கான உயரிய விருதினை முன்னாள் சர்வதேச தலைவர் லயன். குசிக்கா கபறானந்தா வழங்குவ[illegible]யும் அருகில் மாவட்ட ஆளுநர் லயன். சிவானந்தன் நிற்பதையும் படத்தில் காணலாம். (S-204)

# அருண்ஸ் ஸ்போற்ஸ் ஊக்குவிப்பு விற்பனை

எமது விளையாட்டு வீரர்களையும் வீராங்கனைகளையும் ஊக்குவிப்பதற்காக விசேட சலுகை!
சில பொருள்களுக்கு - 10% கழிவு
வேறுசில பொருள்களுக்கு - 15% கழிவு
**திங்கட்கிழமை 20.06.2005**
**முதல் 16.07.2005 வரை**

✣ இந்த விசேட கழிவுகள் காசு விற்பனைக்கு மட்டும்
அரிய சந்தர்ப்பத்தை தவறவிட்டுவிடாதீர்

253, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (சி/43472)(15-17-42)

**அருண்ஸ் ஸ்போற்ஸ்**


## ஆன்மீக நிகழ்ச்சிகள்

யாழ்பகவான் ஸ்ரீசத்திய சாயிசேவா நிலையத்தில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை போயா ஆன்மீக நிகழ்ச்சிகள் அதிகாலை 5 மணிக்கு நகர சங்கீர்த்தனத்துடன் ஆரம்பமாகி நண்பகல் நாராயண சேவையுடன் நிறைவுபெறும். (3)


மீண்டும் உற்பத்திகளை ஆரம்பித்துள்ளோம்





# நொர்தேண் இன்டஸ்ரீஸ்

ரயர் நிரப்புநர்களும்
சைக்கிள் ரயர், ரியூப் உற்பத்தியாளர்களும்

69, பிறவுண் வீதி, கொக்குவில்



# நெஞ்சகலா நினைவலைகள்

**11ஆம் ஆண்டு**



தோற்றம் 07 - 12 - 1922
மறைவு 18 - 06 - 1994

அமரர் டேவிற் ஸ்ரீபத்மநாதன் பிறைசூடி

**31ஆம் நாள்**



தோற்றம் 18 - 05 - 1929
மறைவு 15 - 05 - 2005

அமரர் குந் புஷ்பமணி பிறைசூடி

**5ஆம் ஆண்டு**



தோற்றம் 08 - 03 - 1952
மறைவு 17 - 04 - 2000

அமரர் ரோஸ் மனோரஞ்சினி சேவியர்

**"சீவியத்தில் நேசித்தவரை மரணத்தில் மறவாதீர்"**

பதினொரு ஆண்டுகள் நகர்ந்தாலும்
உங்கள் அழியாத நினைவுகள் நாம்
வாழும் வரை என்றும் எம் மனங்களில்
நிறைந்திருக்கும்.

எம் வாழ்விற்கு நல்வழி காட்டி
வாழ வைத்த எம் தெய்வமே!
உங்கள் நினைவுகள் என்றும்
எம்மைவிட்டகலாது.

எமது நெஞ்சு நிறை அன்பின் விளக்கே
பாருள்ளவரை உமது பசுமை நீங்காது
எம் நினைவுகளிலிருந்து

நிரஞ்சினி
சண்டிலிப்பாய் வீதி, பண்டத்தரிப்பு. (36605) (56-11-45)

பிரிவால் துயருறும்,
**குடும்பத்தினர்.**



# UNIVERSITY Of CAMBRIDGE U.K ENGLISH CLASSES



## ஆங்கிலமொழி உங்கள் பிரச்சினையா?

*உங்களால் ஆங்கிலத்தை பேசவோ, எழுதவோ, வாசிக்கவோ முற்றாக இயலவில்லையா?
*உங்களால் மற்றவர்கள் ஆங்கிலம் பேசும்போது விளங்கிக்கொள்ள முடிகிறதாயினும் பதில்சொல்ல இயலவில்லையா?
*உங்களால் ஓரளவு ஆங்கிலம் பேசவும், வாசிக்கவும், எழுதவும் முடிகிறது. ஆனால் சரளமாக ஆங்கில மொழியைக்கையாள விரும்புகின்றீர்களா?
*IELTS பெறுபேறுகளைப் பெற்று வெளிநாட்டில் உயர்கல்வியைப் பெற விரும்புகின்றீர்களா? உங்களால் ஆங்கிலம் பேசவும், வாசிக்கவும் முடிகிறது. எனவே, ஆங்கிலத்தில் எழுத்தாற்றலை வளர்க்க விரும்புகிறீர்களா?
*உங்களால் ஆங்கிலம் பேசவும், வாசிக்கவும் எழுதவும் முடிகிறதாயினும் அம்மொழியில் ஒரு அங்கீகரிக்கப்பட்ட தராதரப்பத்திரம்(Certificate) ஒன்றைப்பெற விரும்புகின்றீர்களா?
*நீங்கள் ஒரு ஆங்கில ஆசிரியர். எனவே, உங்கள் மொழி ஆற்றலை மேலும் விருத்திசெய்து ஆங்கிலப்பட்டமொன்றைப் பெற முயற்சிசெய்கிறீர்களா?
*Computer துறையில் பயிலும் நீங்கள் ஆங்கில மொழியினை விருத்தி செய்து Computer துறையில் உயர்கல்வி கற்க விரும்புகிறீர்களா? மேலுள்ள எந்தப் பிரிவைச் சேர்ந்தவராயினும் உடனடியாக "BRITISH COLLEGE OF ENGLISH" இனைத்தொடர்பு கொள்ளுங்கள். University of Cambridge - U.K இன் ஆங்கிலப் பாடநெறி ஒன்றில் சேர்ந்து கொள்ளுங்கள்.

Cambridge ஆங்கிலப் பரீட்சைகள் 5 மட்டங்களில் நடத்தப்படுகின்றன. இவை, KET, PET, FCE,CAE, CPE எனப் பெயரிடப்பட்டுள்ளன. இவற்றுள் பின்வரும் பாடநெறிகள் எமது British College இல் போதிக்கப்படுகின்றன. இதுவரை 50 இற்கு மேற்பட்டவர்கள் ஜூன்மாதம் நடைபெற்ற பரீட்சைக்குத் தோற்றியுள்ளனர். December 2005இல் British Council லில் நடைபெறவிருக்கும் Cambridge பரீட்சைகளுக்கான வகுப்புக்கள் 06.07.2005 இல் ஆரம்பமாகின்றன. 15.06.2005 தொடக்கம் 31.06.2005 வரை வகுப்புகளில் சேர விரும்புபவர்கள் நேரில் வந்து உங்கள் தரத்தைத் தீர்மானிக்கும் Placement Test ஒன்று எடுக்க வேண்டும். அதன் பின்னர் பின்வரும் வகுப்புகளில் ஒன்றில் தகுதி அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்படுவீர்கள்.

* PRELIMINARY ENGLISH TEST (PET)
* FIRST CERTIFICATE IN ENGLISH (FCE)
* CERTIFICATE IN ADVANCED ENGLISH (CAE)
* FCE பாடநெறியைப் பின்பற்றும் ஒருவர் இலகுவாக IELTS பரீட்சையில் Band 8, அல்லது Band 9 வரை எடுத்துச் சித்தியடைய முடியும்.
* CAE பாடநெறியைப் பின்பற்றி சித்தியடையும் ஒருவர் IELTS தகுதி இல்லாமலே உலகத்தின் எந்தப் பல்கலைக்கழகத்திலும் ஆங்கிலத்தில் உயர்கல்வியைத் தொடரமுடியும்.

Please visit our website at www. Cambridge Esol.org and look for the PET, FCE, and CAE exams.

June மாதத்தில் A/L பரீட்சைக்குத் தோற்றி மருத்துவ பொறியியல், விவசாய, விஞ்ஞான, முகாமைத்துவம் போன்ற பாடநெறிகளை பல்கலைக்கழகங்களில் ஆங்கிலமொழி மூலம் கற்க இருக்கும் மாணவர்கள் தங்கள் ஆங்கில அறிவை கூட்டிக்கொள்ளவும் பல்கலைக்கழகங்களில் எந்தவித சிரமமுமின்றி விரிவுரைகளைக் கேட்கவும் ஒப்படைகளை எழுதவும் தங்களை ஆயத்தப்படுத்திக்கொள்ள அரிய சந்தர்ப்பம். உடனடியாக

BRITISH COUNCIL இன் ஆதரவுடன், 06.07.2005 இல்
ஆரம்பிக்க இருக்கும் வகுப்புகளில் சேருங்கள்.

"பெற்றோர்களே உங்கள் பிள்ளைகளை எம்மிடம் நம்பி ஒப்படையுங்கள் அவர்களை ஆங்கிலத்தில் சிறந்த தேர்ச்சி அடையவைக்கின்றோம்"

தொடர்புகளுக்கு :-
**BRITISH COLLEGE OF ENGLISH**
**141, ADIYAPATHAM ROAD, THIRUNELVELY.**
(திருநெல்வேலிச்சந்திக்கும் - கல்வியங்காட்டுச் சந்திக்கும் இடையே) T.P.NO:0777-113408,
(36596)



# உடன் தேவை

**வடகிழக்குக் கட்டுமானத் தொழில்நுட்ப நிறுவனம்**
**கட்டட நிர்மாண ஒப்பந்த வேலைகள்**

கூலி ஒப்பந்த அடிப்படையில் அடுக்குமாடிக் கட்டடங்கள், சாதாரண கட்டடங்கள் நிர்மாணிப்பதற்கு தகுதியான ஆளணி உடையோரும், ஆற்றலுடையோரும் உடன் தேவை.

★ கூலி வீதம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்
தகுதியுடையோர் நேரடியாகவோ அல்லது தொலைபேசி மூலமாகவோ உடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:
**வடகிழக்குக் கட்டுமானத் தொழில்நுட்ப நிறுவனம்,**
கண்டி வீதி, ஆனந்தபுரம்,
கிளிநொச்சி.
(சி-43410) தொலைபேசி எண்: 021 228 5917 (26-14-19)



# மூன்றாம் ஆண்டு நினைவு



தோற்றம் 15 - 10 - 1958
மறைவு 20 - 06 - 2002

## மு.தங்கத்துரை

உங்களின் விழிமூடல்
எங்களின் துயில் கலைப்பு
வழிகளில் கரடு முரடு ~ அகற்றும்
வழிக்கோலாய் உங்கள் நினைவுகள்!

- மனைவி,
குடும்பத்தினர்.

கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி. (36593)(32-42-15-17)


## சிறையில் எஸ்.பி. எழுதிய நூலை மனைவி வெளியிட்டார்

உயர்நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்துக்காக சிறைவாசம் அனுபவித்து வரும் ஐ.தே.க.தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எஸ்.பி.திஸநாயக்க எழுதிய 'றுபதின் விபதக்' எனும் நூல் அவரின் மனைவியால் வெளியிட்டு வைக்கப்பட்டது.

வெளியீட்டு விழா கடந்த புதன்கிழமை அமபாந்தோட்டையில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் இடம்பெற்றது.

சிறையில் இருந்தவாறே எஸ்.பி.எழுதியுள்ள இந்த நூல் ஐ.தே.கட்சியின் அரசியல் நகர்வு, அதன் தூரநோக்கு, நாட்டைக் கட்டியெழுப்புவதில் அக்கட்சி எத்தகைய வழிமுறைகளைக் கடைப்பிடிக்கின்றது போன்றவை குறித்துப் பேசுகிறது.

எஸ்.பி.திஸநாயக்க சிறையில் இருந்தவாறு அரசியல் குறித்தும் அரசியல் தலைவர்கள் பற்றியும் பதிவுசெய்து வருகிறார். அதன் தொடக்கமே இந்த நூல் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (க-3)

## மரத்திலிருந்து வீழ்ந்தவர் காயம்

மாங்காய் பிடுங்க மரத்தில் ஏறியவர் 20 அடி உயரத்திலிருந்து வீழ்ந்து படுகாயமடைந்தார்.

இச்சம்பவம் கடந்த புதன்கிழமை மீசாலை வடக்கில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம், கந்தர்மடம், பழம் றோட்டைச் சேர்ந்த ஜோர்ஜ் (வயது 28) என்பவரே மரத்திலிருந்து வீழ்ந்தவராவார்.

தலையில் அடிபட்டு சுயநினைவிழந்த நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார். (3-117)

## தேசிய சாரணர் வாரம் இன்று ஆரம்பமாகின்றது

2005ஆம் ஆண்டுக்கான தேசிய சாரணர் சேவை ஒருங்கிணைப்பு வாரம் இன்று தொடக்கம் எதிர்வரும் 28ஆம் திகதிவரை இடம்பெறவுள்ளது.

இச்சாரணர் சேவை ஒருங்கிணைப்பு வாரத்தில் பல திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. சாரணர் கொடிவாரம் மூலம் நிதிசேகரிக்கவும், சாரணர் சேவையில் பல அங்கத்தவர்களை இணைத்துக்கொள்ளவும் இதன் போது திட்டமிடப்பட்டுள்ளன. தேசிய சாரணர் சேவையில் உள்ள 25 ஆயிரத்துக்கு மேற்பட்ட அங்கத்தவர்கள் மேற்படி நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளனர்.

சாரணர் சேவை ஒருங்கிணைப்பு வாரத்தில் கொடி விற்பனை மூலம் சேகரிக்கப்படும் நிதியில் 70 வீதமானவை அமைப்பின் மேம்பாட்டுக்காக பயனபடுத்தப்படும்.

எஞ்சிய தொகை சாரணர் பயிற்சி முகாம்களின் தேவைகளுக்காக பயன்படுத்தப்படும். அடுத்துவரும் ஐந்து ஆண்டு காலத்தில் சாரணர் இயக்கத்தின் அங்கத்தவர் எண்ணிக்கையை ஒரு இலட்சம் வரை அதிகரிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக இலங்கை தேசிய சாரணர் இயக்க பிரதான ஆணையாளர் எச்.எஸ். வீரக்கோன் தெரிவித்துள்ளார். (3-152)

## சித்திர பாட ஆசிரியர்களுக்கு செயலமர்வு

தென்மராட்சி ஜூன்18

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் சித்திர பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான தர விருத்திச் செயலமர்வுகள் இன்று தொடக்கம் ஆறு நாள்கள் நடைபெறும். வரணி ஆசிரிய மத்திய நிலையத்தில் நடைபெறவுள்ள இச் செயலமர்வுகளில் சித்திர பாட ஆசிரியர்களைக கலந்துகொள்ளுமாறும் -

வலயப் பாடசாலைகளில் சித்திரபாட ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை இருப்பதால் ஆர்வமுள்ள ஆசிரியர்களும் இச் செயலமர்வில் கலந்து கொள்ளலாமெனவும் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன தெரிவித்துள்ளார். (3-117)

## அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்க

# புலிகளின் உத்தியோகப்பற்றற்ற அனுமதியை இப்போதும் பெற்றுத்தான் வருகின்றோம்!

## தொலைக்காட்சி உரையில் ஜனாதிபதி

**அரசில் இருந்து ஜே.வி.பி. வெளியேறியதையடுத்து தேசிய தொலைக்காட்சி ஊடாக வியாழன்று ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு உரையாற்றினார். அந்த உரையின் ஒரு பகுதி நேற்றைய உதயனில் வெளிவந்தது. அவரின் உரையின் விவரம் வருமாறு:**



**பொ**துக்கட்டமைப்பு என்பது நாட்டின் இறையாண்மைக்கோ ஆட்புல ஒருமைப்பாட்டிற்கோ துளியளவும் ஊறுவிளைவிக்கும் ஒரு செயற்றிட்டமல்ல. வெறுமனே ஏழுபக்க ஆவணமான இதில் இலங்கை அரசினதும் தமிழ், முஸ்லிம் சமூகத்தினதும் பிரதிநிதிகளும் உள்ளடங்குகின்றனர்.

ஜே.வி.பி. இதனை எதிர்ப்பது குறித்து நான் ஆச்சரியப்படுகின்றேன். ஜே.வி.பி. போன்றதொரு மக்கள் கட்சி, மனித நேயம் சிங்களவர்களுக்கு மட்டுமே வழங்கப்பட வேண்டும் என்று கருதுகிறதா? தமிழ், முஸ்லிம் மக்களுக்கு அது வழங்கப்படக்கூடாது என்கிறதா?

நாம் எமது நாட்டின் இறையாண்மையை எவருக்கும் எழுதிக் கொடுக்கமாட்டோம். அன்று தனிநாடு கோரிய புலிகள், இன்று ஐக்கிய இலங்கை என்ற கோட்பாட்டின் கீழ் இலங்கை அரசுடன் இணைந்து செயற்பட முன்வந்திருக்கின்றனர். இது வரவேற்கக்கூடிய விடயமாகும்.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட எமது நாட்டைக் கட்டியெழுப்ப 15 ஆயிரம் கோடி ரூபா தேவை. ஆனாலும், இதற்காக 22 ஆயிரம் கோடி ரூபாவை வழங்குவதாகச் சர்வதேச சமூகம் உறுதியளித்திருக்கின்றது.

சர்வதேச சமூகத்தினர் எமக்குமட்டுமே உதவிகளை வழங்கிக் கொண்டிருப்பார்களென எவரும் சிந்திக்கக்கூடாது. எம்மை விடப் பின்தங்கிய நிலையிலுள்ள பல நாடுகள் வெளிநாட்டு உதவிகளைப் பெறக் காத்துக்கொண்டிருக்கும் போது, நாம் எமக்குக் கிடைக்கும் உதவியைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளத் திட்டங்களை வகுத்துக்கொள்ளவேண்டும்.

அரசில் இருந்துகொண்டு உலக வங்கியைச் சிலர் ஏசுகின்றனர். ஆனால், அதன் நிதியைக் கொண்டுதான் தம்து செயற்றிட்டங்கள மேற்கொள்ளப்படுகிறது என்பதை அவர்கள் மறந்துவிடுகின்றனர். இதுதான் நிலைமை. வடக்கு - கிழக்கிற்கு நாம் இந்த நேரத்தில் என்ன செய்யப்போகின்றோம் என்பதை சர்வதேசம் நன்கு அவதானித்துக் கொண்டிருக்கிறது.

### புலிகளின் அனுமதி

பொதுக்கட்டமைப்பைச் செய்வதன் மூலம் புலிகளுக்கு விசேட அதிகாரத்தை நாம் வழங்குவதாக ஜே.வி.பி. கூறுகிறது. அவர்களின் பகுதிகளில் அபிவிருத்திகளைச் செய்ய வேண்டுமாயின் நாம் அவர்களின் உத்தியோகப்பற்றற்ற அனுமதியை இப்போதும் பெற்றுத் தான் வருகிறோம்.

அவர்களின் அனுமதியின்றி அபிவிருத்தி செய்யப்போன எமது அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா குண்டடிபட்டுத் திரும்பவேண்டிய நிலை ஏற்பட்டது.

எனவே, அவர்களின் கருத்தையறிந்து நாம் இப்போதும் செயற்பாடுகளை மேற்கொள்கிறோம். ஆழிப்பேரலை அனர்த்த நிவாரண மீள்கட்டுமானப் பணிகளுக்காகக் கிடைக்கும் நிதி எவ்வாறு பகிரப்படப்போகிறது என்பதை உறுதிப்படுத்த வேண்டுமென்று புலிகள் கூறுவது நியாயம்தானே.

இவ்வாறான நிலையில் ஜே.வி.பி. பொதுக் கட்டமைப்பினை ஆட்சேபித்து அரசிலிருந்து விலகியுள்ளது.

தமது பதவியை இராஜினாமாச் செய்த ஜே.வி.பி. அமைச்சர்களில் சிலரின் இராஜினாமாக் கடிதங்களே எனக்குக் கிடைத்தன. இதர தரப்பினர்கள் தமது கடிதங்களை அனுப்பமாட்டார்கள் என்றே நான் நினைக்கிறேன்.

ஜே.வி.பி. அரசிலிருந்து போவதால் ஒரு குழப்பநிலையும் ஏற்படாது. எமது கூட்டணி அரசில் ஒரு கட்சி குறையும். அவ்வளவுதான். ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி என்பது எப்போதும் கூட்டணிகளை ஏற்படுத்தும் கட்சியாகும். நாட்டின் நலன்கருதி அவ்வாறான கூட்டணிகள் அமையுமே தவிர, சந்தர்ப்பவாதக் கூட்டணிகளை சுதந்திரக்கட்சி ஏற்படுத்தாது. எம்முடன் இணைந்து செயற்பட விரும்பிய காரணத்தினால்தான் நாம் ஜே.வி.பியுடன் நீண்ட பேச்சின் பின் கூட்டணியமைத்தோம்.

### ஜே.வி.பியுடன் ஒப்பந்தம்

நான்கு அமைச்சர்கள், நான்கு பிரதியமைச்சர்கள், இத்தனை வேட்பாளர்கள், இத்தனை தேசியப்பட்டியல் என்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் விரிவான பேச்சுக்கள் நடத்தியே நாம் ஜே.வி.பியுடன் ஒப்பந்தமொன்றையும் செய்தோம். அந்த ஒப்பந்தத்தில் உள்ள முழு விடயங்களையும் மக்களுக்குக் கூறவேண்டாமென அவர்கள் கேட்டனர். ஆனால், நான் இப்போது கூறுகிறேன். பரவாயில்லை. அந்த ஆவணம் என்னிடமுள்ளது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு தொடர்பான விடயத்திலிருந்தும் அவர்கள் நழுவப்பார்த்தனர். ஆனால், நாம் இந்த ஒப்பந்தத்தில் அதனை உறுதிப்படுத்தினோம். அதன்படி பார்த்தால் இந்தப் பொதுக்கட்டமைப்பானது அதிகாரப் பகிர்வின் ஒரு சிறு துளியாகும்.

இந்த ஒப்பந்தத்தை இந்த ஒரு வருடகாலத்தில் ஜே.வி.பியினர் பல தடவை மீறியுள்ளனர். அவற்றை இங்கு நான் கூறவில்லை. இப்படியான நிலையில் கூட்டணி அரசொன்றைச் செய்யமுடியாது. நாம் மக்களுக்குச் சொன்னவற்றை கடந்த ஒரு வருடத்தில் செய்தோம். சிலவற்றை ஜே.வி.பி. செய்யவிடவில்லை.

பொய்யான விவாதங்களையும், பொய்யான தகவல்களையும் பொதுக்கட்டமைப்பு விடயத்தில் ஜே.வி.பி. கூறியது. நான் உண்மை நிலையை விளக்கி அவர்களுக்குக் கடிதம் அனுப்பினேன். அவர்களின் அனைத்துக் கேள்விகளுக்கும் உரிய பதில் வழங்கியுள்ளேன்.

ஜே.வி.பியினருக்கு வாக்களித்த அப்பாவி மக்கள் குறித்து நான் சிந்திக்கின்றேன். பொதுக கட்டமைப்புக் குறித்து கடந்த ஜனவரி முதல் அவர்களுக்கு நாம் விளக்கியிருக்கிறோம். ஆனால், எந்தக் காரணமும் இல்லாமல் ஜே.வி.பி. இதனை எதிர்த்தது. இந்த நாட்டில் முதல்முறையாக வன்முறை, கொலைகளை நடத்தியது ஜே.வி.பிதான். 1971ஆம் ஆண்டு முதலில் இதனை ஆரம்பித்தது ஜே.வி.பி. தமிழர்கள் ஆயுதம் ஏந்த முன்னர் இவர்கள் ஆயுதமேந்தினர். எனினும், வன்முறை அரசியலை அவர்கள் இன்னும் கைவிடவில்லை.

ஒரு காலத்தில் மாகாணசபை முறையை முற்றாக எதிர்த்தது ஜே.வி.பி. அப்போதைய எமது ஐக்கிய சோஷலிஸ முன்னணியின் சார்பில் மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட 113 உறுப்பினர்கள் - மிக முக்கியமான உறுப்பினர்களை ஜே.வி.பியினர் கொன்றனர்.

ஆனால், இன்று என்ன நிலைமை? மேல் மாகாணசபையில் ஐ.தே.கவுடன் இணைந்து ஆட்சியைக் கைப்பற்ற ஜே.வி.பி. முயல்கிறது. இதுதான் இன்றைய நிலைமை.

எமது அரசு எந்தச் சவாலையும் எதிர்நோக்கத் தயார். உண்மையை நாம் எதிர் நோககியாக வேண்டும். அந்தத் தருணம் இப்போது ஏற்பட்டுள்ளது. அதனை எதிர்நோக்குவதற்கான பொறுப்பும், பலமும் அரசிற்கு உள்ளது.

### அரசு அசையாது

ஜே.வி.பி. அரசிலிருந்து விலகினாலும் அரசு அசையாது. நாட்டில் ஸ்திரமற்ற அரசும் உருவாகாது.

ஜே.வி.பி. வெளியேற்றத்தால் நாடாளுமன்றததில் அரசின் உறுப்பினர்களின் எண்ணிக்கை குறையும். ஆனால், இந்த எண்ணிக்கைக் குறைவானது, ஆட்சியின் ஸ்திரத்தன்மையைப் பாதிககாது. அரசைக் கொண்டுசெல்ல நாடாளுமன்றம் மட்டும் தேவை என்றில்லை. அங்கு எமக்கு முழுமையான பெரும்பான்மை இருக்கவேண்டும் என்றில்லை. சில சட்டதிட்டங்களை இயற்றவும் வரவு - செலவுத் திட்டத்தை நிறைவேற்றவும் அவற்றான ஒன்று தேவைதான். ஆனாலும், எம்மால் அது முடியுமென்றே நான் கருதுகிறேன். எனவே, சபையில் எம்.பிக்கள் எண்ணிக்கை குறைகிறது என்பதற்காக எமது ஆட்சி பாதிக்காது.

இந்தச் சந்தர்ப்பத்தில் தவறான, முட்டாள்தனமான தீர்மானத்தை மீள்பரிசீலனை செய்து, மக்களின் ஆணையைக் காட்டிக்கொடுக்காமல் மீண்டும் அரசுடன் சேர வருமாறு நான் ஜே.வி.பியிடம் கோருகிறோம்.

அவர்கள் வந்தாலும், வராவிட்டாலும் நான் மக்கள் ஆணையை நடைமுறைப்படுத்துவேன். இன்னும் ஒரு வருடமும் சில மாதங்களிலும் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது. அதில் எமது கட்சியில் யாரை நிறுத்தினாலும் எமது கட்சி வெற்றி பெறுவதற்கான செயற்பாடுகளை இப்போதிருந்தே ஜனநாயக ரீதியில் நாம் மேற்கொள்ளவேண்டியுள்ளது.

இன்று கூடுதலான, தேவைக்கதிகமாக ஜே.வி.பி. வசம் இருந்த அமைச்சர்களால் கொள்வனவுசெய்யப்பட்ட நெல்லை விற்க முடியாமல் பழுதடையும் நிலை ஏற்பட்டுள்ளது. 10 ஆயிரம் வாவிகளைப் புனரமைப்பதாகக் கூறி இதுவரை 300 வாவிகளே அவர்களால் புனரமைக்கப்பட்டுள்ளன. அவற்றிலும் நீர்க்கசிவு ஏற்பட்டுள்ளதாம். யார் இல்லாவிட்டாலும் எமது அதிகாரிகளைக் கொண்டு நாம் வேலைகளைத் தொடர்ந்து செய்வோம். நிதி எம்மிடமுள்ளது. அதிகாரிகளும் எமது அதிகாரிகளே. எனவே, நாம் திட்டமிட்ட வேலைகளைச் செய்வோம்.

### ஐ.தே.க. ஆதரவு

பொதுக்கட்டமைப்பு விடயத்தில் ஐ.தே.க. அரசுக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்க முன்வந்துள்ளதை நான் வரவேற்கிறேன்; பாராட்டுகிறோம். இவ்வாறான சந்தர்ப்பத்தில் கிடைக்கும் அந்த ஆதரவு போற்றுதற்குரியது.

பொதுக்கட்டமைப்புக்கு எதிராக, பரவலாகத் தேவையற்ற கதைகள் பரப்பிவிடப்பட்டுள்ளன.

இன்று திருமலையில் அசுத்தமான ஓர் இடத்தில் புத்தரின் சிலையை நிறுவியும், அறுகம்மை முஸ்லிம் பகுதிகளில் புத்தர் சிலைகளை நிறுவியும் இனங்களுக்கிடையே அமைதியின்மையை, குழப்ப நிலையை, மதவாதத்தைத் தூண்டிவிட சில சக்திகள் முயல்கின்றன. இதனை நாம் ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம். இந்தச் சிலை வைப்பதைப் புத்தபகவான்கூட விரும்பமாட்டார் என்பது இவர்களுக்குத் தெரியவில்லை.

### பிக்குகள் எதிர்ப்பு

பொதுக்கட்டமைப்பிற்கு எதிர்ப்புத் தெரிவித்து பிக்கு ஒருவர் தற்கொலை செய்ய முயன்றாராம். சாதாரண உதவி அரச அதிபர் ஒருவர் கையொப்பமிடவுள்ள நிர்வாகக் கட்டமைப்பிற்கெதிரான இந்த முயற்சி தேவைதானா? இது கௌரவமான இதர பிக்குமாருக்கும் ஏற்பட்ட இழுக்கு. ஜே.வி.பியின் ஆதரவாளர்களெனக் கூறுபவர்களும், சிங்கள உறுமயவின் ஆதரவாளர்களெனக் கூறுபவர்களும், முடிவளர்த்த பிக்குமார்கள் சிலரும் முன்னாள் பிரதிப் பொலீஸ்மா அதிபர் ஒருவருடன் எனது வாசஸ்தலத்தினுள் பிரவேசிக்க முற்பட்டனர்.

தூஷண வார்த்தைகளால் தூற்றியும், கத்தி எடுப்போம், பொல்லுகளை எடுப்போம் என்றும் கூக்குரலிட்டனர். நான் பௌத்த பீடாதிபதிகளுடன் கதைத்துக்கொண்டிருக்கும்போது, எனது உயிருக்கே அச்சுறுத்தல் விடுத்தனர்.

நான் ஜே.வி.பியினருக்கோ அல்லது வேறு எவருக்குமோ பயப்படவில்லை. எடுத்த முயற்சியைக் கைவிடப்போவதுமில்லை.

- இவ்வாறு ஜனாதிபதி மேலும் கூறினார்.

(க-3)








காரைநகர், கிழவன்காடு கலாமன்றம் நடத்திய கலைவிழா கடந்த 12ஆம் திகதி காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரியில் நடைபெற்றது.

இந்நிகழ்வை, தொழில் அதிபர் பே.நாகரத்தினம் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதை முதலாவது படத்திலும், கலர்மன்ற அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான பரிசில் வழங்குவதை இரண்டாவது படத்திலும் காணலாம். நல்லை ஆதீன முதல்வரும் அமர்ந்திருக்கிறார்.

கலாமன்ற ஆசிரியைகளும், மாணவிகளும் நிகழ்த்திய நாட்டியாஞ்சலி நிகழ்வை அடுத்துள்ள படத்தில் காணலாம்.

*(படங்கள்: காரைநகர் செய்தியாளர்)*

## பிரெஞ்சு திரைப்படவிழா இன்றுமுதல் 5 தினங்கள்

யாழ்ப்பாணம்,ஜுன்18

யாழ்.பிரெஞ்சு 'நட்புறவுக் கழகம் நடத்தும் பிரெஞ்சுத் திரைப்படவிழா இன்று சனிக்கிழமை தொடக்கம் 5 தினங்களுக்கு தினமும் பிற்பகல் 4 மணி தொடக்கம் 7 மணி வரை யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இந்தத் திரைப்பட விழாவில் ஐந்து பிரரெஞ்சுத் திரைப்படங்கள் ஆங்கில உப தலைப்புகளுடன் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

இன்று சனிக்கிழமை 'த சில்றண்ட் ஒவ் பரடைஸ்' என்ற படமும், எதிர்வரும் 22. ஆம் திகதி 'சினிமா பரடிஷோ' என்ற படமும் 25ஆம் திகதி 'த மைக்கிறேட்டறி பியூப்பிள்' என்ற படமும் 29 ஆம் திகதி 'டயலொக்ஸ் ஒவ் த கார்மைலைட் நனஸ்' என்ற படமும் அடுத்த மாதம் 2ஆம் திகதி 'த சண்' என்ற படமும் காட்சிப்படுத்தப்படவுள்ளன. (3-203)

## நூல்வரிசை - தொடர்ச்சி...

(7ஆம் பக்கத்திலிருந்து)

ஆறுமுகப் புலவர் பாடிய கோணமலை அந்தாதி கி.பி 1400 அளவில் பாடப்பட்டதாகும். தட்சணக்கைலாய புராணம், திரிகோணசல புராணம், மச்சபுராணம், திருக்ணோசல வெண்பா, திருக்கோணேசர் பதிகம். திருக்கரசைப்புராணம், கம்பைச் சரித்திரம், பெரியவளமைப் பத்ததி, கோணேசர் கல்வெட்டு முதலிய பல நூல்களையும் ஆசிரியர் எடுத்துக் காட்டியுள்ளார்.

எல்லாக் கோயில்களிலும் பல கடவுளுள் ஒருவராகச் சனீஸ்வரனை வைத்து வணங்குவது மரபு. எனினும், தமிழகத்தில் திருநள்ளாறு திருத்தலத்தில் மட்டும் தனியான சனீஸ்வரன் கோயில் இருப்பது போலத் திருக்கோணேஸ்வரத்திலும் தனியான சனீஸ்வரன் கோயில் அமைந்திருப்பதாக நூலாசிரியர் விளக்குகின்றார்.

திருகோணமலைக்கும் அரசர்களுக்குமிடையே இருந்த நெருங்கிய தொடர்புக்குச் சான்றாக இப்பகுதியில் பல இடங்களில் கல்வெட்டுக்களும் சாசனங்களும் கிடைத்துள்ளமையையும் நூலாசிரியர் சிறப்பாக விளக்கியுள்ளார். இங்கு காணப்படும் ஒரு சமஸ்கிருத சாசனத் தில் திருமலையின் பெயர் "கோகர்ண்ணே" என அமைந்துள்ளது. இது திருக்கோணேஸ்வரத்தைக் குறிக்கும் வடமொழிப் பெயர் என்பதை ஆசிரியர் விளக்கியுள்ளார். தமிழகத்துப் பல்லவர் காலம் முதலானவையாக இச்சான்றுகள் அமைந்துள்ளன. பல இயல்களிலும் ஆசிரியர் இவை பற்றி விளக்கியுள்ளார்.

சாது அப்பாத்துரை அவர்கள் யாழ்ப்பாணத்து யோகர் சுவாமிகளுடன் கொண்டிருந்த தொடர்பு நூலில் விளக்கப்பட்டுள்ளது. திருக்கோணேஸ்வரக் கோயிலுடன் மதுரை ஆதீன சோமசுந்தர ஞானசம்பந்த தேசிகரும் திருவாவடுதுறை ஆதீன சிவப்பிரகாசதேசிகரும் குன்றக்குடி ஆதின குன்றக்குடி அடிகளாரும் கோணேஸ்வர கோயிலுடன் கொண்டிருந்த தொடர்புகளும் இந்நூலில் விளக்கப்பட்டுள்ளன.

திருக்கோணேஸ்வர திருத்தலயாத்திரை ஒரு சிறந்த நூலாகும். கோயில் வரலாற்றை மட்டுமன்றி ஈழத்தமிழர் வரலாற்றையும் இந்நூல் சிறப்பாகக் குறிப்பிடுகின்றது. இத்துறைகளில ஆர்வமுள்ளவர்களும் பக்திநெறியில் ஆர்வமுள்ளவர்களும் இப்பெருநூலைத் தவறாது படித்துப் பயன்பெற வேண்டும்.

**மயிலங்கூடலூர்**
**பி.நடராசன்.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 12 - 08 - 1939 | 18 - 06 - 2004 |



**அமரர் சுந்தரமூர்த்தி திருநடராஜா**

(ஓய்வுபெற்ற M.L.T. நிறுவுநர் - மெடிக்குயிக் தனியார் நிறுவன ஆய்வுகூடம்)

ஆண்டு ஒன்று ஆனபோதும் ஆறவில்லை எம்மனம்
ஈண்டு உமது நிறைவாகவே நாமிங்கு வாழ்கின்றோம்
மாண்டு நீர் போனதால் மனக்கலக்கம் அடைகின்றோம்
ஆத்மா சாந்திபெற ஆண்டவனை வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

574, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (36663)(21
மெடிகுயிக் தனியார் நிறுவனத்தினர் யாழ்.கிளை

## நீங்காத நினைவில் 7ஆம் ஆண்டு

தாய் மடியில் 20.01.1977
தாயக மடியில் 20.06.1998



**2ம் லெப். இளங்குமரன்**
**(வேலாயுதம் சிவபாலன்)**

20-06-2005 திங்கட்கிழமை நண்பகல் எமது இல்லத்தில் நடைபெறும் அஞ்சலி நிகழ்விலும், மதிய போசனத்திலும் உறவினர், நண்பர்கள், சகபோராளிகள் அனைவரையும் கலந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

மேலும் இவருடன் வீரச்சாவடைந்த ஏனைய மாவீரர்களுக்கும் இவ்வேளை எமது அஞ்சலிகள்.

(36650) (54-15-17)

செருக்கப்புலம் லேன்,
கோண்டாவில் கிழக்கு.

பெற்றோர். சகோதரர்.

## சுருக்குக் கதவு விற்பனைக்குண்டு

எம்மிடம்

| உயரம் | | அகலம் | |
|---|---|---|---|
| 10′ | x | 15′ | ஒரு சுருக்குக் கதவும் |
| 8′ | x | 15′ | 2 சுருக்குக் கதவும் |

விற்பனைக்குண்டு

தொடர்பு: **156, K.K.S. Road,**
மனோகரா சந்திக்கு அருகில்
யாழ்ப்பாணம்.
T.P.: 0777 286069

(36652) (21-15-18)

## நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்

| இகம் | பரம் |
|---|---|
| 01 - 08 - 1914 | 15 - 05 - 2005 |



**திருமதி சிவபாக்கியம் பதஞ்சலி**

தாயும் நீ தந்தையும் நீ - அனுதினமும்
ஓயாதுழைத்த சற்குருவும் நீயே!
சாலப் பரிந்தூட்டும் நிமலனும் நீயேயன்றோ?
வாழ்நாள் முழுதும் நின் கழலடி போற்றுவோமே.

எமது வாழ்க்கையின் கலங்கரை விளக்கமாக வாழ்ந்து மறைந்த அமரஜோதி திருமதி சிவபாக்கியம் பதஞ்சலி அவர்களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இன்று (18.06.2005) சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்துகொள்வதுடன், தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் பங்குகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

காங்கேசன்துறை சாலை,
இணுவில். (36667)(21-32-14-13)

- நன்றியுடன்:
குடும்பத்தினர்.

## ஓராண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 10 - 05 - 1955 | 28 - 06 - 2004 |



அமரர்

**கணபதிப்பிள்ளை இராசேந்திரம் (ராசு)**

(தனுசன் நகைத் தொழிலக உரிமையாளர்)

ஆண்டு ஒன்று போனதா? ~ அப்பா
ஆறவில்லை எம் இதயம்
இன்று வரை நம்ப முடியவில்லை ~ நீங்கள்
இறைவனடி சேர்ந்தீரென்று!

வாழ்ந்திடும் காலமெல்லாம்
மறப்போமா உம் முகத்தை?
வருந்தி நாம் அழைக்கின்றோம்
திரும்ப வந்து சேர்ந்திடுவீர்!

**மனைவி, பிள்ளைகள்.**

நிரந்தர முகவரி:
4ஆம் வட்டாரம்,
மண்டைதீவு, யாழ்ப்பாணம்.

தற்காலிக முகவரி:
இல.132, ஆத்திசூடி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

(36664)(21-14-15)

## விண்ணுலக வாழ்வின் 31 ஆம் நாள் நினைவஞ்சலி

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 29 - 12 - 1961 | 19 - 05 - 2005 |



**அமரர் இக்னேசியஸ் கிளேனி (பர்னாண்டோ)**

வாழ்வில் வழிகாட்டி ஒளியூட்டி எம்மை வாழவைத்தவரே!
எம்மைப் பார்ப்பதற்கு ஆசையுற்றவேளை அந்தக் காலன்
உம்மைக் கவர்ந்து சென்றதேனோ? உங்கள் புன்னகை
ஒளி சிந்தும் இன்முகத்தைக் காட்டாமல் எங்களைக்
காலமெல்லாம் கலங்கவிட்டுச் சென்றதேனோ?

சுவிஸில் வாழ்ந்து வந்த நீங்கள் யாழ்நகரில் உங்கள்
மனைவியைத் தனியாகத் தவிக்கவிட்டுச் சென்றதேனோ?
அன்பாய் ஆதரவாய் பண்பாய் பலருடன் பழகினீரகளே!
பழகிய உறவுகளைப் பாரில் பரிதவிக்கச் செய்ததேனோ?
உங்கள் ஆத்மா அமைதி பெற உளமாரப் பிரார்த்திக்கின்றோம்.

எங்களது குடும்ப விளக்கு அணைந்த செய்தி கேட்டு உடன் உதவி புரிந்தவர்களுக்கும் மற்றும் தந்தி. தபால், தொலைபேசி மூலம் அனுதாபந் தெரிவித்தோருக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவி ஒத்தாசை புரிந்தவர்களுக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் அஞ்சலி நிகழ்வும் இன்று (18.06.2005) சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் குழந்தை இயேசு (ஆச்சிரமம்) ஆலயத்தில் நடைபெறுகின்றது. இந்த நிகழ்வுகளில் கலந்துகொள்ளுமாறு உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். அத்துடன். அன்னாரின் இல்லத்தில் இன்று மதியம் நடைபெறுகின்ற மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

09, பழைய பூங்கா வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். (36648) (42-21-14-13)

அன்பு மனைவி **சாந்தி**




சேது சமுத்திரத்திட்டம் குறித்து கிளிநொச்சியில் இடம்பெற்ற ஆய்வுப்பட்டறையின் ஆரம்பநிகழ்வில் தமிழீழத் தேசியக்கொடி மற்றும் ஈகச்சுடர்கள் ஏற்றப்படுவதையும் நிகழ்வில் பங்கேற்ற துறைசார் வல்லுநர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்: சேந்தன்)

# சேது சமுத்திரத்திட்டம் தொடர்பாக கிளிநொச்சியில் ஆய்வுப்பட்டறை

கிளிநொச்சி,ஜூன்18

சேது சமுத்திரத்திட்டத்தினால் இலங்கைக்கு குறிப்பாகத் தமிழர் தாயகப் பிரதேசத்துக்கு ஏற்படக்கூடிய சாதக, பாதகங்களை ஆராய்வதற்கான ஆய்வுப்பட்டறை கடந்த திங்கட்கிழமை கிளிநொச்சியில் இடம்பெற்றது.

தமிழீழ பொருண்மிய நிறுவன மதியுரையகத்தில் நடைபெற்ற இந்த ஆய்வுப் பட்டறைக்கு பொருண்மிய மதியுரையகப் பணிப்பாளர் மா.சுந்தரமூர்த்தி தலைமைவகித்தார்.

இதில் ஆரம்ப நிகழ்வாக ஈகச்சுடரினை. பிரிட்டனைச் சேர்ந்த திருமதி எலிசமான் ஏற்றினார். அடுத்து தேசியக்கொடியை திட்டமிடலுக்கும் மேம்பாட்டுக்குமான செயலகப் பொறுபபாளர் ரஞ்சன் ஏற்றினார்.

இதனைத் தொடர்ந்து ஆய்வுப்பட்டறை இரு அமர்வுகளாக இடம்பெற்றது.

முதலாவது அமர்வில் வடக்கு - கிழக்கு சூழல் பாதுகாப்பு ஆய்வறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. 2003ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் முதல் வாரத்தில் யாழ்.பல்கலைக்கழகமும் கிழக்குப் பல்கலைக்கழகமும் இணைந்து நடத்திய சூழல் பாதுகாப்பு பற்றிய கருத்தரங்கில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளின் தொகுப்பு வெளியிட்டு வைக்கப்பட்டது.

தொடர்ந்து இரண்டாம் அமர்வில் பொருண்மிய மதியுரையகத்தின் ஆலோசகர் ஆர்.நிமலன் கார்த்திகேயன் உள்ளடக்க உரையாற்றினார்.

அதனைத் தொடர்ந்து துறைசார் வல்லுநர்கள் மற்றும் அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகளும் இணைந்து கருத்துப் பரிமாற்றங்களை நிகழ்த்தினர்.

இதில் சேது சமுத்திரத்திட்டம் தொடர்பான சாதக, பாதகங்கள் ஆராயப்பட்டன. தொடர்ந்து யாழ்.பல்கலைக்கழகப் பேராசிரியர் சூசைஆனந்தன் சேது சமுத்திரத்திட்டம் குறித்து விளக்கவுரை ஆற்றினார். இடைவேளையை தொடர்ந்து கலந்துரையாடல் இடம்பெற்றது. இறுதியில் பொருண்மியம் மதியுரையகத்தின் திட்டமிடலிற்கான இணைப்பாளர் மனோகரனின் நன்றியுரையுடன் நிகழ்வு நிறைவடைந்தது. (ஓ-305)

## நிறுத்தலளவைகளுக்கு முத்திரையிடும்பணி

கிளிநொச்சி,ஜூன்18

பளைப் பிரதேசத்தில் பயன்பாட்டிலுள்ள நிறுத்தலளவைக் கருவிகளைச் சரிபார்த்து அவற்றுக்கு முத்திரையிடும் பணி நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த முத்திரையிடும் பணிகள் எதிர்வரும் 25ஆம் திகதிவரை பளை வருவாய்ப்பகுதி அலுவலகத்தில் இடம்பெறும் என்றும் -

நிறுத்தலளவைக் கருவிகளைப் பயன்படுத்தும் அனைவரும் குறித்த நாள்களில் அவற்றுக்கு முத்திரையிட்டுக் கொள்ளுமாறும் -

வருவாய்ப் பகுதியின் நிறுத்தலளவைப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (ஓ-203)

## சோலர் மின்கலம் அன்பளிப்பு

கனடாவில் வசித்துவரும் சுப்பிரமணியம் குடும்பத்தினரும் இராசரட்ணம் குடும்பத்தினரும் இணைந்து ஆரோக்கியபுரத்திலுள்ள அன்பு தாய்சேய் போசாக்கு நிலையத்திற்கு சூரிய மின்கலத் தொகுதியொன்றினை அன்பளிப்புச் செய்தனர். (ஓ-381)

கிளிநொச்சி வன்னிச் செய்திகள் முல்

# மீன்பிடிப் படகுகள் கையளிப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆழிப் பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்கள் 50 பேருக்கு கண்ணாடியிழை மீன்பிடிப் படகுகள் வழங்கப்பட்டன. இப்படகுகளை கரித்தாஸ் கியூடெக் நிறுவனம் வழங்கியது.

இப்படகுகளைக் கையளிக்கும் வைபவம் கடந்த 4ஆம் திகதி கரித்தாஸ் கியூடெக் உதவி இயக்குநர் அருட்திரு.பீற்றர் அடிகளார் தலைமையில் முல்லைத்தீவில் இடம்பெற்றது.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கனகரட்ணம், கரித்தாஸ் கியூடெக் இயக்குநர் அருட்தந்தை ஜெயக்குமார் அடிகளார், கரித்தாஸ் பிரான்ஸ் அமைப்பைச் சேர்ந்தவர்களான மேரிக்கரோலின் வில்லியம் அம்மையார், டொமினிக், முல்லைத்தீவு மாவட்ட வைத்திய சாலை மருத்துவர் தர்மேந்திரா ஆகியோர் உட்படப் பலரும் இதில் கலந்துகொண்டனர்.

தற்போது கையளிக்கப்பட்ட படகுகளுக்கான வெளியிணைப்பு இயந்திரங்களும், மீன்பிடி வலைகளும், விரைவில் வழங்கப்படவுள்ளன என்றும் -

மேலும் 150 பேருக்கு கண்ணாடியிழைப் படகுகள், அவற்றுக்கான வெளியிணைப்பு இயந்திரங்கள், வலைகள் ஆகியவை வழங்கப்படவுள்ளன என்றும் - மேற்படி நிறுவனத்தினர் தெரிவித்தனர். (ஓ)



முல்லைத்தீவில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கு படகுகள் கையளிக்கும் நிகழ்வின் ஆரம்பத்தில் கரித்தாஸ் பிரான்ஸ் அமைப்பின் மேரி கரோலின் வில்லியம் சுடரேற்றுவதைப் படத்தில் காணலாம்.

# பூதன்வயலில் வீர முரசம் நிகழ்வு

கிளிநொச்சி,ஜூன்18

முள்ளியவளை பூதன்வயல் கிராமத்தில் கடந்த திங்கட்கிழமை வீர முரசு நிகழ்வு நடைபெற்றது.

ஆறுமுகத்தான் குளம் மாலைநேரக் கல்வி ஊரக வளர்ச்சிப்பணி ஆசிரியை தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பொதுச்சுடரை முள்ளியவளை பிரதேசப் பொறுப்பாளர் முல்லை வீரன் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து மாவீரர்களின் திருவுருவப் படங்களுக்கு அவர்களின் பெற்றோர்கள் மலர் மாலை அணிவித்து ஈகச்சுடர் ஏற்றினர்.

இந்நிகழ்வில் பூதன்வயல் கிராம ஊரக வளர்ச்சிப் பணித் தலைவர், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கனகரத்தினம், முல்லைத்தீவு மாவட்ட கடற்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் ரங்கன் ஆகியோர் கருத்துரைகள் வழங்கினர். (ஓ-203)

# கிளிநொச்சியில் இரத்ததானம்

கிளிநொச்சி,ஜூன்18

உலக இரத்ததான தினத்தையொட்டி தமிழர் புனர்வாழ்வுக்கழகத் தொண்டர்கள் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் இரத்த தானம் செய்தனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலை வைத்தியர் பிறைற்றன் முன்னிலையில் அவர்கள் இரத்ததானம் வழங்கினர்.

இரத்ததானம் செய்தவர்களுக்கான சான்றிதழ்களை வழங்கிக் கருத்துத் தெரிவித்த வைத்தியர் பிறைற்றன் தமிழர் புனர்வாழ்வுக் கழகத் தொண்டர்களின் இந்த மனித நேயப் பணியானது வரவேற்கத்தக்கதும் பாராட்டுக்கும் உரியதாகும்.

இதுபோன்ற மனிதாபிமானப் பணிகளைச் செய்வதற்கு ஏனைய நிறுவனங்களும் முன்வர வேண்டும் - என்றார். (ஓ-203)

# சுனாமி புனரமைப்புத் திட்டத்தின் அறிமுக நிகழ்வு வத்திராயனில்

திருவையாறு,ஜூன்18

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் வடமராட்சி கிழக்கில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான மூன்றாம் கட்டப் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ளவுள்ள அரசசார்பற்ற நிறுவனங்களையும், திட்டங்களையும் பயனாளிகளுக்கு அறிமுகப்படுத்தும் நிகழ்வு சமீபத்தில் வத்திராயன் அரசடியில் இடம்பெற்றது.

இந்தத் திட்ட அறிமுகநிகழ்வில் செயலணி இணைப்பாளர் யாழமுதன், திட்டமிடல் செயலகப் பணிப்பாளர் ரஞ்சன், பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் நிலவன், 'ஒக்ஸ் பாம்' நிறுவன இணைப்பாளர் மார்டின் லிண்டர்ஸ், ஏ.எஸ்.பி. நிறுவனப் பிரதிநிதி மார்டின், பிரதேச செயலாளர் ஜெயசீலன் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

வத்திராயன், அரசடியில் ஏ.எஸ்.பி. நிறுவனம் நிரந்தர வீடுகளை அமைக்கவுள்ளது. 'ஒக்ஸ் பாம்' நிறுவனம், குடிதண்ணீர், சுகாதாரம், சமூக மேம்பாடு ஆகியவற்றுற்கான திட்டங்களை முன்னெடுக்கவுள்ளது. அத்துடன், பொதுநோக்கு மண்டபம் ஒன்றையும் அது கட்டி வழங்கவுள்ளது.

இத்திட்டங்கள் பயன்பெறும் பகுதி மக்களின் கருத்துகளுக்கு ஏற்ப அமையவேண்டும் என்றும் -

இந்தத் திட்டங்களால் முழுமையான பயன் ஏற்பட பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் -

இந்த நிகழ்வில் கலந்துகொண்டவர்கள் வலியுறுத்தினார்கள்.

இதேசமயம், மேற்படி திட்டங்களுக்கான நிலஅளவைப் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கான 3ஆம் கட்டப் புனரமைப்புப் பணிகள் தொடர்பாக அறிமுகம் மற்றும் மக்கள் கருத்தறியும் நிகழ்வுகள் தொடர்ச்சியாக நடத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஓ-393)

# கால்நடை வளர்ப்போர் கவனத்துக்கு!

பிரதான வீதிகளில் நடமாடும் கால்நடைகள் வாகனங்களில் மோதுண்டு பாதிப்படையும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன என்றும் -

ஆகவே, கால்நடை வளர்ப்போரும் இது தொடர்பில் அக்கறை எடுக்கவேண்டும் என்றும் -

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கிளிநொச்சிப் பிரதேச இணைப்பாளர் சி.சிவனேசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கடந்த புதன்கிழமை கிளிநொச்சியில் ஏ-9 வீதியின் குறுக்கே சென்ற பசு ஒன்று லொறியுடன் மோதுண்டதில் உயிரிழந்த சம்பவத்தையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஓ-305)

# அபிவிருத்திப் பணி குறித்த கலந்துரையாடல்

வடமாகாணத்தின் அபிவிருத்தி வேலைகளை முன்னெடுப்பது தொடர்பான கலந்துரையாடல் சமீபத்தில் கிளிநொச்சியில் உள்ள தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் நடுவப்பணியகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவேண்டிய வேலைத்திட்டங்கள் தொடர்பாக இக்கலந்துரையாடலில் ஆராயப்பட்டது.

மேற்படி கலந்துரையாடலி வடமாகாணத்தின் ஐந்து மாவட்டங்களைச் சேர்ந்த கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் பெரும்பாக உத்தியோகத்தர்கள், திணைக்கள உதவி ஆணையாளர்கள், விடுதலைப் புலிகளின் துறைசார்ந்த பொறுப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஓ)

# பிரதேச அபிவிருத்தி குறித்து ஸ்கந்தபுரத்தில் கருத்தரங்கு

ஸ்கந்தபுரம்,ஜூன்18

ஸ்கந்தபுரம் பிரதேச அபிவிருத்தி தொடர்பான ஆய்வுக்கருத்தரங்கு சமீபத்தில் பிரதேச செயலக ஸ்கந்தபுரம் உபபணிமனையில் இடம்பெற்றது.

உப அலுவலகப் பொறுப்பதிகாரி க.மகேந்திரம் தலைமையில் இடம்பெற்ற இக்கருத்தரங்கில் கரைச்சிப் பகுதிக்கான விசேட ஆணையாளர் பொன்நித்தியானந்தன் ஐநா.அபிவிருத்தித் திட்ட நிறுவன முகாமையாளர் சண்முகலிங்கம் ஆகியோரும் கிராமிய சமூகத் தொண்டு நிறுவனங்கள், மற்றும் பொது அமைப்புகள் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

பொதுக்கிணறு, விளையாட்டுக்கழகம், முன்பள்ளி முன்மாதிரிக்கட்டடம், ஆகியவற்றை அமைப்பது, சனசமூகநிலையப் புனரமைப்பு, பொது நூலகத்திற்கு நூல்கள் வழங்குவது ஆகியவை தொடர்பாக இந்த ஆய்வுக் கருத்தரங்கில் ஆராயப்பட்டது. (ஓ-381)

## நயினை ஆலயத்திற்கு விசேட பஸ் சேவை

யாழ்ப்பாணம்,ஜூன்18

நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அம்பாள் ஆலய விசேட உற்சவ தினங்களை முன்னிட்டு நாளை மறுதினம் முதல் 24ஆம் திகதி வரை யாழ்.பஸ்நிலையத்திலிருந்து குறிகட்டுவான் படகுத்துறை வரை 15 நிமிடங்களுக்கு ஒரு தடவை பஸ்சேவை இடம்பெறும் என்று வட பிராந்திய போக்குவரத்துச் சபை அறிவித்துள்ளது. (ஒ)

# இளங்கலைஞர் மண்டபத்தில் திங்களன்று பேராளர் மாநாடு

யாழ்ப்பாணம்,ஜூன்18

தேசிய எழுச்சிப் பேரவையின் யாழ். மாவட்ட பேராளர் மாநாடு நாளை மறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நாளை ஞாயிறன்று நடைபெறவிருந்த பேராளர் மாநாடு யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ள 'தமிழீழ தேசியத்தின் குரல்' நிகழ்வை முன்னிட்டு நாளைமறுதினம் திங்கட்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டதாக தேசிய எழுச்சிப் பேரவையின் மாவட்டச் செயலாளர் சொலமன் சூ.சிறில் தெரிவித்தார். (எ-17)

## வீதிகளைப் புனரமைக்க நிதி ஒதுக்கீடு

சாவகச்சேரி நகரசபை மூன்று வீதிகளைப் புனரமைப்புச் செய்வதற்கு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. அம்மன் வீதி, உப்புக்கேணி வீதி, செருக்கல் பிள்ளையார் வீதி ஆகியனவே இவ்வாறு புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

மேலும் சாவகச்சேரி பொதுச்சந்தையில் திறந்த வெளிச்சந்தை ஒன்றை அமைப்பதற்கும் - நகரசபை வளவினுள் வாகனங்களுக்கான தரிப்பிடம் ஒன்றை அமைப்பதற்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளதாக நகரசபை வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-170)




சிவமயம்

இணுவில் விசாலாட்சி சமேத விஸ்வேஸ்வர சுவாமி திருக்கோயிலில்

ஏகாதச ருத்திர ஹோம பெருஞ்சாந்தி விழா

நாளை (19.06.2005) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் 1 மணிவரை மேற்படி பெருஞ்சாந்தி விழா நடைபெறும்.

பிரதம குரு
பிரம்ம ஸ்ரீ - தாணு. வாசுதேவக்குருக்கள்
(சட்டநாதர் சிவன் பிரதம குரு ஆலய பிரதம குரு)

ஆலய குரு.
பிரம்மஸ்ரீ வா.ஜெனார்த்தனசர்மா

உதவிக்குரு
பிரம்மஸ்ரீ வா : ஜெயவஸ்தாங்க சர்மா
பிரம்மஸ்ரீ வா . விஸ்ணுவர்த்தன சர்மா

உபயம்
திரு. சிவ வெற்றி வேலாயுதம் குடும்பம். (நல்லூர்).
திரு. வை . செல்லத்துரை குடும்பம். (மாவிட்டபுரம்).

தர்மகர்த்தா
சி. பரமேஸ்வரன்

அனைவரும் வருக சிவன் தாழ் பணிக

(36611)(51-45-15)


உ

சுருவில்

# ஸ்ரீ பூர்ணா புஷ்கலாதேவி சமேத அரிகரபுத்திர ஐயனார் ஆலய புனராவர்த்தன பிரதிஷ்டா

# மகா கும்பாபிஷேகப் பெருவிழாச் சிறப்புமலர்



அங்கண் மேவி அரிகரபுத்திரன்
சங்கை யில் பெருஞ் சாரதர் தம்மொடும்
எங்குமாகி இருந்தெவ்வுலகையுங்
கங்குலும் பகல் எல்லையுங் காப்பனால்.

- கந்தபுராணம்

## அண்டினோரை ஆதரிக்கும் அரிகரபுத்திர ஐயனின் ஆலய வரலாற்றுச் சுருக்கம்

### ஐயனார் ஆலய அற்புத மகிமை

சைவமும் தமிழும் தழைத்தோங்கும் சிவ பூமியான இயற்கை எழிலுடன் கூடிய தர்ம சிந்தனை மிக்கோர் வாழும் சுருவில் பதியிலே தம்மை வழிபடும் அடியார்களின் துயர்போக்கி அருள்பாலித்து நிற்கின்றார் ஸ்ரீ பூர்ணா புஷ்கலாதேவி சமேத அரிகரபுத்திர ஐயனார்.

முந்தை வினைபோக்கும் சிந்தைக்கினிய பெருமான் ஐயனார் இந்த ஆலயத்தில் வீற்றிருந்தருளி எல்லோருக்கும் அருள்பாலித்தருளுகின்றார். பரங்கருணைத் தடங்கடலான பரமேஸ்வரனாகிய சிவபெருமானுக்கும் உலகைக் காக்கும் பரம்பொருளாக விளங்குகின்ற மோகினி வடிவம் பெற்ற ஸ்ரீ மந்நாராயணனுக்கும் திருக்குமரனாக அவதரித்த ஹரிஹர புத்திரனார் முகத்தில் புன்சிரிப்புடன் இரு தேவிமார்கள் பக்கத்தே அமர்ந்திருக்க அருட் காட்சி தருகின்ற எழிற்காட்சிக்கு நிகரேயில்லை.

அமைதியான இயற்கையழகு சூழ்ந்த கடற் கரையோரத்தில் இந்த ஐயனார் ஆலயம் அமைந்துள்ளது. வடக்கு வீதியிலே தலவிருட்சமாக ஓர் ஆலமரம் அழகாகக் காட்சி தருகிறது. கோயிலைச் சுற்றித் தென்னஞ் சோலை.

சுருவில் கிராமத்தின் மத்தியில் உள்ள "கற்காண்டை" என்னும் ஆதனத்தில், இற்றைக்கு ஏறக்குறைய 200 வருடங்களுக்கு முன் அவ்வூரில் சீவித்த சிதம்பரநாதர் இராமலிங்கம் என்பவரால் இந்த ஆலயம் ஸ்தாபிக்கப் பெற்றதாகக் கூறப்படுகிறது. அவருக்குப் பின் அவரது புத்திரர் சங்கரப்பிள்ளை இந்த ஆலயத்தை நிர்வகித்து வந்தார்.

அதன்பின்னர் பலபல உரிமையாளர்களிடம் நிர்வாகம் ஒப்படைக்கப்பட்டது. சில காலஞ்செல்ல பலரது முயற்சியால் பரிபாலன சபை ஒன்று உருவாக்கப்பட்டு நிர்வாகம் நடைபெற்றது. இதன் பின்னர் நல்லமுறையில் நடைபெற்று வந்த ஆலயம் நன்கு வளர்ச்சி பெற்றுச் சிறப்புற்றது.

சுருவிலார் மக்கள் பலர் கொழும்பு வர்த்தகர்களாகக் காணப்பட்டதனால் கிளை ஒன்று நிறுவப்பட்டது. அந்தவகையில், இளையதம்பி நல்லதம்பி என்பவரது பெருமுயற்சியினால் 05.04.1959 இல் கிளை ஆரம்பிக்கப்பட்டது. அதையடுத்து திருப்பணிச் சபை ஒன்று உருவாக்கப்பட்டு திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. கோமுகைக் கல்லொன்றைச் செதுக்கும்போது செதுக்கிய ஆசாரியாருக்குக் காலில் காயம் ஏற்பட்டிருந்தது. கோமுகைக் கல் வைத்துக் கட்டவேண்டிய சுபநாளும் வந்தது. காயத்தினால் நடக்க முடியாதிருந்த ஆசாரியாரின் கனவில் ஒரு பெரியவர் கையில் பிரம்புடன் தோன்றி, அந்தப் பிரம்பினால் அவரது காலிலுள்ள காயத்தைத் தடவி "கோமுகைக் கல்லை உடனே சுருவிலுக்குக் கொண்டு வா" என்று கூறி மறைந்தார். கனவினால் திடுக்குற்றெழுந்த ஆசாரியாரின் பாதம் சுகமாகிக் காயம் மாறி நடக்ககூடிய நிலையில் இருந்ததைக் கண்டு ஆச்சரியமடைந்தார். உடனே ஆனந்த மேலீட்டினால் மாட்டுவண்டியில் கோமுகைக் கல்லுடன் புறப்பட்டு நல்லநாளிலே கோயிலைச் சென்றடைந்து ஐயனாரின் திருவிளையாடலை எடுத்துக்கூறி மகிழ்ந்ததாகச் சொல்லப்படுகிறது.

இது மாத்திரமன்றி, யோசேப்பு என்பவர் முருகைக் கற்களைச் [illegible]க்கிக் கொண்டிருந்த வேளை கோயிலின் மேற்குப் பக்கமாகக் கட[illegible] ஒரு தோணி வருவதைக் கண்டார். அதிலிருந்து ஓர் ஆணும் இரு பெண்களும் இறங்கி யோசேப்பை நோக்கி விரித்த குடையுடன் வரவே, உற்றுக்கவனித்தார். தான் என்றுமே கண்டிராத தோற்றப்பொலிவுடன் வந்த அந்த மூவரும் யோசேப்பைக் கடந்து தெற்குப் பக்கமாகக் கோயிலுக்குள் செல்ல யோசேப்பும் அவர்களை அவதானித்தபடி பின்னே சென்றார். மூவரும் கோயிலுக்குள்ளே சென்றதும் மறைந்துவிட்டார்கள். யோசேப்பின் கண்களுக்கு அவர்கள் தென்படவில்லை.

அதனால் ஏக்கமும் அதிசயமும் அடைந்த யோசேப்பு கடற்கரையில் நின்ற தோணியைப் பார்த்தார். அதுவும் மறைந்துவிட்டது. உடனே பயத்தினால் நடுநடுங்கிய யோசேப்பு ஓலமிட்டபடி கோயிற் குருக்களின் வீட்டுக்கு ஓடிச்சென்று நடந்ததைத் தடுமாற்றத்துடன் கூறினார். அதுகேட்ட குருக்கள், வந்தது வேறு யாருமல்ல; நமது அன்புத் தெய்வமான ஹரிஹரபுத்திரரும் தேவியருமே என்று கூறி ஐயனாரின் திருவிளையாடலை நினைத்து மகிழ்ந்தனர். "சுருவில்தம்பி" என அழைக்கப்படும் விஸ்வலிங்கம் சிதம்பரப்பிள்ளையின் ஊக்குவிப்பால் -

இத்தகைய பெருமைவாய்ந்த இந்த ஐயனார் ஆலயம் கட்டப்பட்டது. அத்துடன், சுருவில் வாழ் மக்களின் பெருமுயற்சியினாலும் வெளிநாட்டு நிதியுதவியினாலும் சுருவில் சைவ அபிவிருத்திச் சபைப் பொருளாளர் திரு.தாமோதரம்பிள்ளை கனகசுந்தரம் அவர்களின் விடாமுயற்சியினாலும் 25-04-2005 பாலஸ்தாபனம் செய்யப்பட்டு அதிவிரைவிலேயே திருப்பணிகள் முடிவுற்று இப்போது கும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள் கைகூடியுள்ளது. அதன்பயனாக 20-06-2005 திங்கட்கிழமை காலை புனராவர்த்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் நடைபெறுவது ஐயனாரின் திருவருளே! எனவே, ஐயனாரின் அடியார்கள் அனைவரும் வருகைதந்து காவல் தெய்வமான ஐயனாரை வழிபட்டு பேரானந்தப் பெருவாழ்வை அடையுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

இந்த ஆலயத்தில் எழுந்தருளி வீற்றிருந்து அருள்பாலிக்கும் ஐயனார் தீராத வினைகளெல்லாம் தீர்த்துவைப்பார். மாறாத நோய்களெல்லாம் மாற்றிவைப்பார். ஆறாத வேதனையெல்லாம் நீக்கிவைப்பார். நம்பிக்கையுடன் வழிபட்டால் நிச்சயம் அருள் கிடைக்கும். வெற்றிப் பாதையில் வீரநடை போடுவீர்கள்.

"ஐயனாரைச் சரணடைந்தால் எம் வினை பறந்தோடி விடும்"

**சிவநெறிக் கலாநிதி இராசையா ஸ்ரீதரன்**
**கிராம அலுவலர் மு.விஜயரத்தினம்.**

ஆலய வர்ண வேலைகள்: **திருநெல்வேலி ரவி, சுன்னாகம் நேசன்**

### கிரியாகால விவரம்

18-06-2005 சனி மாலை 5 மணிமுதல் யாகாரம்பம், ஹோமங்கள்
19-06-2005 ஞாயிறு காலை 8 மணிமுதல் மாலை 5 மணிவரை பக்தர்கள் எண்ணெய்க் காப்புச் சாத்துதல்
20-06-2005 காலை 7 மணிமுதல் யாகபூசை, ஹோமம், மகாபூர்ணாகுதி, தீபாராதனை, கும்பப் பிரத ஷணம்.
9.30 மணிக்கு தூபி அபிஷேகம், தானம், கிரகப்பிரீதி
10.00 மணிக்கு மகாகும்பாபிஷேகம், பரிவார மூர்த்திகள் அபிஷேகம், எஜமான் அபிஷேகம், தசமங்கள தர்சனம், ஆசீர்வாதம், ஆசியுரைகள்.
11.00 மணிக்கு மகா அபிஷேகம் தொடர்ந்து பூஜை
நண்பகல் அன்னதானம் நடைபெறும்.

பிரதிஷ்டா பிரதம குரு
**முத்தமிழ்க் குருமணி சிவஸ்ரீ நா.சர்வேஸ்வரக் குருக்கள்**
(சுன்னாகம் கதிரைமலைச் சிவன் கோயில்)

சுருவில் சைவ அபிவிருத்திச் சபையின் தலைவர் த.சண்முகலிங்கம், உப தலைவர் திரு.மாணிக்கம் தவயோகராஜா மற்றும் செயலாளர் தாமோதரம்பிள்ளை கனகசுந்தரம் , பொருளாளர் நா.பேரின்பநாயகம், க.கந்தசாமி ஆகியோரதும் இன்னும் வெளிநாட்டில் வசிக்கும் சுருவில் கிராமத்து பலரது முயற்சியாலும் இக்கும்பாபிஷேகம் சிறப்புற நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

**தொடர்ந்து 15 தினங்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும்.**
**கொடியேற்றம் 06-07-2005 புதன்கிழமை**
**இரதோற்சவம் 14-07-2005 வியாழக்கிழமை**

- சுருவில் -

**சைவ அபிவிருத்திச் சபை**

# மாகாண மட்ட வலைபந்தாட்டம்
# இன்றும் நாளையும் கிளிநொச்சியில்
## எட்டு அணிகள் பங்குபற்றுகின்றன

கிளிநொச்சி,ஜூன்18

வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் பிரதேச செயலகங்களுக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் நடத்தப்பட்டுவரும் பெண்களுக்கான வலைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் இன்றும் நாளையும் கிளிநொச்சி பொதுமைதானத்தில் இடம்பெறவுள்ளது.

எட்டு மாவட்டங்களிலும் நடத்தப்பட்ட போட்டிகளில் முதலிடம் பெற்ற அணிகள் இந்த ஆட்டத்தில் பங்குபற்றுகின்றன.

எட்டு அணிகளும் இன்றும் நாளையும் மோதி சம்பியன் அணியைத் தெரிவுசெய்யும்.

இந்தப் போட்டியில் பங்குபற்றும் யாழ். மாவட்ட அணி நேற்று கிளிநொச்சிக்குச் சென்றது.

அந்த அணியில் இடம்பெறுவோர் விவரம் வருமாறு:

மாலினி மகாலிங்கம் (அணித் தலைவி), வாசுகி திருநாவுக்கரசு (அணி உபதலைவி), அஜந்தா சிவலிங்கம், திலந்தி பாலசிங்கம், சங்கீதா திருச்செல்வம், கௌசிகா சோமசுந்தரம, சுகித்தா தில்லைநாதன், நித்தியா இரஜரெட்ணம், றொபின்ட ஜோன் விக்டர், அபித்தா சிவசூரியா, ஜீத்தா சிவகுமாரன், நிஷாந்தி குலசேகரம்.

இநத அணியின் முகாமையாளராக கேமுகுந்தனும், அணியின் பயிற்சியாளர் திருமதி றூப சிங்கவும் உள்ளனர்.

(3-190)

## மல்லாகத்தில் முன்பள்ளி விழா

யாழ்ப்பாணம்,ஜூன்18

வடக்கு - கிழக்கு மாகாண முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத்தின் தெல்லிப்பளைப் பிரதேச மல்லாகக் குடும்ப முன்பள்ளிச் சிறார்களினதும் தெல்லிப்பளைக் குடும்ப முன்பள்ளிச் சிறார்களினதும் விளையாட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் மல்லாகம் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதமவிருந்தினர்களாக முன்னாள் வலி.வடக்கு பிரதேசசபைத் தலைவர் திருமதி பாலாம்பிகை பாஸ்கரனும், பனைதென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் தெல்லிப்பளை கிளைத் தலைவர் சி.கதிரமலையும் கலந்துகொள்வர்.

(3-203)

## விளையாட்டு

### அடுத்த மாதம் நடைபெறவுள்ள
# கொரிய மெய்வன்மைப் போட்டியில் ஒன்பது யாழ். வீரர்கள் பங்கேற்பர்!

யாழ்ப்பாணம்,ஜூன்18

கொரியாவில் அடுத்தமாதம் நடைபெறவிருக்கும் சர்வமதங்களுக்கிடையிலான மெய்வன்மைப் போட்டிகளில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த ஒன்பது வீரர்கள் பங்குபற்றவிருக்கின்றனர்.

கடந்த வருடமும் கொரியாவில் நடந்த சர்வமதங்களுக்கிடையிலான மெய்வன்மைப் போட்டிகளில் யாழ்.வீரர்கள் பங்குபற்றியிருந்தனர்.

அவர்களில் எஸ்.கமலமோகன் என்ற வீரர் உயரம் பாய்தல் போட்டியில் பங்குபற்றி 2.04 மீற்றரைத் தாண்டி இரண்டாம் இடத்தையும் -

எம்.சஞ்ஜீவ் என்ற வீரர் 110 மீற்றர் தடை தாண்டல் போட்டியில் பங்குபற்றி 15.4 செக்கனில் ஓடி இரண்டாம் இடத்தையும் - பெற்றனர்.

இருவரும் வெள்ளிப் பதக்கங்களை வென்றிருந்தனர்.

இம்முறை பங்குபற்றும் வீரர்களும் அவர்கள் கலந்துகொள்ளும் போட்டிகளும் வருமாறு:-

- ❖ எம்.சஞ்ஜீவ் - 110 மீற்றர் தடை தாண்டல்.
- ❖ எஸ்.கமலமோகன் - உயரம் பாய்தல்
- ❖ ஆர்.ராஜகாந்தன் - ஈட்டி எறிதல்
- ❖ எ.டியூறன் - 400 மீற்றர் ஓட்டம்
- ❖ ரி.கவிராஜ் - 5 ஆயிரம் மீற்றர் ஓட்டம்
- ❖ எ.சிறினிவாசன் - நீளம் பாய்தல்
- ❖ ரி.கஜந்தன் - 400 மீற்றர் ஓட்டம்
- ❖ கு.தர்சினி - குண்டு, தட்டு எறிதல்
- ❖ வி.கஜீத்தா - உயரம் பாய்தல்

(3-190)



வடக்கு - கிழக்கு விளையாட்டுத் திணைக்களத்தினால் யாழ்.மாவட்டத்திற்கு என யாழ்.பொதுவிளையாட்டு மைதானத்தில் அமைக்கப்பட்ட வலுவூட்டல் பயிற்சி நிலையம், ஒன்றரை வருடங்களாகியும் வேலைகள் பூர்த்தியடையாத நிலையில் காட்சி அளிக்கின்றது. (படம்:தமிழினியன்)

# கூட்டுச் சம்மேளனக் கால்பந்தில் ஜேர்மனி, ஆர்ஜென்ரீனா வெற்றி

கூட்டுச் சம்மேளனக் கிண்ணக் கால்பந்து போட்டியின் முதல்நாள் ஆட்டத்தில் ஜேர்மனி அணி ஆஸ்திரேலியாவையும், ஆர்ஜென்ரீனா அணி டுனிசியாவையும் வெற்றிகொண்டன.

கூட்டுச் சம்மேளனக் கால்பந்து போட்டி ஜேர்மனியில் உள்ள பிராங்போர்ட் நகரில் நடந்து வருகிறது.

இதில் உலகக் கிண்ணச் சம்பியன் பிரேசில், ஐரோப்பியச் சம்பியுன் கிரீஸ், ஆசியச் சம்பியன் ஜப்பான், மெக்சிக்கோ, ஆர்ஜென்ரீனா, ஜேர்மனி, டுனிசியா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகள் பங்கேற்றுவருகின்றன.

இதில் முதல் நாளில் நடந்த ஆட்டத்தில் முன்னாள் உலகச் சம்பியன் ஆர்ஜென்ரீனா அணி டுனிசியாவை எதிர்கொண்டது.

விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில் ஆர்ஜென்ரீனா 2-1 கோல் கணக்கில் டுனிசியாவை தோற்கடித்தது. ஆர்ஜென்ரீனா வீரர்கள் ஜுயன் 33 ஆவது நிமிடத்திலும், சேவியர் 57 ஆவது நிமிடத்திலும் கோல் அடித்தனர்.

மற்றொரு ஆட்டத்தில் அடுத்த ஆண்டு உலகக்கிண்ணப் போட்டியை நடத்தும் ஜேர்மனி, ஆஸ்திரேலிய அணியுடன் மோதியது.

இதில் ஜேர்மனி அணிக்கு கடும் சவாலாக ஆஸதிரேலியா விளங்கியது. இருப்பினும் உள்ளூர் ரசிகர்களின் ஆதரவுடன் ஜேர்மனி அணி 4-3 என்ற கோல் கணக்கில் போராடி வெற்றி பெற்றது. (க-3)

## கால்பந்து தரவரிசையில் பிரேஸில் அணி முதலிடம்

கால்பந்து தரவரிசைப் பட்டியலில் பிரேஸில் அணி தொடர்ந்து முதலிடத்தை தக்கவைத்துள்ளது. சர்வதேச கால்பந்து சம்மேளனம் புதிய தரவரிசைப் பட்டியலை நேற்றுமுன்தினம் வெளியிட்டது. இதில் பிரேஸில் அணி 829புள்ளிகளுடன் தொடர்ந்து முதலிடத்தில் இருந்து வருகிறது.

செக் குடியரசு (790புள்ளி) இரண்டாவது இடத்தையும் ஆர்ஜென்ரீனா (285புள்ளி) மூன்றாவது இடத்தையும் பெற்றுள்ளன. ஹொலண்ட் (783 புள்ளி) நான்காவது இடத்திற்கு முன்னேறியுள்ளது. தரவரிசையில் முதல் ஐந்து இடங்களைப் பிடித்த அணிகளின் விவரம் வருமாறு:-

பிரேஸில் (819புள்ளி), செக் குடியரசு (790 புள்ளி), ஆர்ஜென்ரீனா (785புள்ளி), ஹொலண்ட் (783புள்ளி), பிரான்ஸ் (765பள்ளி). (க-3)

### நாட்வெஸ்ட் முத்தரப்புத் தொடரில்
# இங்கிலாந்து அணிக்கு முதல் வெற்றி
## 10 விக்கெட்டுக்களால் பங்களாதேஷை வீழ்த்தியது



நாட்வெஸ்ட் முத்தரப்புத் தொடரில் இங்கிலாந்து - பங்களாதேஷ் அணிகளுக்கிடையே நேற்றுமுன்தினம் நடைபெற்ற முதலாவது ஒரு நாள் ஆட்டத்தில் இங்கிலாந்து அணி 10 விக்கெட்டுக்களால் வெற்றியடைந்தது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணித்தலைவர் வோகன் பங்களாதேஷை முதலில் துடுப்பெடுத்தாடுமாறு அழைத்தார். இதன்படி களமிறங்கிய அந்த அணி 45.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 190 ஓட்டங்களைப் பெற்றது.

அணியின் முன்வரிசைத் துடுப்பாட்ட வீரர்கள் வழமைபோல் மோசமாகவே விளையாடினர். ஓமர் (13), இக்பால் (19), அஷ்ரபுல் (0) ஆகியோர் லீவிஸின் பந்தில் மிக விரைவாக ஆட்டமிழந்தனர்.

பின்வந்த வீரர்களான பஷர் (19), துஷர் இம்ரான் (10) ஆகியோர் ஹார்மிஷன் பந்தில் வெளியேற 76 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்களை இழந்து பங்களாதேஷ் பரிதவித்தது.

எனினும் 7 ஆவது விக்கெட்டுக்காக ஜோடி சேர்ந்த அவ்தாப் அஹமது, ரபீக் ஆகியோர் சற்றுச் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி ஓட்டங்களைக் குவித்தனர். அவ்தாப் 51 ஓட்டங்களையும், ரபீக் 30 ஓட்டங்களையும் பெற்றனர். இவர்கள் வெளியேறியதும் கடைசிவரிசை விக்கெட்டுக்களும் மளமளவென விழ 190 ஓட்டங்களுக்கு அணியின் ஆட்டம் முடிந்தது.

பந்துவீச்சில் இங்கிலாந்து சார்பாக ஹார்மிஷன் 4 விக்கெட்டுக்களையும், லீவிஸ் 3 விக்கெட்டுக்களையும், கோவ் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

வெற்றி இலக்காக 191 ஓட்டங்களைப் பெறவேண்டும் என்ற நிலையில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 24.5 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 192 ஓட்டங்களைப் பெற்றது. எனவே, இந்த ஆட்டத்தில் இங்கிலாந்து 10 விக்கெட்டுகளால் இலகுவாக வெற்றியடைந்தது. இங்கிலாந்து சார்பாக திரஸ்கொதிக் ஆட்டமிழக்காமல் 100 ஓட்டங்களையும், ஸ்ட்ராவ்ஸ் 82 ஓட்டங்களையும் பெற்றனர்.

இந்த ஆட்டத்தின் ஆட்டநாயகனாக திரஸ்கொதிக் தெரிவுசெய்யப்பட்டார்.

(க-3)

### துடுப்பாட்ட மத்தியஸ்தர்களுக்கு பரீட்சை நாளை

வலி.வடக்கு,ஜூன்18

துடுப்பாட்ட மத்தியஸ்தர்களுக்கான பரீட்சை நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணம் துடுப்பாட்ட மத்தியஸ்தர் சங்கத்தினால் இப் பரீட்சைக்கு வேண்டிய சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3-86)

# ஆஸி. துடுப்பாட்ட வீரர் கில்கிறிஸ்க்கு பந்துவீச வீரர்கள் அதிகம் பயப்படுகின்றனர்

எந்தத் துடுப்பாட்ட வீரருக்கு பந்துவீசப் பயப்படுவீர்கள் என்ற கேள்விக்கு முன்னணிப் பந்துவீச்சாளர்களிடம் வாக்கெடுப்பு நடத்தியது 'விஸ்டன்' பத்திரிகை. இதில் அதிரடி வீரரான ஆஸ்திரேலியாவின் அடம் கில்கிறிஸ்ட் பந்துவீச்சாளர்களை பயமுறுத்தும் துடுப்பாட்ட வீரராக அதிக வாக்குகளைப் பெற்றுள்ளார்.

இந்திய வீரர் ஷேவாக் நான்காவது இடமும், சச்சின் ஆறாவது இடமும் பெற்றுள்ளனர்.

தனது பந்துவீச்சுப் பயம் குறித்து தென்னாபிரிக்க வேகப்பந்துவீச்சாளர் நித்தினி கூறுகையில்:-

"கில்கிறிஸ்ட்டுக்கு பந்து வீசும்போது மட்டும்தான் கொஞ்சம் கூடுதல் கவனம் எடுத்துக் கொள்வேன்" - என்கிறார்.

இதுவரை 209ஒருநாள் ஆட்டங்களில் விளையாடியுள்ள கில்கிறிஸ்ட் 6ஆயிரத்து 969 ஓட்டங்களைக் குவித்துள்ளார். இதில் 840 பவுண்டரிகளையும், 94 சிக்ஸர்களையும் விளாசியுள்ளார்.

இப்பட்டியலில் பிரைன் லாரா இரண்டாம் இடம்பெற்றுள்ளார். ஆஸ்திரேலியாவின் முன்னணிப் பந்துவீச்சாளர்களான கிலெஸ்பி, ஷேன் வொட்சன் ஆகியோர் இங்கிலாந்தின் பிலிங்டொவ்வைப் பார்த்தே தாம் பயப்படுகின்றனர் எனக் கூறியுள்ளனர்.

பந்துவீச்சாளர்கள் பயப்படும் முதல் பத்து துடுப்பாட்ட வீரர்களின் விவரம் வருமாறு:-

★கில்கிறிஸ்ட் (ஆஸி), ★லாரா (மே.இ. தீவுகள்), ★அப்ரிடி (பாகிஸ்தான்), ★ஷேவாக் (இந்தியா), ★பிலிங்டொவ் (இங்கிலாந்து) ★சச்சின் (இந்தியா), ★ஹெய்ன்ஸ் (நியூசிலாந்து) ★ஹெய்டன் (ஆஸி), ★ரசாக் (பாகிஸ்தான்),★பொன்ரிங் (ஆஸி). (க-3)

## தேவை

மார்க்பொன் கட்டட அலங்காரப் பொருள்கள் செய்யும் தொழிலகத்துக்கு விற்பனையாளருக்கு உதவியாளர் தேவை.

பெண்களும் ஆண்களும் விரும்பத்தக்கது. சாதாரணமாக ஆண்டு 8 படித்திருந்தால் போதுமானது.

வயதெல்லை தேவையில்லை.

தொடர்பு:
**மார்க்பொன்**
நீதிமன்ற வீதி, மல்லாகம்.
(36682) (18-17)

# கல்வியியற் கல்லூரியில் அடுத்த மாதம் மூன்று தினங்கள் இந்து மாநாடு

யாழ்ப்பாணம்,ஜுன்18

அகில இலங்கை இந்து மாமன்றப் பொன்விழாவை முன்னிட்டு யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியும் அகில இலங்கை இந்து மாமன்றமும் இணைந்து நடத்தும் இந்து மாநாடு அடுத்த மாதம் 15ஆம் திகதி தொடக்கம் மூன்று தினங்களுக்கு யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

'இலங்கையில் இந்துமதம்' என்ற தொனிப்பொருளில் நடைபெறவுள்ள இந்த மாநாட்டில் இலங்கையில் இந்து சமய வரலாறு, பண்பாடு, வழிபாடு, வாழ்வியல், மெய்யியல், விஞ்ஞானம், கலை, கல்வியியல் அடிப்படையில் ஆய்வுக்கட்டுரைகள் படிக்கப்பட்டு ஆராயப்படவுள்ளன.

யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர்களும் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த கல்விமான்களும், ஆய்வாளர்களும் இந்த மாநாட்டில் ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பிப்பர்.

யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி மற்றும் கோப்பாய் ஆசிரிய கலாசாலை ஆகியவற்றில் கற்கும் ஆசிரிய மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் ஆகியோரை மையமாகக் கொண்டு இம்மாநாடு நடத்தப்படும்.

இம்மாநாட்டில் பங்குபற்ற விரும்பும் பேராளர்களை எதிர்வரும் 27ஆம் திகதிக்கு முன் பதிவுசெய்து கொள்ளுமாறு அகில இலங்கை இந்து மாமன்றத்தினர் கேட்டுள்ளனா.

இந்த மாநாடு தொடர்பான பத்திரிகையாளர்கள் சந்திப்பு நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (எ-203)

## SRI LANKA RED CROSS SOCIETY JAFFNA DISTRICT

# VACANCY FOR SUPPORT STAFF

- Drivers-02
- Administrative Officer-01

### DUTIES APPLICABLE TO ALL

1. Work towards the achievement of Sri Lankan Red Cross goals through relations and teamwork.
2. Ensure understanding of roles, responsibilities, lateral relationships and accountabilities.
3. Perform other work related duties and responsibilities as may be assigned by the supervisor.

### Specific Duties for Driver

1. To drive the assigned vehicle according to the Rules and Regulations for use of Federation vehicles.
2. To transport passengers and cargo safely and as instructed.
3. Ensure the ALL occupants (including driver) of the vehicle are wearing safety belts. Do not proceed with the vehicle until this is the case.
4. Accountable for the proper use and security of Federation vehicles and the equipment (jack, tools, etc.) assigned to the vehicle.
5. Performance of daily inspections according to the standard form for inspection for vehicles assigned or any other vehicles as instructed.
6. Understand and obey all traffic laws and regulations.
7. Compliance with working hours as regulated. Drivers are recommended to work in accordance with the operational needs of the operation.
8. At all times be in possession of a valid driving license and make sure that the license is renewed when necessary.
9. Advise the Car Dispatchers of needed service and maintenance of the assigned vehicle 3 days in advance.
10. In support of the (Driver) Watsan Delegate, and with appropriate authorization, execute the purchase of appropriate supplies and arrange delivery in a timely manner.
11. Assisting in any other duties that may be assigned.

### Specific Duties for Administrative Officer

1. Responsible for administrative tasks and duties within the Office.
2. Reception and dispatching of all incoming and outgoing documents, letters, messages, etc. for the office.
3. Typing and appropriate filing of all documents and correspondence.
4. Send/receive faxes.
5. Photocopying and production of bound reports for distribution.
6. Record all income, code to appropriate funding source.
7. Make timely payment for bills (ie household accounts)
8. Ensure an adequate supply of office materials (paper, pens, ink cartridges etc) and procure as necessary.
9. Make arrangement for meetings and workshops.
10. Preparation of Requisitions for the Office and follow up on the status of purchase in cooperation with the Office Manager.
11. Preparation of weekly reports in co-operation with Driver concerning mileage, fuel, consumption and service schedules of vehicles.
12. Send a monthly pouch to Colombo office, including keeping fnll records of pouch contents.
13. Receive visitors to the office in a polite and helpful way.
14. Assisting in any other duties that may be assigned.

**Application should be sent under registered cover to reach on or before 27th June 2005.to:**

**Branch Executive Officer,
Sri Lanka Red Cross Society,
Jaffna District Branch,
No.73, Kandy Road, Jaffna.**

(C/43516) (24)

## 29ஆவது பிறந்தநாள் நினைவும்
### 175 ஆம் நாள் நினைவலைகளும்

மலர்வு 18 ~ 06 ~ 1976



உதிர்வு 26 ~ 12 ~ 2004

திருமதி **ஜெயசுதன் சிவமதி** (மதி)
(சட்டவாளர், மாவட்ட மேல்முறையீட்டு சிறப்பமர்வு நீதிமன்றம், கிளிநொச்சி)

இனியவளே! இன்று உன் உதயநாள்
இனிய வாழ்த்துக்கள் கூறி இதயம் மகிழ நீயில்லை
சொல்லியழ வார்த்தையின்றிச் சோகம் மிகுந்து
சோர்ந்து துவண்டுவிட்டோம் நாமெல்லாம்.

எழுந்த தோற்றமும் எல்லையில்லா அன்புங்கொண்டு
ஏற்றமுடன் எம்மை அணைத்திட்ட உத்தமியே - உன்மகவு
சொந்தமாய் ஒரு வார்த்தை எழுதுமுன்னே
சோகமாய் மகிழ்வின் அத்தியாயமே முடிந்துவிட்டதம்மா.

பாசச்சுமையோடு பறந்துசென்ற உத்தமியே!
பார்க்குமிடமெங்கும் உன் பாசமுகம் தோன்றப்
பரிதவித்துத் துடிக்கும் எம்மைப் பார்க்க மறந்ததேனோ?
பாரினிலே ஏனிந்தக் கதியெமக்கு எப்படித் தாங்கிடுவோம்?

உற்றாரும் உறவினரும் உருகித் துடிதுடிக்க
உறவுகளைத் தவிக்கவிட்டு உத்தமியே எங்கு சென்றாய்?
புனிதநாளாம் இன்று புண்ணியம்மை பரமனடியில்
பூவை நீ அமைதி பெறக் கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகிறோம்.

உடுத்துறை வடக்கு,
தாளையடி.
(36687)(18-17)
குடும்பத்தினர்.

Jayoda **ஜயோதா** ජයෝදා

## உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 7048030 முதல் 7060620 வரை
சீட்டிழுப்பு இல. 142 திகதி 16-6-2005

வெற்றி எண்கள் **5 1 7 2 2 9** சுப்பர் எண் **18**

### சுப்பர் ஜக்பொட் பரிசு 2,83,24,625/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 2,83,24,625/- | - |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 6 எண்கள் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 10 | 50,000/- | 5,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 111 | 5,000/- | 5,55,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,096 | 500/- | 5,48,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 10,941 | 50/- | 5,47,050/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 1 எண் | 108,445 | 10/- | 10,84,450/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 12 | 5,000/- | 60,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 110 | 1,000/- | 1,10,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,086 | 100/- | 1,08,600/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 10,848 | 20/- | 2,16,960/- |
| மொத்தம் | 1,32,668 | | 53,32,660/- |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூபா. 53,32,660/-

இந்த திங்கட்கிழமை
சுப்பர் ஜக்பொட்
ரூ. **2,86,28,900/-**

தொடர் இல. 6108233 க்கு மேற்பட்ட மஞ்சள் நிற டிக்கட்டுக்கள் 2005 ஜுன் 20 ஆம் திகதி திங்கட்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, செண்ட் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

ரூபா 75,325/- பெறுமதியான ஸ்கூட்டி மோட்டார் சைக்கிள்களை வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

7057022-5-11
7050361-8-85
7051922-7-00
7055596-4-43
7056529-8-63
7056284-8-11
7051598-0-11
7051094-6-98

# கச்சதீவை இந்தியா மீண்டும் கைப்பற்ற சேதுசமுத்திரத் திட்டம் வாய்ப்பளிக்கும்!

## கலாநிதி சூசை ஆனந்தன் எச்சரிக்கை

யாழ்ப்பாணம்,ஜூன்18

கச்சதீவை இந்தியா ஆக்கிரமிப்பதற்கு சேது சமுத்திரத் திட்டம் வாய்ப்பளிக்கும்.

- இவ்வாறு எச்சரித்துள்ளார் யாழ்.பல்கலைக்கழக புவியியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சூசை ஆனந்தன்.

சேதுசமுத்திரத் திட்டத்தினால் தமிழ் மீனவர்களுக்கு ஏற்படப்போகும் ஆபத்துக்கள் தொடர்பாகக் கருத்து வெளியிட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சேதுசமுத்திரத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான தீவிர நடவடிக்கையில் இந்தியா தற்போது ஈடுபட்டுள்ளது. ஆயினும், இத்திட்டத்தினால் இலங்கையின் வடபகுதி மீனவர்களுக்கு ஏற்படப்போகும் பாதிப்புகள் தொடர்பாக இந்திய அரசு சிறிதளவேனும் சிந்திக்கவில்லை.

சேதுகால்வாய் இலங்கை - இந்தியக் கடல் எல்லையின் ஓரமாக - தலைமன்னாருக்குச் சமீபமாகவும் கச்சதீவுக்கு மிக அண்மையாகவும் வெட்டப்படவுள்ளது. இதனால், எமது பகுதியில் காணப்படும் கடல் வளம் அழிவடையக்கூடிய அபாயம் உள்ளது.

அத்துடன், சேதுகால்வாயூடான கப்பல் போக்குவரத்து ஆரம்பிக்கப்படும் பட்சத்தில் கச்சதீவை தமிழ்நாட்டு அரசு இலங்கை அரசிடமிருந்து நிரந்தர குத்தகைக்குப் பெற்றுக் கொள்ளக்கூடிய சாத்தியங்களும் அதிகம் உள்ளன. சேதுகால்வாய்த் திட்டத்திற்கு எதிர்ப்பு எதனையும் காட்டாத இலங்கை அரசு கச்சதீவை இந்தியாவுக்குக் குத்தகைக்கு வழங்கப் பின்னிற்காது என்றே கருத வேண்டியுள்ளது.

• எனவே, கச்சதீவைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கையை எமது பகுதி மீனவர் சங்கங்களும் அரச அதிகாரிகளும் இணைந்து மேற்கொள்ள வேண்டிய சூழ்நிலை இப்போது தோன்றியுள்ளது. கச்சதீவை மீன்வள ஆய்வு மையம், சுற்றுலா மையம் ஆகியவற்றைக் கொண்ட ஒரு தேசிய கடற்பூங்காவாக மாற்றுவதே சிறந்த வழி. இதன் மூலம் கச்சதீவு பாதுகாக்கப்படும். அத்துடன், வருமானமும் கிடைக்கும். ஆகவே, சம்பந்தப்பட்ட தரப்புகள் இதற்கான நடவடிக்கைகளை உடன் ஆரம்பிக்கவேண்டும்.

அத்துடன் சேது சமுத்திரத் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளதால் எமது மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள். எனவே, அவர்களுக்கான நஷ்டஈடுகளை வழங்குவதற்கோ அல்லது மாற்றுவழிகளைச் சொல்வதற்கோ இலங்கை, இந்திய அரசுகள் இதுவரை முன்வரவில்லை. ஆகவே, எமது தமிழ் மீனவர்களும் மக்களும் மிகவும் விழிப்புடன் இருக்கவேண்டும்.

சேதுசமுத்திரத் திட்டம் அமுலானால் இந்திய மீனவர்கள் இலங்கைக் கடலில் அத்துமீறி மீன்பிடிக்கும் சந்தர்ப்பங்களும் அதிகரிக்கும் என்றார்.

(ஒ-8)

## உணவகங்களின் உரிமையாளர்களுக்கு

குருநகர்,ஜூன்18

யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட உணவகங்களில் சுகாதாரத்தினை மேம்படுத்தும் நோக்குடன் யாழ்.மாநகரசபையின் எல்லைக்குட்பட்ட சகல உணவு கையாளும் வர்த்தக நிறுவனங்களின் உரிமையாளர்களுடனான கலந்துரையாடலொன்று நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு, நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது என யாழ்.மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாஸ் அறிவித்துள்ளார்.

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் இயங்கும் சகல உணவு கையாளும் வர்த்தக நிறுவனங்களின் உரிமையாளர்களையும் தவறாது இக் கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு அவர் அழைத்துள்ளார்.

(ஒ-51)

## மரண அறிவித்தல்

### தங்கராசா சிறிஸ்கந்தராசா



யாழ்.வடமராட்சி கிழக்கு அம்பன், குடத்தனையை வசிப்பிடமாகக் கொண்ட தங்கராசா சிறிஸ்கந்தராசா 14.06.2005 செவ்வாய்க்கிழமை சுவிஸில் அகால மரணமானார்.

அன்னார் தங்கராசா - இராசமணி தம்பதிகளின் அன்பு மகனும் தயாநிதி, கலாநிதி (ஆசிரியை, குடத்தனை, தென்னிந்தியத் திருச்சபை), சிறிஸ்கந்தகுமார் (லண்டன்), ஜெயாநிதி (ஆசிரியை விநாயகர் முன்பள்ளி, அம்பன்), சிறிஸ்கந்தவேல், சிறிஸ்காந்தா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சிவநேசன் (தபாலகம், பருத்தித்துறை) அன்பு மைத்துனரும் பவதாரணி (யா/ அம்பன் அ.மி.த.க. பாடசாலை), நிதுஜன், றோஜி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சுவிஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(36697)(29-11-45)

தகவல்:
மு.நகுலராசா (மாமா)
உரிமையாளர், நகுலேஸ்வரி அரைக்கும் ஆலை, அம்பன்,
நகுலேஸ்வரி தொலைத்தொடர்பகம், அம்பன்,
ராஜன் ஹாட் வெயர் பருத்தித்துறை.

*அம்பன்,*
*குடத்தனை,*
*வடமராட்சி கிழக்கு.*

## மரண அறிவித்தல்

### திருமதி அந்தோனிப்பிள்ளை றோசலின் மரியம்மா

பலாலியைப் பிறப்பிடமாகவும் இந்தியாவை வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை றோசலின் மரியம்மா 16.06.2005 சென்னையில் காலமானார்.

அன்னார் பிரான்சிஸ் யோசவ் - சிசிலியா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும் செபஸ்ரியன், மொனிக்காறீசா, அவலின் பௌதினார், மாசில் அன்டொயினட், புவுஸ்ரின் வேதாகந்தம், வெனிற்கு டொன்பஸ்கா, அதிவண.லொசிந்ரன் O.M.I. அடிகளார், றொபினா ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் K.K.நகர் சென்னையில் உள்ள மகள் மாசில் இல்லத்தில் வைக்கப்பட்டுள்ளது. நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(36698)(29-11-45)

*215, ஆஸ்பத்திரி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
அ.செபஸ்ரியன்(அன்ரன்).


**படிவங்கள்**

- தேர்தற் திணைக்கள அலுவலர் பதவி (ஆண்கள் மட்டும்) கல்வித் தகைமை க.பொ.த.(உ.த.)
- போக்குவரத்து அமைச்சு - பட்டதாரிகள் திட்டம்.
- புனர்வாழ்வு அமைச்சு - பட்டதாரிகள் திட்டம்

**இந்தியாவில் படியுங்கள்**

2005 உயர்தரப் பரீட்சைக்குப் பிறகு பெறுபேறுகளை எதிர்பார்ப்பவர்கள்.

**பிருந்தாவன் கல்லூரி**

முன்னர் தேசிய முதல் தரக் கல்லூரி
பெங்களூர் பல்கலைக்கழகம்
இந்தியா
பட்டப்படிப்பு பாடநெறிகள்
B.Sc. உயிரியல் தொழில்நுட்பம்
B.Sc. மரபியல்
B.Sc. நுண் உயிரியல்
B.Sc. கணனி விஞ்ஞானம்
B.B.M. தொழில் முகாமைத்துவம்
B.C.A. கணனிப் பிரயோகம்

**பட்டப்பின்படிப்பு பாடநெறிகள்**

M.Sc., M.B.A., M.C.A.

2005 ஓகஸ்டில் பாடநெறிகள் ஆரம்பம்

- ★ 42 தேசியத்தவர்களுடன் கற்றல்.
- ★ 250 இலங்கையர்களுடன் கற்றல்.
- ★ 350 இலங்கை மாணவர்கள் பெங்களூர் பல்கலைக்கழக கல்லூரியில் கற்று ஏற்கனவே பட்டங்களைப் பெற்றுள்ளனர்.
- ★ தவணை முறையான கட்டணத் திட்டம் உண்டு.
- ★ 2005 உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றுபவர்கள் பெறுபேறுகளை எதிர்பார்க்கும் நிலையில் இட ஒதுக்கல் பெறலாம்.
- ★ இட ஒதுக்கல் கட்டணம் US $ 400.

வெப்சைட்டில் பாருங்கள்.
www.brindavan College com.
E-mail அனுப்புக.
Inquiry @brindavan college com.
Unifo@brindavan college com.

COMPANY SECRETARIAL SERVICES (PVT) LTD.
No. 285C 1/1, Stanley Tillakaratne MW Nugegoda.
011 285 4438
0777 317043

# புதுக்கடை திறப்பு விழா அழைப்பு

நிகழும் மங்களகரமான பார்த்திப வருடம்
ஆனி 4 ஆம் நாள் (18.06.2005)
சனிக்கிழமை காலை 6.24 மணி முதல் 8.22
மணி வரையுள்ள சுபமுகூர்த்தவேளையில்
எம்மால் புதிதாக ஆரம்பிக்கப்படும்

# நெய்தல் கணனிசேவை

எனும் புதிய ஸ்தாபனம் யாழ்.பல்கலைக்
கழக மக்கள் வங்கிக்கிளை
முகாமையாளர் N.நாகேஸ்வரன்
அவர்களால் திறந்துவைக்கப்படவுள்ளதால் -
அன்பர்கள், நண்பர்கள் அனைவரும்
இவ்வைபவத்தில் பங்குகொண்டு
சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.



(சி-43522)(29-11-45)

II, முதலாம் மாடி,
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

021 - 222 6938

நிர்வாகத்தினர்.

**நாகம்ஸ் சினிமா சுன்னாகம்**

சரத்குமார், அறிமுகம் ரமேஸ், பூஜா நடித்த ஜித்தன் (றீகல்)
காட்சிகள: 11.00. 3.00 (பி.நே.)
22 முதல் கற்க கசடற

**ராஜா யாழ்ப்பாணம்**

ரஜனிகாந்த், பிரபு, ஜோதிகா, நயன்தாரா, வடிவேல் நடித்த
சந்திரமுகி (றீகல்)
காட்சி நேரம்: 10.30,2.30, 6.30, 9.30 (பி.நே.)

**நாதன்ஸ் சினிமா** ஆஸ்பத்திரி முன்பாக யாழ்ப்பாணம்.

"இன்டி பெண்டன்ஸ் டே" டைரக்டர்
ரோலண்ட் எம்ரீச் மீண்டும்
முத்திரை பதிக்கும் படைப்பில்!
கா.நே.: 10.30, 2.30, 6.30, 9.30. (பி.நே.)
THE DAY AFTER TOMORROW
நாளை மறுநாள் (தமிழாக்கம்)
சுனாமி போன்ற அழிவுகளைச் சித்திரிக்கும்.
பாடசாலை ஊடாக வரும் மாணவர்களுக்கு விசேட சலுகை வழங்கப்படும்.

**மனோகரா யாழ்ப்பாணம்**

மிகப்பிரமாண்டமான வெளியீடு இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
'சீயான்' விக்ரம், சதா, பிரகாஷ்ராஜ், விவேக், சார்லி நடித்த
அந்நியன்
காட்சி நேரம்:
10.30 a.m.,
2.30.p.m. 6.30 p.m.,
9.30 p.m.
(விசேட காட்சிகளும் உண்டு)

**COMPUTER EXPRESS**
**Sales & Repair Center**
இல. 15, சிறாம்பியடி வீதி,
யாழ்ப்பாணம்.(off Stanly Rd.)
Te.no 0777-222422 077-3151647

யாழ்மக்களிற்கு
COMPUTER EXPRESS நிறுவனத்தின்
மற்றுமொரு உன்னத சேவை!.
Computer Sales and Repairs
மிகக் குறைந்தவிலையில் நீங்களும் ஒரு
கணனிக்கு சொந்தக்காராகுங்கள்
Pentium II
Pentium III } 15000/=இல் இருந்து
Pentium IV கணனிகள் 2வருட
உத்தரவாதத்துடன் 42000/=இல் இருந்து..
அனைத்து கணனி உதிரிப்பாகங்களும் 100%
உத்தரவாதத்துடன் Colombo விலையில்
பெற்றுக்கொள்ளலாம்.

# சட்டவிரோத மணல் அகழ்வு

கோண்டாவில்,ஜூன்18

செம்மணிக்குளத்தின் வாய்க்கால்கள், வாய்க்கால் அணைக்கட்டுக்களில் இருந்து சட்ட விரோதமான முறையில் மணல் அகழும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

இதனால், மழைகாலங்களில் வாய்க்கால்களினூடாகச் செல்லும் வெள்ளநீர் விவசாய நிலங்களுக்குள் புகுந்து பயிரழிவை ஏற்படுத்தும் அபாயநிலை ஏற்பட்டுள்ளது எனச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இது விடயத்தில் உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும் என அப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நியாப் திட்டம் மூலம் இந்தக் குளம் மற்றும் வாய்க்கால்கள் அண்மையில் புனரமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(எ-48)

## ஓவியப்போட்டி

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு யாழ் மாநகர சபையினரால்கடந்த மூன்றாம் திகதி நடத்தப்பட்ட ஓவியப் போட்டியில் சமுகமளிக்கத் தவறியவர்களுக்கான போட்டி எதிர்வரும் 23ஆம் திகதி 1030 மணிக்கு யாழ் மாநகர சபை கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். பாடசாலை அதிபர்களின் வேண்டுகோளுக்கு இணங்கியே மீண்டும் இப்போட்டி நடத்தப்படுவதாக யாழ். மாநகரசபை பிரதேச சுற்றாடல் அதிகாரி ந.சூரியராஜா தெரிவித்தார். (ஒ-ரி)

## கேணல் பானு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களப்புக்குத் திரும்பியது.

காலை 8.30 மணியளவில் கிளிநொச்சியிலிருந்து விமானப் படையினரின் ஹெலி மூலம் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் வழித்துணையுடன் இவர்கள் புறப்பட்டுச் சென்றனர்.

விடுதலைப் புலிகளின் தலைமையுடன் கலந்துரையாடுவதற்காக சுமார் ஒரு மாதத்தின் முன்னர் வன்னிவந்த கேணல் பானு தனது கட்டளைப் பகுதிக்குத் திரும்ப அரசு ஹெலி வசதி வழங்காத காரணத்தால் வன்னியல் தங்கியிருந்தார்.

இதேபோன்று வன்னியில் தங்கியிருந்த புலிகளின் திருகோணமலை மாவட்ட தளபதி கேணல் சொர்ணம் கடந்த புதன்கிழமை தனது கட்டளைப் பதிக்குத் திரும்பியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-3)

## பொதுக்கட்டமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அகில இலங்கை ஜம் இய்யத்துல் உலமா சபையின் புத்தளம் கிளைத் தலைவர் அஷ்-ஷேய்க் அப்துல்லா மஹ்மூத் ஆலிம் போராட்டத்திற்குத் தலைமை தாங்கினார். புத்தளம் பெரிய பள்ளிவாசல் பிரதம நம்பிக்கையாளர் எஸ்.ஆர்.எம்.முஸம்மில், புத்தளம் நகரசபை உறுப்பினர் வை.எம்.நிஸ்த்தார் ஆகியோரும், மூவினங்களையும் சேர்ந்த மக்களும் இதில் கலந்துகொண்டனர்.

உடப்பு மற்றும் புத்தளம் வாழ் மக்களும் இப்போராட்டத்தில் கலந்துகொண்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட முஸ்லிம்கள், பொதுக்கட்டமைப்பில் தமக்கு சம அந்தஸ்து தரப்பட வேண்டும் என்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளையும் தாங்கியிருந்தனர். (க)

# மின் தடை குறித்து அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்18

இலங்கை மின்சார சபையின் யாழ்.பிரதேச அலுவலகத்தினரால் பராமரிப்பு வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளதால் இன்று சனிக்கிழமை கீழ்க் குறிப்பிடப்பட்ட இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என இலங்கை மின்சார சபையின் பிரதேச மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், காரைநகர் ஆகிய இடங்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(எ-204)

## அரசை விட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜே.எம்.லொக்குபண்டாரவிற்கு கடிதமொன்றை எழுதியிருந்த ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ, ஜே.வி.பியின் அனைத்து உறுப்பினர்களுக்கும் எதிர்கட்சியில் அமர்வதற்கான வாய்ப்பு ஏற்படுத்தப்படவேண்டும் எனக் கோரியிருந்தார்.

ஆனால், அது சாத்தியமில்லாத காரணத்தினால் ஆளுங்கட்சி தரப்பு பின்வரிசையில் ஜே.வி.பியின் பாதி உறுப்பினர்களை அமரச் செய்வதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## ஹெல்கிஸன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் தலைமையிலான குழுவைச் சந்தித்துக் கலந்துரையாடுவார்.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களின் நிவாரண மற்றும் மீள்கட்டுமானத்துக்கான பணிகள் குறித்தும் -

அரசு - புலிகள் இடையிலான சமாதான முயற்சிகளை மீள ஆரம்பிக்கும் வாய்ப்புக் குறித்தும் - இச்சந்திப்பில் ஆராயப்படவிருக்கின்றது.

இச்சந்திப்பையடுத்து பிரதி அமைச்சர் விடார் ஹெல்கிஸன், ஜனாதிபதி உட்பட முக்கிய அரசியல் தலைவர்களுடன் கொழும்பில் பேச்சுக்களை நடத்தவிருக்கின்றார். (ஒ-3)

## தமிழ்க் கூட்டமைப்பினர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுக்கட்டமைப்பு இணக்கம் தொடர்பாக விடுதலைப் புலிகளிடம் சமர்ப்பித்து இணக்கம் காணப்பட்ட மூல யோசனைகளில் ஏதேனும் மாற்றங்களை அரசுத் தரப்புச் செய்து அதன் காரணமாக உடன்பாடு ஏற்படுவதில் வீண் கால தாமதம் உருவாகாமல் பார்த்துக் கொள்ளும்படி தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்கள் நோர்வேத் தூதுவரிடம் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டனர்.

தனது தென்னிலங்கை அரசியல் போக்குகளுக்கு ஏற்றபடி இந்த யோசனைத் திட்டத்தில் தான் விரும்பிய மாற்றங்களை இலங்கை அரசுத் தரப்பு செய்யுமானால் இணக்க நிலையில் குழப்பம் வரும் என்பதையும் தமிழ்க் கூட்டமைப்பினர் நோர்வேத் தூதுவரிடம் எடுத்துரைத்தனர் எனத் தெரிகின்றது.

ஒரு சில தினங்களுக்கு முன்னர் தமிழ்த தேசியக் கூட்டமைப்பின் வெளிவிவகாரக் குழு கிளி நொச்சிக்குச் சென்று புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை சந்தித்திருந்தது.

பொதுக்கட்டமைப்பு தொடர்பாக புலிகள் கொண்டுள்ள நிலைப்பாடு குறித்து தாங்கள் அப்போது அறிந்துவந்த விடயங்களை நேற்றைய சந்திப்பின்போது தமிழ்க் கூட்டமைப்பினர் நோர்வே அனுசரணைக்குழு பிரதிநிதியான நோர்வேத் தூதுவருடன் பரிமாறிக் கொண்டனர்.

பொதுக்கட்டமைப்பு ஏற்பாட்டுக்காக தமது அரசுக் கூட்டமைப்பிலிருந்து பிரதான பங்காளிக் கட்சியானஜே.வி.பியைத் துறப்பதற்குக் கூட ஜனாதிபதியும், அவரது அரசும் தயங்காமல உறுதியாக நின்றமை குறித்தும் இச்சந்திப்பில் பிரஸ்தாபிக்கபட்டதாகத் தெரிகிறது. இதற்குப் பின்னரும் சம்பந்தப்பட்ட ஒப்பந்தத்தில் கைச்சாத்திடாமல் சுணங்குவதும், இழுத்தடிப்பதும் அர்த்தமில்லாதது என்றும் -

இணக்கம் காணப்பட்ட வாசகங்களின் அடிப்படையில் ஒப்பந்தம் விரைந்து செய்யப்பட வேண்டும் என்றும் -

சந்திப்பில் மேலும் வலியுறுத்தப்பட்டதாக அறியவந்தது. (க)

# புத்தர் சிலையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லாளர் எல்.ஏ.கீர்த்தி என்பவர் தாக்கல் செய்த மனுவின் மீதே இந்த உத்தரவு நேற்று பிறப்பிக்கப்பட்டது.

திருகோணமலை பிரதிப் பொலீஸ் அத்தியட்சகர், திருகோணமலை பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி, மாவட்டச் செயலாளர், நகராட்சி மன்றச் செயலாளர் ஆகியோர் இந்த மனுவில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

மேற்படி சிலையைத் தற்காலிகமாக அகற்றுமாறு திருகோணமலை நீதிமன்றம் விடுத்த இடைக்கால உத்தரவு அரசமைப்பில் பௌதத மதத்துக்குக் கொடுத்துள்ள அதிஉயர் நிலையையும் மத சுதந்திரத்தையும் பாதிக்கும் -தவறான - சட்ட விரோதமான - நடவடிக்கை என்றும் -

அதனால் அந்த உத்தரவுக்கு எதிராக உடனடியாக இடைக்காலத் தடை பிறப்பிக்கும்படியும் -

அந்த உத்தரவை இரத்துச் செய்து பணிப்புரை விடுக்குமாறும் -

மனுதாரர் தமது மனுவில் கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்த மனுவை விசாரணைக்கு ஏற்றுக் கொண்ட மேன்முறையீட்டு நீதிமன்றம் மேற்படி நீதிவான் நீதிமன்ற உத்தரவுக்கு எதிர்வரும் 30 ஆம் திகதி வரை - இரண்டு வாரகாலத்துக்கு - இடைக்காலத் தடை விதித்து கட்டளை பிறப்பித்தது.

பிரதிவாதிகளை எதிர்வரும் 29 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு நோட்டீஸ் பிறப்பிக்கவும் பணிப்புரை விடுத்தது.

இதேசமயம் மேற்படி புத்தர்சிலை அமைக்கப்பட்ட இடத்தில் மேலதிக கட்டுமானப் பணி ஏதும் நடக்கக்கூடாது என திருகோணமலை மாவட்ட நீதிமன்றம் விடுத்த இடைக்கால உத்தரவு தொடர்ந்தும் நடைமுறையில் உள்ளது. அதற்கு எதிராக எந்த மேனிலை நீதிமன்ற உத்தரவுகளும் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (க)

## இஸ்லாமுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னர் முஸ்லிம் சமய கலாசார விவகாரங்கள் திணைக்களமும், அதன் விடயங்களும் தொழிற்பாடும் நேரடியாக ஜனாதிபதியின் கட்டுப்பாட்டின் கீழ் இருநதது. அதனையே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனி அமைச்சின் கீழ்கொண்டு வநதுள்ளார். முஸ்லிம் சமய, கலாசார விவகாரங்கள் தொர்டர்பாக செயற்றிட்டங்களையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் நடைமுறைப்படுத்தல், கணகாணித்தல் என்பன இனிப் புதிய அமைச்சால் நிர்வகிக்கப்படவுள்ளன. இதன் அமைச்சர் யார் என அறிவிக்கப்படவில்லை.

# மாற்று அரசு அமைப்பது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சி ஜனாதிபதிக்கு வழங்கியிருந்தது. ஆனால் தனது முடிவில் உறுதியாக இருந்த ஜனாதிபதி, ஜே.வி.பி.யின் கோரிக்கையை நிராகரித்து விட்டார்.

இதனை அடுத்து ஜே.வி.பி. அரசிலிருந்து வெளியேறியது. தம்மை அலட்சியப்படுத்தி, அரசிலிருந்து வெளியேற்றிய ஜனாதிபதியின் செயற்பாடு குறித்து ஜே.வி.பியினர் கடும் அதிருப்தியும் விசனமும் அடைந்துள்ளனர்.

தாம் இந்த நிலைக்கு வரக் காரணமான ஜனாதிபதிக்குச் சரியான பாடம் புகட்டும் வண்ணம், சுதந்திரக் கூட்டமைப்பு அரசைக் கவிழ்த்து மாற்று அரசு ஒன்றை அமைப்பதில் அவர்கள் அதிக அக்கறையும் ஆர்வமும் காட்டுகின்றனர்.

இதற்காக எந்தக் கட்சியுடனும் கூட்டுச் சேர அவர்கள் தயாராக இருக்கின்றனர். நாட்டின் இறைமையைப் பாதுகாக்கும் விடயத்தில் இணைந்து செயற்பட முன்வரும் எந்தக் கட்சியுடனும் கூட்டுச் சேர்வதற்குத் தாம் தயார் என்று அரசிலிருந்து தமது கட்சி வெளியேறுகின்றது என்ற அறிவிப்பை வெளியிட்டு செய்தியாளர்கள் மத்தியில் பேசிய ஜே.வி.பி. தலைவர் சோமவன்ஸ அமரசிங்க தெரிவித்திருந்தார்.

அந்த வகையில் மாற்று அரசு ஒன்றை அமைப்பதற்கான கூட்டணி ஒன்றை உருவாக்குவதில் ஜே.வி.பி. இப்போது தீவிர முனைப்புக் காட்டுகின்றது. நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்களுடன் இது தொடர்பாக ரகசியப் பேச்சுக்களை நடத்துவதற்கும் அக்கட்சி முடிவு செய்துள்ளது.

இதற்கமைய ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்காவுடன் முதற்கட்ட சந்திப்புக்கு ஜே.வீ.பி. முடிவுசெய்துள்ளது.

இதற்காக ஐ.தே.க. தலைவர் ரணிலைச் சந்தித்துப் பேசவும். அது அனுமதி கேட்டுள்ளது. தற்போதைய அரசியல் சூழ்நிலைப் பின்னணியில் இந்தச் சந்திப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (க)


COMPUTER COURSES

A/L 2005 பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களே !

உங்கள் பெறுபேறுகள் வரையான பொன்னான காலப்பகுதியை IIS நிறுவனத்துடன் இணைந்து கொள்வதன் மூலம் பயனுள்ளதாக்கிக் கொள்ளுங்கள். IIS நிறுவனம் தனது 10th ஆண்டு சிறப்புச் சலுகையாக இப்பிரிவுக்கு மட்டும் மிகக் குறைந்த கட்டணத்தில் கற்கை நெறிகளை வழங்கத் தீர்மானித்துள்ளது. IIS உடன் இணைந்துகொள்ளும் இவ் அரிய சந்தர்ப்பத்தினைத் தவற விடாதீர்கள்.

மேலதிகவிபரங்களுக்கு 23.06.2005 பத்திரிகையை எதிர்பாருங்கள்.

இயக்குநர்,

IIS , யாழ்ப்பாணம்.



S.R.ரமேஸ

A/L- 2006

ஐரோப்பிய நாடக வரலாறு

ஆரம்பம்:- 18.06.2005 Sat. 2 p.m.

விக்னா கல்வி நிறுவனம்

பிரிவு II

A/L- 2007

தமிழ்-திரு. குழந்தை

ஆரம்பமாகிவிட்டது!

சனி, ஞாயிறு 7.30



இதய அடைப்பு நோய் குணமாக வேண்டுமா?

இதய அடைப்பு நோய்க்காக வாழ்நாள் முழுவதும் சிகிச்சை பெறவேண்டியதில்லை. எங்களுடைய ஆயுர்வேத மருத்துவம் மூலம் அதனைச் சில வாரங்களில் குணமாக்கலாம். இதய அடைப்புத் தொடர்பான சிகிச்சைகளை நாங்கள் உரியமுறையில், குறைந்த செலவில் வழங்குகிறோம்.

விவரங்களுக்கு:

FAIR PHARMA (PVT) LTD

(MANUFACTURERS OF AYURVEDIC MEDICINES)

Level 5/ East Tower/1C, WORLD TRADE CENTER, COLOMBO - 01,

Phone: 5517897, 5551879, Fax: 5517756

E-mail: fppvtl@lankabellnet.com Website:www.fppvtl.org

A BOI Approved & ISo 9001 : 2000 Qms Cetified Company.



INFORMATION TECHNOLOGY PARK

Jaffna, Sri Lanka.

Under the purview of the

Ministry of Agricultural Marketing Development, Co-operative Development, Hindu Affairs and Assisting Education and Vocational Training.

MPCS Building, 127, K.K.S.Road, Jaffna, SriLanka.

Office : 021 222 3641

Fax No : 021 222 3643

அரச நிறுவனமான தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் கீழ்வரும் கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பப் படிவங்களை யாழ்.பிரதம தபாலகத்திற்கு முன்னால் உள்ள எமது நிறுவனத்தில் இன்று முதல் பெற்றுக் கொள்ளலாம்.

Diploma Courses

* Dip.in MS-Office
* Dip.in Desktop Publishing
* Dip.in Hardware Technology
* Dip.in Computer Programming

Certificate Courses

* MS-Word * MS-Access * MS-Excel
* PageMaker * CorelDRAW * AutoCAD
* VisualBasic * Java * Oracle

Workshops

* PC Maintenance & Repairs
* Typesetting & Graphic Designing

On-Line Classes

* Dip.in PC Application & Office Management

(அரச, தனியார் உத்தியோகத்தருக்கென பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்டது)

வார நாள் வகுப்புக்கள் ஆரம்பம - 15-07-05

வார இறுதி நாள் வகுப்புக்கள் ஆரம்பம் - 16-07-05

சகல கற்கை நெறிகளுக்குமான பதிவுக் கட்டணம் : 250/-

Centre for Information Technology

-Executive Officer


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18.06.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.